REGD No. 3384 | TAMIL MANI | PHONE No 3249

தமிழ் மணி

வாரப்பதிப்பு

RAJA PUBLICITIES
ADVTG. & BUSINESS AGENTS.
SAROJINI VILAS
WORIUR P.O. TRICHINOPOLY.

மணி 13. | சென்னை, ஞாயிற்றுக்கிழமை (1-2-1948) | ஓசை 13.

மகாத்மா மறைந்தார்

வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்குமேல் பிரார்த்தனைக் கூட்டத்தில் மகாத்மா காந்தி கூட்டத்திலிருந்த யாரோ ஒருவனால் நான்குமுறை துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்தார்.

ஓர் கற்பனை உரையாடல்

உண்மை உலவுகிறது!

துப்பறிவோன்

உரையாடுவோர்: சேரன், ஞானசம்பந்தன் என்னும் பள்ளி மாணவர்கள் இருவர்.

இடம்: சென்னை பீப்பிள்ஸ் பார்க், எஸ். ஐ. ஐ. ஏ. மைதானத்துக் கருகில்.

நேரம்: 1947-ம் ஆண்டு ஜனவரிமீ 31௳ சனிக்கிழமை மாலை 2 மணி. அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்த அகில தமிழர் மகாநாட டுக் கோட்டகையில் உள்ளும் புறமும் ஒலிபெருக்கிக் கருவிகள் தமிழ்க் கீதங்களை ஒலிபரப்பிக்கொண்டிருக்கும் வேளை.

ஞானசம்பந்தன்: டேய் சேரா, நீ எங்கே வந்தாய்?

சேரன்: நீ எங்கே வந்தாயோ அங்குதான் நானும் வந்தேன்.

ஞான: இங்கு நமது மகாநாடு நடைப்பெறபோகிறது. இதைப் பார்க்க வந்தேன்.

சேரன்: நமது மகாநாடா?

ஞான: ஆம், அகில தமிழர் மகாநாடு. இது உனக்குத் தெரியாதா?

சேரன்: ஓ! அப்படிச் சொல்: அகில தமிழர் மகாநாடா! நன்று!! நானும அப்படித்தான கேள்விப்பட்டேன்.

ஞான; நீயும் மகாநாட்டுக்குத் தானே வந்தாய்?

சேரன்: தமிழர் என்ற பெயரிலே நடைபெறும் மகாநாடுகளில் நான் கலந்துகொள்ளாமலிருந்த துண்டா? நான் யார் என்பதைக் கூட மறந்துவிட்டாயோ?

ஞான: ஓ; நீ சேரன் செங்குட்டவனல்லவா!

சேரன்: உம், ஞாபகமிருக்கட்டும்; சேரன் செங்குட்டவன் கலந்துகொள்ளாத தமிழர் கூட்டம் அசல் தமிழர் கூட்டமல்ல. ஞானப்பால் உண்ட ஞானசம்பந்தனுகிய உனக்கு ஏன் தெரியாமற்போயிற்று?

ஞான: அடேயப்பா! உன்னுடன் பேச என்னுல் முடியாதப்பா. மகாநாட்டுக் கொட்டகைக்குள் போகப்போகிறேன், நீ வருகிருயா இல்லையா?

சேரன்: நான் வராமல் நீ மட்டும் போய்விடுவாயோ? நில்; நானும் வருகிறேன். நாமிருவரும்தான் இந்த மகாநாட்டு நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்கவேண்டும்.

ஞான: சேரா, நீமட்டும் உன் புத்தியை விடமாட்டாய். நீ சொல்லுவதைப்பார்த்தால் இந்த மகாநாட்டைப்பற்றியே உனக்கு நல்ல அபிப்பிராயம் கிடையாது என்றல்லவா நினைக்கவேண்டியிருக்கிறது.

சேரன்: ஆம்; நல்ல அபிப்பிராம் கிடையாதுதான். எப்படி நல்ல அபிப்பிராயம் இருக்கமுடியும்?

ஞான: ஏன்?

சேரன்: தமிழர் நலத்துக்குப் புறம்பாக வேலைசெய்யும் சில போலித்தமிழர்களும் இம் மகாநாட்டில் கலந்துகொள்ளுகிருர்கள். அதனுல்தான் நான் இம் மகாநாட்டை சந்தேகிக்கிறேன்.

ஞான: சேரா' இதென்ன நீபேசுவதெல்லாம் வேடிக்கையாக இருக்கிறதே. எதெற்கெடுத்தாலும் சந்தேகமா? நமது தமிழ் தலைவர்கள் பலர்கூடுகின்ற இந்தக் கூட்டத்தைக்கூடவா நாம சந்தேகிப்பது.

சேரன்: ஞானசம்பந்தா, இத்தனைநாள் உனக்கும் ஞானத்துக்கும் சம்பந்தம் உண்டு என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.

அந்த நினைப்பு இப்பொழுது மாறிவிட்டது. நமது தலைவர் எல்லோரும் கூடுவதைக் கண்டு நீ மயங்கிவிட்டாய். தலைவர்கள் கூடியிருக்கிருர்கள் என்று நினைக்காதே. அவர்கள் கூட்டப்பட்டிருக்கிருர்கள். ஏன் கூட்டப்பட்டார்கள், எதற்காகக் கூட்டப்பட்டார்கள் என்பது அவர்களுக்கே தெரியாது. தனித் தனியே தலைவர்கள் ஒவ்வொருவரும் தமிழ், தமிழர், தமிழ்நாடு என்ற ஆர்வத்தில் ஏதாவதுபேசலாமென்ற எண்ணத்தோடு வந்து கூடுகிருர்கள். ஆனுல் மகாநாட்டின் உட்கருத்து என்ன என்பது அவர்களுக்கேத் தெரியாது. அதுமட்டுமல்ல, நான் சந்தேகப்படுவதுபோலவே இந்தத் தலைவர்கள்பலர் சந்தேகப்பட்டுக்கொண்டிருக்கிருர்கள. ஆனுல் நான் இங்கு நிற்கிறேன்; அவர்கள் மேடைமீது அமர்ந்திருக்கிருர்கள். இவ்வளவுதான் எனக்கும், அவர்களுக்குமுள்ள வித்தியாசம். நீ அவர்களைக் குறித்து மகிழ்ச்சியடைகிருய். நான் பரிதாபப்படுகிறேன்' இதுதான் உனக்கும், எனக்கும் உள்ளவித்தியாசம்.

ஞான: அப்படியானுல் இவ்வளவு பொருட்செலவில், விளமபரத்துடனும்,-ஆடம்பா ஆரவாரமாக இந்த மகாநடட்ானை நடத்துவதால் யாருக்கு என்ன லாபம்!

சேரன்: பொருட் செலவு, விளம்பரம், ஆடம்பரம், ஆரவாரப் இத்தனையும் இந்தமகாநாட்டில் இருக்கின்றன என்று நீயே சொல்லிவிட்டாய், எனவே உன்னுடையகேள்வியிலேயே அதற்குப்விடையும் அடங்கிவிட்டது, தரித்திர நாரயணன்களாக வாழும்தமிழர்களைக் கூட்டுவதற்கு இவ்வளவு ஆர்ப்பட்டங்கள் தேவையேயில்லை. இவையெல்லாம் ஊராரை ஏமாற்ற ஒருசில ஐந்தாம்படைத் தமிழர்கள் செய்யும் சூழ்ச்சி. அதற்குப் பக்கபலமாகச்சில பணமூட்டைகள் தகளும் இருந்துகொண்டு வேலை செய்கிருர்கள். அதனுல்தான் இந்தமகாநாட்டுக்கு இவ்வளவு விளம்பரம். இதென்ன சினிமாவா, நாடகமா? ஆம்; என்கருத்துப்படி நாடகம் தான். உம். நடக்கட்டும்.

ஞான: சரி, நேரமாசிறது நீவருகிருயா இல்லையா!

சேரன்: பொறு; வருகிறேன்; வரத்தான் போகிறேன்; வரத் தானேவேண்டும்.

ஞான; ஆம். ஆம் நீசேரன் செங்குட்டவனல்லவா! வீரத்தமிழன் அல்லவா? தமிழரின் வீரத்தை விளக்க இன்று அந்தசேரன் செங்குட்டவன் இல்லாவிட்டாலும் நீயாவது வந்து சேர்ந்தாயே...ஆனுல் ஒன்று, அப்பா சேரா அன்று அந்த சேரன் சேங்குட்டவன் வடநாட்டுக்குப் போய் கண்ணகி சிலை செய்ய யாரோ ஒரு மன்னர் தலையில் கல்லேற்றிக் கொண்டு வந்தானே, அப்படிப்பட்ட வேலையில் இறங்கிவிடாதே! அப்படிப்பட்டவர்கள்யாரும் இங்குஇல்லை. இருப்பவர்களெல்லாம நம்மவர்தான்.

சேரன்: அஹ்ஹஹ்ஹஹா! (சிரித்திக் கொண்டே) நன்ருகசசொன்னுய்! நானும் அந்த சேரன் செங்குட்டவனின் பிரதிநிதியாகத் தான் இந்தமகாநாட்டுக்கு வருகிறேன். வா, போகலாம். போய் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டு நம்முடைய அடுத்த நடவடிக்கை என்ன என்பது பற்றி யோசிப்போம்.

(இருவரும் மகாநாட்டுக் கொட்கைக்குள் போகின்றனர்)

வெளிவந்து விட்டது!

“நவீனம்”

(நாவல் மாத வெளியீடு)

திரு. நாகை. N. பாலசுப்பிரமணியம் எழுதிய

உதய சங்கரன்

அல்லது

அமராவதி இளவரசன்

என்னும் அரிய துப்பறியும் நாவல் ஆரம்பமாகிறது.

	உள் நாடு	வெளி நாடு
தனிப்பிரதி	அணு 4	அணு 5
ஆண்டு சந்தா	ரூ. 3	ரூ. 4

எல்லா ஊர்களிலும் முன் பணம் கட்டக்கூடிய ஏஜன்டுகள் தேவை.

மாதிரிப் பிரதி வேண்டுவோர் 5 அணு ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

மானேஜர் “நவீனம்”

வேப்பேரி * சென்னை.

நற்சாக்ஷி

3 வேளையில் குழிப்புண் ஆறிவிட்டது

கனம் தங்கிய வைத்தியர் அய்யா அவர்களுக்கு.

எனது சகலை கோயமுத்தூரிலிருந்து வந்து தங்களிடம் மருந்து சாப்பிட்டார். 10 வருஷமாக எவ்வளவோ மருந்துகள் சாப்பிட்டும் ஊசிகள் போட்டும் தீராமலிருந்த குழிப்புண்கள், தினம் 20 தடவை நீர் போகுதல் கால் வீக்கம் யாவும் 3 வேளையில் ஆச்சர்யப் படும்படியான முறையில் சுகமாகிவிட்டது. நடக்க முடியாமலும் மதமதப்பாகவும் இருந்த, கால்களில் சுரணை ஏற்பட்டு, நடக்க முடிகிறது. முதுகு பூராவும் லேசாக எரிகிறதாகச் சொன்னுர்.

இம் மருந்தின் பெருமையை என் வாயால், புகழுவதற்கில்லை. இதற்கு நிகரான மருந்தே, இல்லையென உறுதியாய்க் கூறுகிறேன்.

(ஒப்பம்) G. கிருஷ்ண ராவ், ஹெட் போஸ்டுமேன், பழனி

வெளி நாட்டு வாசிகள் தபால் செலவு ரூ. 1-8-0. சேர்த்து முன்பணம் அனுப்பவும்.

பரிசைக்கும், பலனுக்கும், உத்திரவாதமானது.

குஷ்ட நிவாரணி

45 வருஷ அனுபவமானது.

எவ்வித மருந்திலும் தீராத 18 வகைகுஷ்டமும், செம்மேகப்பற்று கருமேகம், தடிப்பு, அரிப்பு, மதமதப்பு விஷக்கடி, குழிப்புண்கள் எல்லாம் 6 வேளை மருந்தில் தீருகிறது. 50 வேளை ரூ 10.

வைத்தியபதி R.M. நாராயணசாமி.
தன்வந்திரி வைத்தியசாலை, பழனி.

போலிகளைக் கண்டு ஏமாருதீர்கள்

48 ஆண்டுகள் பிரசித்தி பெற்ற

ஸ்ரீ அம்பாள்

நெ. 1 பட்டணம் பொடியை உபயோகித்து ஆனந்தமடையுங்கள். காரம், மணம், குணத்தில் இணையற்றது.

ஸ்ரீ அம்பாள் & கோ

தபால் பெட்டி நெ. 3. மதராஸ்.

ஐ. நா. வில் ஜபருல்லாவின் வாய்விச்சு!
பிரஞ்சுப் பிரதிநிதியின் 3 நிபந்தனைகள்?
அமெரிக்காவில் அப்துல்லாவின் கர்ஜனை!

"பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது" என்ற ஒரு பழமொழி சொல்லப்படுவதுண்டு. இந்த அரிய பழமொழிக் கேற்றவாறே, காந்திஜீ, தம் உண்ணுவிரதத்தை நிறுத்த இந்தியத் தலைவர்களுக்கு விதித்த 7 நிபந்தனைகளும் முடிந்தன என்று சொல்லுதல் மிகையாகாது. காந்திஜீ தம் உண்ணுவிரதத்தை நிறுத்துவதற்காக விதித்திருக்கும் 7 நிபந்தனைகளும் மிகக்குறையான நிபந்தனைகளென்றும், அந்த நிபந்தனைகள் யாவும் முஸ்லிம்களுக்கு ஆதரவாகவும், அதே சமயத்தில் மற்ற சமூகத்தாரின் தன்மானத்தைப் பாதிக்கக் கூடியதாகவும் இருக்கின்றனவென்றும், மேலும் இந்த 7 நிபந்தனைகளும் அயல்நாடுகளில் விபரீத மனப்பான்மையை கிளறி விடக்கூடும் என்றும் கடந்த இதழில் நாம் குறிப்பிட்டிருந்தோம். நாம் குறிப்பிட்டதற்கு எற்றவாறே அயல்நாடுகளில் மனமாற்றத்தை உண்டாக்கியிருக்கிறது. மைனுரிட்டி முஸ்லிம்களின் பூரண நன்மைக்காகவே அந்த நிபந்தனைகளை காந்திஜீ விதித்தார் என்பது இந்நாட்டு மக்களுக்கு, சிறப்பாக முஸ்லிமகளுக்கு நன்குதெரியும். ஆனால், அயல்நாட்டு வாசிகளுக்கு காந்தஜீயின் அந்தரங்க மனப்பான்மையும், இந்திய சர்க்காரின் கண்ணியமான ஆட்சிமுறையும் எப்படித்தெரியும்?

ஜபருல்லா வாய்வீச்சு!

அண்டப் புளுகுகள், ஆகாயப் புளுகுகள் புளுகுவதில் கைதேர்ந்தவர்கள் லீகர், என்பதை கடந்த பல ஆண்டுகளாக நாம் அனுபவத்தில் கண்டுவருகிறோம். ஆயினும், பாகிஸ்தான் அயல்நாட்டு மந்திரியும், காஷ்மீர் பிரச்னையைத் தீர்ப்பதற்காக பாகிஸ்தான் சார்பில் ஐக்கிய நாடுகள் சபைக்குச் சென்றிருப்பவருமான சர். ஜபருல்லாகான், லீகர் கூட்டத்தின் தலைவருள் ஒருவர் என்ற காரணத்தால், அத்தகைய பச்சைப்புளுகுகள் புளுகுவதில் எவருக்கும் சளைத்தவரல்ல என்பதை ஐ. நா. கௌன்ஸிலில் அவர் பேசியிருக்கும் பேச்சுக்களிலிருந்து நாம் நன்கு தெரிந்துகொள்ளலாம். காஷ்மீரில் நடைபெறும் கொள்ளை, தீயிடுதல், அட்டூழியம் முதலிய அடாச்செயல்களுக்கு காஷ்மீர் சுதந்திர சேனையே காரணம் என்று குறிப்பிட்டிருக்கிறார். அவர் வாதப்படியே நாமும் வருவோம் அப்படியானால், இந்தியாவில் நடைபெற்ற வகுப்புக்கலவரங்களுக்கு எந்த சுதந்திரச்சேனை முனைந்து வேலை செய்தது என்பதை சர். ஜபருல்லா குறிப்பிடுவாரா? பாகிஸ்தான் பிடாரிகள் செய்யும் அட்டூழியங்களை அடியோடு மறைக்க, இத்தகைய பொய்ப் பிரசாரங்கள் நடத்துவது மனிதத் தன்மைக்கே முற்றிலும் மாறுபட்டதென்றே கருதவேண்டியதாகிறது. பாகிஸ்தான் குண்டர்களே காஷ்மீர் கலவரத்துக்குக் காரணம் என்பதைக் கண்கூடாகக் கண்டிருந்தும், சர். ஜபருல்லா முழுப்பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கும் வேலையை மேற்கொண்டிருப்பது அடாத செயல் என்றுதான் சொல்லவேண்டும். காஷ்மீரில் ஒரு சுதந்திர சேனை இருப்பதாக நமக்குத் தகவல் கிடைக்கவில்லை. ஷேக் அப்துல்லாவின் தலைமையில் தான் காஷ்மீரிகள் சுதந்திரப் போராட்டம் நடத்துவதாக நமக்குத் தெரியவருகிறது. ஆனால், காந்திஜீயைப் பின்பற்றும் ஷேக் அப்துல்லா போன்ற அஹிம்ஸா மூர்த்திகள், ஜபருல்லாவின் கூற்றுப்படி அடாச்செயல்களிலீடுபட்டிருக்கிருர்கள் என்று யாரும் கருத முடியாது.

ஷேக் அப்துல்லாவைப் பின்பற்றும் காஷ்மீர் காங்கிரஸ் வாதிகள், இந்த அட்டூழியங்களுக்குக் காரணமாக இருந்தால், இந்திய யூனியனை சார்பாக ஷேக் அப்துல்லா தீவிர முயற்சி செய்துக்கொண்டிருக்கும் போது, அவரைப் பின்பற்றும் தேசியவாதிகள் இந்திய யூனியன் படைகளுக்கு விரோதமாக புரட்சியை உண்டுபண்ணுவார்களா? இதை ஆராய்ந்து பாராமல காஷ்மீர் சுதந்திரச் சேனையே அட்டூழியங்களுக்குக் காரணம் என்று அவர் எப்படிச் சொல்லலாம்? மேலும், இந்தியப் படைகள் வாபஸானுலொழிய சண்டை நிற்காது என்று அவர் கூறும் வார்த்தை கேலிக்கிடமாகின்றது. இந்திய யூனியனில சம்பந்தப்பட்ட காஷ்மீர் பிரதேசத்தில் இந்தியப்படைகள் இருப்பது தவறு? சர். ஜபருல்லா தான்கற்ற தந்திர, மந்திர, மகேந்திர ஜாலவித்தைகளையெல்லாம் காட்டி பொய்யும் புரட்டும்கூறி ஐ. நா. சபையில் பேசியிருப்பதுகண்டு சிரிக்கத்தான் வேண்டுமென்று தோன்றுகிறது. அவர் சிந்தித்துப் பேசியிருந்தால், இம்மாதிரி வாயிற்கு வந்தபடி நேர்மையான ஒரு சர்க்காரின்மேல் வசைமாரி பொழிந்திருக்கமாட்டார். ஆனால், ஜபருல்லா வசைமாரி பொழிகிறார் என்பதை ஐ. நா. கௌன்ஸிலில மெம்பர்கள் நன்கு அறிந்திருக்கலாம் என்றே கருதவேண்டியிருக்கிறது. அவரது வாய்வீச்சுக்களுக்கு முற்றுப்புள்ளியிடவேண்டிய தருணமும் நெருங்கிக்கொண்டுதானிருக்கிறது. அதற்குள் அவரே அதை நிறுத்திக்கொள்வது சாலச் சிறந்தது என நேரே எடுத்துக்கூறுகிறோம்

ஆதாரமற்ற அனுமானம்?

"பாக்கிஸ்தான் காந்திஜீக்கு மிகவும் கடமைபட்டிருக்கிறது. உபவாசத்தை நிறுத்த அவர் என்ன நிபந்தனைகள் விதித்தார் என்பதைக் கொண்டே, டில்லியில் முஸ்லிம்கள் எவ்வாறு நடத்தப் படுகிறார்கள் என்பதை நாம் அனுமானித்துக் கொள்ளலாம்."

என்று ஜபருல்லா ஐ. நா. வில் முறையிட்டிருக்கிறார். காந்திஜீ கண்ணிய மனப் பான்மையுடன் விதித்த 7 நிபந்தனைகள், ஜபருல்லாவின் பொய்யும் புரட்டும் கலந்த வசைமாரிக்கு ஆதரவாக இருக்கின்றன. இதை நாம் முன்பே எதிர்ப்பார்த்ததுதான். எதிர்ப்பார்த்துத்தான் அந்நியநாடுகளில் காந்திஜீயின் கடுமையான நிபந்தனைகள் விபரீதத்தை உண்டாக்கும் என்று கடந்த இதழில் குறிப்பிட்டிருந்தோம். செதல்வாட் குறிப்பிட்ட படி வகுப்புவாத வெறி கொண்ட முஸ்லிம்களின் துவேஷத் தொல்லைகளே வகுப்புப் பூசலுக்குக் காரணம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெரிகிறது. அங்ஙனமிருக்க, இந்து மதமே வகுப்புப் பூசலுக்கு அடிப்படை என்றும், இந்து மதம் முஸ்லிம்களை ஒவ்வொரு துறையிலும் தலையெடுக்கவொட்டாமல் செய்ததென்றும் குறிப்பிடுவது எத்தகைய அபாண்டமான பழி என்பதை வாசகர்களே நன்குணரவேண்டும். இன்னும் லீகைக் கட்டிக் கொண்டு அழும் இஸ்மாயில் போன்றவர்கள்; ஜபருல்லாவின் பொய் கூற்றுக்கு என்ன பதில் சொல்வார்கள் என்பது தெரியவில்லை. நிற்க; காந்திஜீயின் நிபந்தனைகளைச் சான்றாகக் காட்டி அனுமானிப்பது வெறுக்கத்தக்க விஷயமானதுடன், ஆதாரமற்றது என்றும் குறிப்பிட வேண்டிய அவசியம் மேற்படுகிறது. காந்திஜீயின் கண்ணியமான நிபந்தனைகளைக் கொண்டு ஜபருல்லா ஆதாரமில்லாமல் அனுமானிப்பது மைனுரிட்டி முஸ்லிம்களின் வாயில் மண் போடுவதற்கே ஒப்பாகும் என்பதை அவர் உணர்வாரா?

சிக்கலான பிரச்னை?

ஐ. நா. கௌன்ஸிலிடம் அகப்பட்டுக் கொண்டிருக்கும் காஷ்மீர் பிரச்னை இன்று படாத பாடுபட்டு வருவதைக் காண்கின்றோம். இதற்குக் காரணம் பாகிஸ்தானிகளின் நியாயமான ஒத்துழைப்பு இல்லாததேயாகும். ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்று சொல்லுவார்கள். இதுதான் வெள்ளையர் இந்தியாவில் கையாண்டு வந்த கபட நாடகம் இதை பொதுமக்கள் நன்கறிவார்கள். பிரித்தாளும் மனப்பான்மை கொண்ட வெள்ளையர் ஐ. நா. கௌன்ஸிலிலும் தம் பிரித்தாளும் கொள்கையையே பின் பற்றுவது சுத்த மடத்தனம் என்றே குறிப்பிட வேண்டும். காஷ்மீர பிரச்னை விஷயமாக அமெரிக்கப் பிரதிநிதியும், கானடா பிரதிநிதியும் சமரசத்திற்கு கூறும்வழிகள் வரவேற்கக் கூடியவையாகும். ஆனால், பிரெஞ்சுப் பிரதிநிதி 'கைடிலாடூர்னெல்' விஷம் கலந்து விவாதித்திருப்பது வெறுக்கத்தக்கதொன்றாகும். வெள்ளையரின், அதாவது. பிரிட்டீஷாரின் அடிவருடிப் பிழைக்கும் பிரெஞ்சுக்காரர் அவர்கள் சார்பாகத்தான் பேசுவார்களே யொழிய, இந்தியாவின் நலனில் பரஸ்பர நம்பிக்கையுடன் பேசவே மாட்டார்கள். பிரெஞ்சுப் பிரதிநிதியின் கூற்றைக் கீழே குறிப்பிடுகிறோம். படித்துப் பாருங்கள்.

காஷ்மீர் பிரச்னையைப் பெரிதாக்கி யுத்தத்தில் கொண்டு வந்து விடவேண்டும் என்ற எண்ணம் இரு சர்க்காருக்கும் இல்லையென்பது தெளிவாக விளங்கி விட்டது. நேச தேசக் கமிஷனின் முதற் கடமை பொது ஜனவாக்கெடுப்பது என்பதே என் அபிப்பிராயம். இந்த பொதுஜன வாக்கெடுப்பு வெற்றி கரமாக நடைபெற வேண்டுமானால், 3 நிபந்தனைகளை இரு சர்க்கார்களும் மேற் கொள்ளக் கடமைபட்டிருக்கின்றன. (1) அன்னிய துருப்புகள் வாபஸாக வேண்டும் (2) நாட்டை விட்டு ஓடியவர் மீண்டும் திருப்பி வந்து விடவேண்டும். (3) ஜனங்களை நிர்ப்பந்தம் செய்யாத ஒரு நடுநிலைமை சர்க்கார் ஏற்பட வேண்டும்.

பிரெஞ்சுப் பிரதிநிதி குறிப்பிட்டிருக்கும் மூன்று நிபந்தனைகளுள் முதலாவதும், மூன்ருவதும் இந்திய யூனியனை மறைமுகமாக பாதிப்பதாகும். காஷ்மீர் இந்தியாவுடன் சேர்ந்து விட்ட காரணத்தால் காஷ்மீரிலிருந்து இந்திய யூனியன் படைகள் வாபஸடையச் செய்வது இந்திய யூனியன் சர்க்காரை அவமதிப்பதாகத்தான் இருக்கிறது. அடுத்தபடி மூன்ருவது நிபந்தனை ஷேக் அப்துல்லாவைத் தாக்குவதாகும். ஷேக் அப்துல்லாவின் சர்க்காரே இன்று காஷ்மீரைப் பரிபாலித்து வருகிறது. காஷ்மீர சிங்கம் ஷேக் அப்துல்லாவுக்கு காஷ்மீர் சமஸ்தானத்தில் பெருத்த செல்வாக்குண்டு. அங்ஙனமிருக்க அவர் சர்க்காரை உதாசீனப் படுத்தி, வேறு ஒரு நடுநிலைமை சர்க்கார் ஏற்படவேண்டுமென்பது பிரிட்டிஷாருக்குக் கங்காணிவேலை செய்வதையே யொக்கும். இத்தகைய சிக்கல் நிலயிலிருப்பதால் அமெரிக்காவில் இந்திய' பாகிஸ்தான் பிரதிநிதிகள் கூட்டம் ரத்தாயிற்று என்று சொல்லப்படுகிறது. பாதுகாப்பு கௌன்ஸிலின் ஆதரவில் பொது ஜன வாக்கெடுப்பு முறையைப் பரிபூரணமாக அங்கீகரிக்கும் இந்தியயூனியன் சர்க்கார், நேர்மைக்கு இருப்பிடமான ஷேக் அப்துல்லாவின் சர்க்காரில் மாறுதல் உண்டுபண்ண ஒருபோதும் அது சம்மதியாது என்றே எடுத்துக் கூறுகிறோம். இனி அடுத்தவேலை பாக்கிஸ்தானிகளுடையது. காஷ்மீர் பிரச்னையைத் தலைமுழுகிவிட்டு நிர்வாகக் குலைவுடன் சீரழிந்துகிடக்கும் பாகிஸ்தானைப் பல துறையிலும் முன்னேற்றமடையச்செய்து இந்திய யூனியனுடன் நட்புறவோடு நடந்துக்கொள்ள வேண்டுமென்று, மூலையில் முடங்கிக் கிடக்கும் ஜனுப் ஜின்னுவுக்கும், சர். ஜபருல்லாவுக்கும், மற்ற பாகிஸ்தானிகளுக்கும் எச்சரிக்கின்றோம்.

அமெரிக்காவில் ஷேக். அப்துல்லாவின் கர்ஜனை!

அப்துல்லாவின் சாக்காரில மாற்றமுண்டாக்க வேண்டுமென்பது பாக்கிஸ்தானிகளின் அடிப்படையான எண்ணம். இதற்குப் பிரஞ்சுப் பிரதிநிதி அடிகோலினுராயினும், இந்தியப் பிரதிநிதிகள் இதை எற்க அறவே மறுத்துவிட்டனர். இச் சமயத்தில் ஐ. நா. சபைக்குச் சென்றிருக்கும் ஷேக் அப்துல்லா செய்திருக்கும் வீரகர்ஜனை அன்னிய நாட்டுப் பிரதிநிதிகளான ஐ. நா. சபை அங்கத்தினரின் சிந்தனைக்கு வேலை கொடுக்குமா என்பது எதிர்ப் பார்க்கப் படுகிறது. பாக்கிஸ்தானைக் கொடிய நஞ்சாகக் கருதியிருக்கும் அப்துல்லா, அச் சர்க்காருக்கு நாங்கள் எக்காரணத்தை முன்னிட்டும் அடிபணிய மாட்டோம் என்று ஆணித்தர

(அடுத்த பக்கம் பார்க்க)

சங்கநாதம் [முன் பக்கத் தொடர்ச்சி]

நிஜாம் மன்னரின் வீண் சண்டித்தனம்! சென்னையில் லார்ட் மௌண்ட் பேட்டன் தன்மானமற்ற தமிழருக்குச் சூடு...?

மாகக் குறிப்பிட்டிருக்கிறார். இந்தியாவின் உதவி இல்லாவிடில் காஷ்மீர் சீரழிந்து போகும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

‘‘உள்நாட்டு யுத்தத்தின் மூலமாகத்தான் உங்கள் நாடு உருவாயிற்று; அடிமைத்தனத்தையும், சுரண்டலையும் நீங்கள் எதிர்த்துப் போராடி இருக்கிறீர்கள். எனவே, எங்கள் கஷ்டங்கள் நீங்கள் நன்குணர்வீர்கள் என்றும், காஷ்மீர் விஷயத்தில் எங்களுக்கு நியாயம் கிடைக்கும் என்றும் நினைத்துத்தான் நான் இங்கு வந்திருக்கிறேன்’’

என்று காஷ்மீர சிங்கம் வீரகர்ஜனை செய்திருப்பது பாராட்டப் படவேண்டிய தொன்றாகும். ஆனால் சிங்கத்தின் எண்ணப்படி ஐ. நா. சபையில் நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கைக்கு இடமில்லை. ‘‘காஷ்மீரத்தில் இந்து-முஸ்லிம் என்ற பிரச்னையே கிடையாது; அது எங்கள் காதுக்கே புதியதாக இருக்கிறது’’ என்று அவர் குறிப்பிட்டிருப்பதை அமெரிக்கரும், மற்ற அயல் நாட்டுப் பிரதிநிதிகளும் உணர்வார்களா? பாக்கிஸ்தானிகள் காஷ்மீரிலும் இந்து-முஸ்லிம் பிரச்னையை கிளப்புகின்றனர். அவர்களின் மூளைக்கு இவரது பேச்சுகள் சரியான சவுக்கடி என்பதில் சந்தேகமில்லை. பாக்கிஸ்தானிகள் செய்த அட்டூழியங்களைப் பற்றியும், ஜின்னா கையாண்ட முறையற்ற செயலைப் பற்றியும் எடுத்துக் கூறி இந்தியா உதவி செய்யாதிருந்தால், காஷ்மீர் அழிந்துபட்டிருக்கும் என்று பேசினார். பாக்கிஸ்தானை நம்பி காஷ்மீர் இறங்குவது விளக்கை வைத்துக்கொண்டு கிணற்றில் விழுவதற்கு ஒப்பாகும், என்பதை பொதுமக்கள் உணர வேண்டும். துவக்கத்திலேயே, பொருளாதார முற்றுகையிட்டு காஷ்மீரிகளைப் பட்டினி கிடக்கச்செய்து படாதபாடு படுத்திய பாக்கிஸ்தான் கொடுங்கோலாட்சியில் சிக்கிவாட ஷேக் அப்துல்லாவும், அவரது சர்க்காரும், மன்னர் ஹரிசிங்கும் துளியும் சம்மதிக்கவில்லை. காஷ்மீர் நிலைமையை விளக்கிய பின்பும், ஐ. நா. அங்கத்தினர்கள் வாய் மூடிக்கொண்டிருப்பது, இனமக்களின் அந்தரங்கத் தந்திரமே காரணமாக இருக்கலாம். ஐ. நா வின் தீர்ப்பு ஒருதலைபட்சமாக இருந்தாலும், அதைத் தகர்த்தெறிந்து பாக்கிஸ்தானிடமிருந்து நாட்டை விடுதலை செய்ய ஷேக் அப்துல்லாவும், அவரது சகாக்களும் ஒரு சொட்டு ரத்தம் தங்கள் உடலிலிருக்கும் வரை உழைப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

நிஜாமின் சண்டித்தனம்?

குடிமக்களைத் தன் மக்கள் போல் கருத வேண்டிய ஒரு மன்னன், குடிகளுக்குத் தீங்கிழைக்கப் பட்டால் அது தனக்கேற்பட்ட தீங்கு என்று கருத வேண்டிய ஒரு மன்னன், மனம் போன போக்கில் இன்னும் சண்டித்தனம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்தால் அவர் மன்னர் பதவிக்கே சிறிதும் அருகதையற்றவர் என்றுதான் சொல்ல வேண்டியதாகிறது. ‘‘ஆற்றில் ஒருகால் சேற்றில் ஒருகால்’’ என்று சொல்லுவார்களே, அதைப் போலத்தான் இந்த அபூர்வ பிறவியான நிஜாம் மன்னர் இன்னும் விபரீதத்தை விலைக்கு வாங்கிய வண்ணம் இருக்கிறார். பலவழிகளிலும் இந்திய யூனியனுக்குக் கட்டுப்பட்டிருக்கும் ஒரு சமஸ்தானத்தை, பாக்கிஸ்தானுடன் இணைத்துவிட முடியும், என்று அவர் மனக்கோட்டை கட்டிக் கொண்டிருப்பது அவரது அறிராமைத்தனம் என்று தான் சொல்லவேண்டும். இந்திய யூனியனுக்கு விரோதமான செயல்களில் அவர் ஈடு பட்டிருப்பதை வாசகர்கள் நன்கறிவார்கள். யூனியனுக்கு விரோதமாக பாக்கிஸ்தானுக்கு யூனியன் சம்மதம் பெறாமல் 60 கோடி ரூபாய் கடன் கொடுத்தது இந்தியத் தலைவர்களுக்கிடையே பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது. முஸ்லிம் என்ற இன உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு பாக்கிஸ்தான் கொடுங்கோலாட்சியில் 100க்கு 80 வீதம் மெஜாரிட்டி முஸ்லிமல்லாத தம் சமஸ்தான மக்களை ஈடுபடச் செய்ய நினைப்பதை சண்டித்தனம் என்பதைத் தவிர வேறு என்னவென்றுசொல்லமுடியும்? நிற்க ஏகாதிபத்தியம் இந்திய சுதந்திர வீரர்களுக்குச் சரணாகதியான விஷயம் பகிரங்க ரகசியம். அங்ஙனமிருக்க, தம் அற்ப சொற்ப பலத்தால், ஜின்னாவின் ஆதாரத்தைக் கொண்டு, சமஸ்தான காங்கிரஸின் சுதந்திரக் கிளர்ச்சியை அடக்கிவிட நினைப்பது சாத்தியமாகுமா? ‘‘ஆடிக்காற்றில், அம்மியும், குழவியும் ஆகாயத்தில் பறக்கும் இலவசம் பஞ்சுக்கு எங்கே கதி’’ என்பது போல ஏகாதிபத்தியமேவெற்றிகரமாக இந்தியாவை விட்டு வாபஸான பிறகு, நிஜாம் போன்ற குட்டி சமஸ்தான ராஜாக்களின். நிலைமை என்ன முடிவையடையும் என்பதைப் பற்றி தெளிவாக்க வேண்டிய அவசியமில்லை. நிஜாம் மன்னர் மீண்டும் அடக்குமுறையைக் கொண்டு வருகிறார். இந்திய யூனியன் கொடியை உதாசீனப் படுத்துகிறார். சமஸ்தான காங்கிரஸின் போராட்டத்தை நசுக்க தீவிரமாக வேலை செய்கிறார். சமஸ்தான காங்கிரஸ் தலைவர் ராமானந்தரையும், மற்றும் பல தலைவரையும் சிறையில் வைத்திருக்கிறார். மாணவர்களுக்கும், பெண்களுக்கும் தடியடிப் பிரயோகம் இந்த சமஸ்தானத்தில் சர்வசாதாரணமாக நடைபெறுகிறது. இதேசமயத்தில் இந்திய யூனியன் தலைவர்கள் மீண்டும் நிஜாமுடன் விவாதம் நடத்த முற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மாகாண எல்லைப்புற மக்களுக்குச் சொல்லொணாத இடுக்கண்களை விளைவித்துவரும் நிஜாம் மன்னருடன் மீண்டும் விவாதம் நடத்த கே. எம். முன்ஷியும் முடிவு செய்திருப்பதைக்காண நமக்கு ஆச்சரியத்தையே உண்டு பண்ணுகிறது. கொட்டினால் தேள்; கொட்டாவிடில் பிள்ளைப்பூச்சி என்பதாக நிஜாம் நினைப்பது அவரது மதியீனத்தையே குறிக்கும். நிஜாம் மன்னரும், அவரது சமஸ்தானமும் நீடித்து ஒழுங்கான முறையிலிருக்க வேண்டுமென்றால், அவர் ராமனந்தர் தலைமையில் ஒரு பொறுப்புள்ள சர்க்காரை நியமிக்க முன்வரவேண்டும். நிஜாம் என்ன செய்யப்போகிறார், என்பதை நிதானித்துப் பார்ப்போம்.

சென்னையில் பேட்டன்

ஏகாதிபத்யத்தின் பிரதிநிதியாக இந்தியாவிலிருந்துவந்த பலகவர்னர்ஜெனரல்களுள் லார்ட் மௌவுண்ட்பேட்டன் பலவழிகளிலும் சிறந்தவர் என்பதை நாம் கண்கூடாகக் கண்டுவருகிறோம். இவரது சொல்லும், செயலும் ஒன்றாக இருந்ததே அவரது புகழுக்குகாரணமாகும். பேட்டன் கவர்னா ஜெனரல் பதவிக்கு வரும்போது ‘‘நானே இந்தியாவின் கடைசி வைசிராய்’’ என்று சொல்லியதை இச்சமயத்தில் வாசகர்களின் நினைவுக்குக் கொண்டுவருகிறோம். மன்னர் பரம்பரையில் உதித்த உத்தமன் என்பதையுணர்ந்து இவரது வாக்குக்கு மோசமிருக்காது என்று நாம் அப்பொழுதே குறிப்பிட்டிருந்தோம். வாழ்க பேட்டன் என்றும் வாழ்த்துகிறோம். நிற்க; பேட்டனின் புகழுக்குப் பிறிதொரு காரணமுமுண்டு. சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக பதவிபெறும் வாய்ப்பு இவருக்குக கிடைத்தது. இதனால் இவரை மக்கள் புகழ்ந்தனர். இந்தியத்தலைவர்களுடன் நெருங்கிப்பழகி இந்தியப் பிரச்னைகளைத் தீர்க்கமுயன்று வெற்றிபெற்றால். இவரது புகழ் சரித்திரத்தில் இடம் பெறவேண்டியதாகிவிட்டது. இத்தகைய புகழுக்குப் பாத்திரமான லார்டு மவுண்ட்பேட்டன் தன் சுற்றத்துடன் சென்னைக்கு விஜயம் செய்ததுகண்டு நாமும் மகிழ்ச்சியடைகிறோம. ஜனவரி மாதம் 27-ந்தேதி இவர் சென்னை வந்துசேர்ந்தார். சென்னை நகரசபையும், மந்திரிசபையும் இவருக்கு அமோக வரவேற்புகளும், விருந்துகளும் அளித்தன. சென்னை நகரசபை வரவேற்புக்கூட்டத்தில் பேட்டன் பேசிய,பேச்சுக்கள் சென்னைமாகாண மக்களிடையே மேலும் ஒற்றுமையை உண்டாக்ககூடியதாக இருப்பதுபற்றி நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

‘‘இதே தென்னாட்டில் நீங்கள் வகுப்புக் கலவரங்களைத் தவிர்த்துவிட்டதற்கு நீங்கள் பெருமைபட வேண்டும். சமாதானமும், சந்தோஷமும், ஒற்றுமையுணர்ச்சியும் ஏற்படுவதற்கு நீங்கள் செய்துகாட்டியுள்ள இந்த மாபெரும் உதாரணமானது, கடைசியாக இந்தியா முழுவதும் பரவும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. தென்னிந்தியா அகில இந்தியாவுக்கு ஒருவழிகாட்டி என்றே சோல்லவேண்டும்.’’

என்று பேட்டன் உணர்ச்சி ததும்ப பேசிய பேச்சுக்கள் மாகாண மக்களிடையே ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

கடந்த 26 வருடங்களுக்குமுன்பு, அதாவது 1921-22ல் தென் இந்தியாவுக்கு இவர் ஒருசமயம் விஜயம்செய்திருப்பதாகத் தெரிகிறது. இவரது அன்புமிக்க பேச்சில் மற்றொரு விசித்திரமென்னவென்றால் தமிழில் பேசியதுதான். சாரணர்கள் நடத்திய வரவேற்புக்கூட்டத்தில்தான் இவர் தமிழில் பேசியிருக்கிறார் ஆங்கில மோகத்தாலும, அன்னியமொழி மோகத்தாலும் அல்லலுறும் தமிழ்மக்களுக்கு அவரது தமிழ்ப் பேசசு நல்லப் புத்தி கற்பிக்கும் எனறே நம்புகிறோம். தமிழில் பேசவேண்டுமென்ற ஆர்வம் அவரைத் தூண்டிவிட்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. கொச்சையாகப் பேசியிருந்தாலும் அவரைப் பாராட்ட வேண்டியது நம கடமையாகும்.

‘‘அநேக ஆயிரம்பிள்ளைகளை பார்க்கரதுக்கு எனக்கு ரொம்ப சந்தோஸம், நீங்கல் எல்லாம் நன்றாக ஒன்றுசேர்ந்து தமாஸ் நடத்தினீர்கள். நீங்கல் ‘‘பாய்ஸ்கவுட்டுகளும், ‘‘கேர்ல் கெய்டுகளும்’’ ஒன்றுசேர்ந்து ஜனசமூகத்திற்குச் சேவைசெய்து வருவீர்களோன்று நான் நம்புகிறேன். உங்களுக்கு என் ஆசீர்வதம்’’

என்று பேட்டன் தமிழிலே பேசியிருக்கிறார். இத்தமிழ்ப் பேச்சை இவர் ஆங்கிலத்திலேயே எழுதி வாசித்ததாகத் தெரிகிறது. ஆங்கிலத்தில் எழுதி வாசித்திருந்தாலும், அவர் தமிழில் தமிழரிடையே பேசவேண்டுமென்ற அவரது உணர்ச்சியைப் பாராட்டுகிறோம். தமிழில் பேசுவது இழிவென்று கருதும் அறிவிலிகளுக்கு பேட்டனின் தமிழ்ப் பேச்சு நல்ல சாட்டையாகும் எனறே குறிப்பிட விரும்புகிறோம். சென்னைநகரில் தமிழர் அதிகம என்பதை உணர்ந்துதான் தமிழில் பேசியிருக்கிறார். ஆந்திரர் வாதப்படி சென்னையில ஆந்திரர் அதிகமாயிருந்தால் அவர் ஆந்திரத்தில் பேசியிருககலாம. இதிலிருந்து சென்னையில் தமிழரே அதிகம் எனபதும் சென்னை தமிழருக்கே உரியது என்பதும் வெள்ளிடைமலையாகும். பேட்டனுக்குத் தமிழர் சார்பில் அளிக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்கள் உரியதாகட்டும். சொல்லும் செயலும் ஒன்றுபட்ட மன்னர் பாம்பரையைச் சேர்ந்த பேட்டன் கூடிய விரைவில் கவர்னர் ஜெனரல் பதவியை விட்டு விலகி விடுவார் என்று தெரிகிறது. வெள்ளையர் என்ற காரணத்தால் விலக வேண்டியது அவசியந்தான். ஆயினும் அவர் செய்த சில நன்மைகளை நினைக்கும் போது, அவரை வெற்றிமாலையுடன் வழி கூட்டி அனுப்பவேண்டுமென்பதே என் அவா. வாழ்கபேட்டன் என வாழ்த்துகிறோம்.

LEPROSY ✦ LEUCODERMA

குஷ்டம் ○ வெண் குஷ்டம்.

இலவச பரீக்ஷை சிகிச்சை செய்யப்படும்

கடிதங்கள் உடனே கவனிக்கப்பட வேண்டுமானால் ஆங்கிலத்தில் எழுதுங்கள். தமிழில் எழுதப்படும் கடிதங்கள் புரிந்துகொள்ள முடியாது. அதனால் அவை திருப்பி அனுப்பப் படும்.

தமிழ், மலையாளம், உருது முதலிய பாஷைகளில் வெளியாகி இருக்கும் நற்சாட்சி பத்திரங்கள் முதலிய விவரங்களுக்கு எழுதிக்கொண்டால் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்,

ஆப்ரிக்காவிலிருந்து பீஜி வரையில் எங்கள் மருந்து ஏராளமாக உபயோகப்படுத்தப்படுகிறது.

REDDY & CO., (Regd)

GOPALAPURAM. E. G. Dt. TANUKU, M. S. M.

சிறுகதை

கடைசி பார்வை

P. A. தாஸ்

பட்டுக்கோட்டையிலிருந்து திருச்சிக்குப் போகவேண்டிய வேலையொன்று எனக்கு இருந்தது. பஸ்ஸில் தஞ்சை சென்றபிறகு ரயிலில் பிரயாணம் செய்யவேண்டும். காலை 6 மணியிலிருந்து முட்டிபோட்டு 9 மணி பஸ்ஸுக்கு டிக்கெட்கிடைத்தது. பகீரதப் பிரயத்தனம் செய்ததுபோல் ஆசுவாசப் படுத்திக்கொண்டு பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தேன். பஸ் கிளம்ப இன்னும் அரை மணிநேரம் இருந்தது. இது என்னடாது, . இன்னும் எவ்வளவு நேரம் இப்படி 'அஸ் உஸ்'ன்னுகிட்டு இருப்பது. கிளம்பினேனும் போனேனும் என்று இல்லையே. ஒரு நிமிஷம் போறது ஒரு ஒருவருடம் போலல்லவா இருக்கிறது என்று வாய்க்குள்ளே முணுகிக்கொண்டிருந்தேன். இந்த சமயத்தில் ஒரு ஜட்கா வண்டி வந்து பஸ்ஸின் முன்பு நின்றது. அதிலிருந்து இரண்டு பெண்களும், 7 வயது சிறுவனும் இறங்கினார்கள. என் பார்வையும், உள்ளமும், ஒரே தாவாகத்தாவி இரண்டு பெண்களையும் கவிழ்ந்துகொண்டது. ஒரு பெண்ணுக்கு இருபது வயதிருக்கும. மாங்கல்யம் மினுக்கியது அவள் கழுத்திலே, மணமான மங்கையென்று காட்ட. மற்றவளோ பதினெட்டு வயது நிரம்பிய கட்டழகி. அவள் அழகை வர்ணிக்க என்னால் முடியாது. நான் என்ன கவியா? அவளையே கெட்டியாகப் பிடித்துக்கொண்டது என் சிந்தனை. நான் மட்டுமா? பஸ்ஸிலே அமர்ந்திருக்கும், பிரயாணிகளெல்லாம் தான்! இதில்தான் யாவருக்கும் சம உரிமையாச்சே! வயோதிகராவது, வாலிபராவது? இதில் போட்டிபோட முன்வந்துவிடுவார்கள். மற்ற விஷயத்தில் பெரியவாள்—பெரியவாள்தான்!

இரு பெண்களைக் கண்டதும் டிக்கெட் கொடுப்பவன் வெற்றிலைக்காவி படிந்த அரைகுறைப் பற்களை இளித்துக்கொண்டு, பணம் வாங்குவதற்கு முன்பே டிக்கெட்டைக் கிழித்துக் கொடுத்துவிட்டான். அவனுக்குத் தாங்கமுடியாத ஆனந்தம். வயது முற்றின நரை. ஆனால் மனத்தில் நினைவோ இருபது வயது இளைஞன் என்று! அவனை ஓங்கி பேய் அறைவதுபோல் அறையலாமாவென்று எனக்கு வேகம் வந்தது. எனக்கல்லவா தெரியும், நான் அவனிடம் டிக்கெட் வாங்குவதற்குள் பட்டபாடு. சட்டம் பேசினவன், பெண்களைக் கண்டதும் குழைந்துவிட்டான். சட்டம்கூட பெண்கள் முன்பு தலைவணங்கும் போலும்.

இரு பெண்களும் எனக்குமுன் ஸீட்டிலியே அமர்ந்துவிட்டார்கள். அதிலும் அந்த இளமங்கை எனக்கு நேர் எதிரில் அமர்ந்துவிட்டாள். கேட்கவா வேண்டும்? என்னைப்போட்டுப் படாதபாடுபடுத்தியது. அப்படிப் படாதுபாடு படுத்தியது என்னவென்று எனக்கே தெரியவில்லை. அந்த இளமங்கையின் கயல் விழிகளை—இல்லை மான்போல மருட்சிகொள்ளும் மான் விழிகளைக் கவர புலிபோன்ற பல கோரக்கண்கள் பஸ்ஸின் பல பாகத்தினின்றும் போட்டியிட்டன. கண்டக்டர் டிக்கெட் கேட்கும்போதுகூட கவனியாது, கான்கிரீட் பிள்ளையார்போல உட்கார்ந்திருந்தார்களென்றால், பின்பு தெரிந்து கொள்ளுங்களேன் அவர்கள் நிலையைப்பற்றி. இவைகளையெல்லாம் கவனியாது இருபெண்களும் தங்களுக்குள் ஏதோ பேசிக்கொள்வதும், சிரிப்பதுமாய் இருந்தார்கள். எல்லோரையும் நையாண்டிபண்ணி கேலி செய்தார்களோ என்னமோ? ஒரு திருப்பம் வந்தது. என் கால்மீது யாரோ உதைத்ததுபோல் இருந்தது. திடுக்கிட்டுக் குனிந்தேன்; யாராவது என் பார்வையைக் கண்டிக்கத்தான் உதைத்தார்களோவென்று. பயத்துடன் அவள் கன் காலை மெதுவாக எடுத்துக்கொண்டதைக் கண்டேன். சிலிர்த்தேன். மன்னிப்புக் கேட்பதுபோல் அவள் கண்கள் என்னை நோக்கிக்கெஞ்சின. உதடுகள் நெளிந்தன. நானும் பரவாயில்லை என்று சொல்வதுபோல் உதட்டை அசைத்து கண்களை அகல விரித்து கனிவுடன் அவளை நோக்கிக் குனிந்துகொண்டேன். அதிலிருந்து எங்கள் பார்வைப்படலம் லைசென்ஸ் பெற்றுக்கொண்டது. இருவர் கண்களும் ஒன்றையொன்று குறிபார்த்துச் சுட்டுக்கொள்வதும்; முகம் கவிழ்ந்துகொள்வதும், உதட்டை மடக்கி, காய்ந்த உதடுகளை ஈரமாக்கும் விளையாட்டிலும் ஈடுபட்டுவிட்டோம். நான் அப்படியே இன்ப விமானத்தில் அமர்ந்து அவள் மடியிலே தவழ்ந்து செல்வதுபோல் இருந்தது. இதைப்போல நாம் இருக்கக்கூடாதாவென்று மனதிற்குள்ளே ஏங்கித்தவித்தேன். இந்த சமயத்தில் 10 மைல் வேகத்தில் ஓடும் பஸ்ஸை 25 மைல் வேகத்தில் கிளப்பிவிட்டான் டிரைவர். எங்காவது பஸ் படுத்துக்கொள்ளுமாவென்று ஏங்கி ஏங்கி எதிர்நோக்கினேன். அந்த ஓட்டை வண்டி அன்று பிகுவுடன் என்னை நையாண்டி பண்ணவே மூச்சைப்பிடித்துக்கொண்டு தஞ்சை வந்துதான் நிற்பேன் என்று வேகமாக ஓடிக்கொண்டிருந்தது.

பஸ் வேகம் குறைந்தது அப்பாடா என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே நின்றது. 'ஓரத்தனாடு' என்று பல திசைகளிலிருந்து ஒலிகள் கிளம்பின. என் சிந்தனையினின்று குதித்து வெளியுலகத்தை எட்டிப் பார்த்தேன். ஓரத்தனாடு போலீஸ் ஸ்டேஷனுக்கு முன்பு நின்றிருந்தது பஸ். பிரயாணிகளில் சிலர் கீழே இறங்கி சிரமபரிகாரம் செய்துக்கொண்டனர். சிலர் கீழே இறங்க மனமிலாது கண்ணைத்தீட்டி பாவையை நோக்கி 'ஹும்ஹும்' என்று கனைத்துக்கொண்டனர். கண்பார்வையிலே இருவரும் பற்பலவிதமாக உரையாடிக்கொண்டோம். வாய் பேச்சிலும் இணைய என் உள்ளம் குதியாகுதித்தது. ஆனால் பேச்சை எப்படி ஆரம்பிப்பது? என் தவிப்புக்கு, கடவுள்தான் மனமிரங்கி அந்த சிறுவனுக்கு தாகத்தைக் கொடுத்தாரோ என்னவோ? "அக்கா தாகமாக இருக்கிறது தண்ணீர் வேண்டும்" என்றான். "எல்லாம் கொஞ்ச நேரம் பொறுத்துக்கோ, தஞ்சாவூர் போனதும் பார்த்துக்கொள்ளலாம. இங்கு எப்படி இறங்கி தண்ணீர் கொண்டுவருவது?" என்றாள் என் பார்வையைக் காந்தம்போல் இழுத்துக் கொண்ட கடைக்கண் கட்டழகி!

கதையிலே வரும் கதாநாயகன் காதலிக்கு ஏதாவது அவசரக் கட்டத்தில்தானே உதவிசெய்து கனிவுரச் செய்கிறான். நானும் அக் கதாநாயகனைப்போல் சந்தர்ப்பத்தை நழுவவிடாமல், பெரிய ஸ்டண்டு வேலைபோல் பஸ்ஸிலிருந்து குதித்து ஓடிப்போய் ஒரு சோடா வாங்கிவந்து சிறுவனிடம் குடிக்கக் கொடுத்தேன். அவன் தயங்கி தன் இரு சகோதரிகளையும் ஏக்கத்துடன் பார்த்தான். என் கட்டழகி "இது என்ன கெட்ட பழக்கம்; சற்று தாகத்தைப் பொறுக்கக்கூடாதோ?" தங்களுக்கு அதிகச் சிரமத்தைக் கொடுத்துவிட்டான்" என்ற கனிமொழியை தன் மதுர வாயினின்று உதிர்த்தாள். "இதனாலென்ன, சிறு பையன் தாகத்தால் சிரமப்படும்போது" என்ற முகஸ்துதி மொழியை அசடுவழியக் கூறினேன். பையனும் சோடா குடித்தான். நானும் பரம திருப்தியடைந்தேன். காசுகொடுக்க முன்வந்தாள். நானா வாங்கும் பேர்வழி; காசை எதிர்பார்த்தா சோடா வாங்கும் அசட்டுக் காரியத்தில் இறங்கினேன்?

இனி ஒரே மூச்சாக தஞ்சை போய்த்தான் நிற்பேன் என்று கனைத்துக்கொண்டு கிளம்பியது ஓட்டை பஸ். நாங்களும் தொடங்கினோம் எங்கள் பார்வை நாடகத்தை. முன்பை விட உணர்ச்சியுடன் நடிக்க ஆரம்பித்தோம். நாங்கள் தான் வார்த்தையாலும் இணைந்து விட்டோமே! தஞ்சையை நெருங்க நெருங்க தாங்கமுடியாத துக்கம் என்னைக் கவிழ்த்துக்கொண்டே வந்தது. தஞ்சை வரையிலும் தான் இந்த இன்ப நாடகம். பின்பு? என்ற கேள்வியே என் உடல் முழுவதும் சுழன்று என் கண்களை கலங்க வைத்தன. பேர்வீரன் இளமனைவியிடம் பிரிய விடை பெற்று போர்க்களம் நோக்கிச் செல்லுவதுபோல! வாயுதேவன், அவள் தாமரை முகத்திலே முத்தம் மீந்து தவழ்ந்து அவள் கருங்குழல் போன்ற கேசத்தை அலங்கோலப் படுத்திச் சென்றான். அந்த வாயுதேவன் நானாக இருந்தால்? தன் மதுர கரங்களால் முகத்திலே தவழ்ந்த கருங்குழல்களை சரி படுத்திக்கொண்டு என்னைக் கடைக்கண் நோக்கி, இரத்தம் போன்ற தன் இதழ் கோடியிலே ஓர் மோகனப் புன்னகையை அவிழ்த்தாள். அப்படியே நான் மயங்கி பின் புறமாக சாய்ந்துவிட்டேன். எவ்வளவு நேரம் அப்படியிருந்தேனோ, அது எனக்குத் தெரியாது. "என்னய்யாது பகலில் அதுவும் பஸ் பிரயாணத்தில் தூக்கம்.? மனுஷன் இங்கு நரக வேதனை மாதிரி நசுங்கி, சாகவேண்டியிருக்கிறது, நீர் பஞ்சு மெத்தையிலே துயில் ரோம்னு எண்ணமோ? என்ற திடீர் வேட்டைத் தூக்கி என்மீது போட்டார். நான் திடுக்கிட்டு உணர்வு பெற்று எதிர்புறமாக நோக்கினேன். குறும்பாக முறுவலித்தாள் கனி! "இதோ பஸ்டாண்டு வந்து விட்டது" என்று ஒருவன் என் தலை மீது சம்பட்டி அடிப்பதுபோல் கத்தினான். வெளியே பார்த்தேன் பஸ்டாண்டு வந்து விட்டது. தாங்க இயலா துக்கத்துடன் அவளை நோக்கினேன். எண்ணத்தின் சுமை அவள் நயன இதழ்களை கனமாக்கி, துடிக்கச் செய்தன. அவள் கண் இமைகளுக்கிடையே திரையாக விரிந்த நீர் படலத்திலே ஏது ஏதோ காட்சிகள் தோன்றி என்னை அலக்கழித்தன. இதற்குள் பஸ்ஸும் நின்று பெருமூச்சு விட்டது. ஒரே துக்கமயத்துடன் இறங்கி பிரியப் போகிறோமேவென்று கலங்கிய கண்களுடன் தூர நின்று அவளையே பரிதாபமாகப் பார்த்தேன. அவளும் என்னைப் போன்றே தத்தளித்த உள்ளத்துடன் சாமான்களைக் கூட சரிவர எடுக்காது தடுமாறி என்னையே ஆவலுடன் நோக்கினாள். இந்தத் துயரக் கட்டத்தில், எமகாதகன் போல் என் நண்பனொருவன் எங்கிருந்தோ வந்து என்னை கண்டு பிடித்து "வாப்பா,, போவோம் என்று பர பரவென்று இழுத்துச் சென்றான். அப்பொழுது நானும அவளும் பார்த்த கோலத்தை ஒரு கவி பார்த்திருந்தானானால் ஒரு நீண்ட கவிக் கோவையாக சிருஷ்டித்திருப்பான். என் நிலை நண்பனுக்கு தெரியுமா? வெகுநாள் பிரிந்த நண்பர்கள் கூடினால் கேட்கவா வேண்டும்? என்னைக் கண்டதும் அவனுக்கு ஆனந்தம் வரம்பு மீறியிருக்கலாம். ஆனால், என்னைத் துக்கம்தான் தொடர்ந்து சுழல வைத்தது.

வயிறுபுடைக்க ஹோட்டலிலே எனக்கு விருந்து நடத்தி என்னை ஆனந்தப்படுத்தினான் நண்பன். வெளிக்கு அசடுவழிய சிரித்துக்கொண்டே அவனிடம் பேசினேன. என்னை விட மாட்டான் போலிருந்தது. மெதுவாக தட்டிக்கழித்துக்கொண்டு நிம்மதியுடன் சற்று அமர ஸ்டேஷனுக்கு வந்தேன். திருச்சி வண்டி வர இன்னும் 2 மணி நேரம அவகாசம் இருந்தது. அதற்குள் டிக்கெட் படையெடுப்பு 'க்யூ' வரிசையிலே தொடர்ந்து நின்றது. நானும் சேர்ந்து கொண்டு மனச் சலனத்துடன் சுற்றியும் முற்றியும் துலாவினேன. தற்செயலாக என் பார்வை ஸ்திரீகள் டிக்கெட் வாங்கும் இடத்தில் விழுந்தது. என்ன ஆச்சரியம்! அந்தக் கட்டழகி டிக்கெட்டுக்குப் போராடிக்கொண்டிருந்தாள். உடனே என் வரிசையினின்று நழுவி, அவளைக் கூப்பிட்டு "எங்கே டிக்கெட் வாங்கவேண்டும். நான் வாங்கித் தருகிறேன்" என்றேன் இருதயம் டக் டக்கென்று வேகமாக அடித்துக் கொள்ள. "திருச்சி பாலக்கரை" என்றாள் உடல் முழுவதும் நாணம் ரத்தத்தை வாரிவீச பணத்தை வாங்கிக்கொண்டு என் வரிசையிலே சேர்ந்து போராடி ஒருவழியாக டிக்கெட்டை வாங்கிக்கொண்டு வெளியே வந்தேன். நன்றியறிதலுடன் அவளும் அவளுடைய சகோதரியும் என்னைப் பார்த்து லேசாகச் சிரித்தார்கள். "நானும் திருச்சிக்குத்தான் போகிறேன், வாருங்கள் போவோம் என்று அன்புடன் கூறி, அவர்கள் மூட்டைகளில் ஒன்றைத் தூக்கிக்கொண்டு மிகவும் பாத்தியப்பட்டவன்போல் மிடுக்குடன் முன்னே சென்றேன். அவர்களும் ஒன்றும் கூற இயலாது சந்தோஷத்துடன் என்னைத் தொடர்ந்தார்கள். ப்ளாட்பாரத்தில் எங்கள் கூடாரத்தையடித்து வண்டியை எதிர்நோக்கியிருந்தோம். எங்கள் மத்தியிலே இருந்த நாணத்திரைவிலகியது. வெகுநாள் பழகியவர்கள்போல்பேச ஆரம்பித்தோம். என்கட்டழகி திருச்சிப் பெண் பாடசாலையிலே 4ம் பாரம் வாசிப்பதாயும், பெயர் மல்லிகாவென்றும் அறிந்துகொண்டேன். அவள் சகோதரி ஒரு ரயில்வே குமஸ்தாவின் மனைவியாம். இருப்பிடம் இடத் தெரு என்று அறிந்துகொண்டேன். அவள் சகோதரனுக்குவேண்டிய பழ வகைகளெல்லாம் வாங்கிக்கொடுத்து சந்தோஷப்படுத்தினேன். டிரையினும்வந்தது. நானே எல்லாசாமான்களையும் தூக்கி வண்டியில் வைத்துசரிபடுத்தி, அவர்களை அமரச்செய்தேன், திருச்சிவரும்

(அடுத்த பக்கம் பார்க்க)

நமது குறைபாடுகள்

D. S. வேலன்

நமது வீரப் பிரதாபங்களையும், நம் முன்னோரின் பெருமைகளையும், பண்டைக்கால பண்பாடுகளையும் பற்றியெல்லாம் பேசுவதுதான நாம் அன்றாடம் செய்துவரும் வேலை. வீரம் ததும்ப விட்டுக்கொடுக்காமல் எழுதுவதும் பேசுவதுமே இன்றைய வேலையாயிருந்து வருகிறது. இன்றையத் தினம் தமிழரின் பண்பாட்டைப் புகழ்ந்து எழுவதில் இளம் எழுத்தாளர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். என், ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு எழுதுகின்றனர் என்று கூட சொல்லலாம். ஆனால், இவ்வளவுக்கும் உற்ற பலனை இதுகாறும் நாம் எய்தியபாடில்லை. இன்னமும் பழைய கருப்பன்களாகவே நாம் வாழ்ந்து வருகிறோம். பழமையினின்று சற்றும் விடுபட்ட பாடில்லை. இப்படிச் சொல்லுவதால் அரசியல் பொருளாதார நிலையில் நாம் இன்றுள்ள சீர்கேடான நிலையினை நான் சுட்டிக் காட்டுகிறேன் என்றும், அத்துறை இவ்வளவு சீக்கிரத்தில் சீர்திருத்தக் கூடியவைகளா என்ற கேள்வியைக் கேட்க வாசகர்கள் சிலருக்குத் தோன்றலாம். ஆனால், நான் ஈண்டு எழுதப் புகுந்தது அதுவன்று. அரசியல் பொருளாதாரம் முதலியத் துறைகளில் நாம் முன்னேற வேண்டுமானல், அதற்கு முன் பல படிகளைத் தாண்டியாக வேண்டும். முதலில் நாம் ஒவ்வொருவரும் நம்மையே சீர்திருத்திக் கொள்ளவேண்டும். நம்மை நாமே சீர்திருத்திக் கொள்ளாதவரை அரசியல், பொருளாதாரம் என்ற பொதுப் பிரச்னைகளை அணுகவே நாம் லாயக்கற்றவர்களாவோம். 'தனிப்பட்ட மனிதர்களுடைய முன்னேற்றத்தைக் காண முடியவில்லையானல்' தேசிய முன்னேற்றம் என்பது பயன் தரா நபேச்சாகும்" என்று சாமுவேல் ஸ்மெயில்ஸ் (*Samuuel smiles*) என்னும் ஆங்கில ஆசிரியர் ஒருவர் கூறுகிறார். எனவே, ஒரு நாடு முன்னேற வேண்டுமானல் ஒவ்வொரு மனிதருடைய தன்மைகளிலும் பெரியதோர் மாற்றம் ஏற்பட வேண்டும். அதாவது, மனம் பண்பட வேண்டும். மனம் பண்பட வேண்டுமானல், அறிவு வளர வேண்டும். அறிவு வளர வேண்டுமானல், அறியாமை அகலவேண்டும். அறியாமை அகன்று அறிவு வளர்வதைக் காட்டுவதுதான் நாகரிகம் எனப்படும். இந்த நாகரீகம் ஏற்படாத வரை அதாவது, அறியாமை அகன்று, அறிவு வளர்ந்து மனம் பண்பட்டு, நிலைமையில் ஒரு மாற்றம் ஏற்படாத வரை முன்னேற்றம் என்பது முயற் கொம்புதான்.

எனவே, நாட்டு முன்னேற்றத்தை விழையும் ஒவ்வொருவரும் இனி நம்மிடம் காணப்படும் உயர்வுகளைப் பற்றியும் சிறப்புகளைப் பற்றியும் எண்ணிக் கொண்டிராமல் நம்மிடம் காணப்படும் குறைபாடுகள் எவை என்பதைப் பற்றி சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்பொழுதான் நாம் உண்மையாக எந்த இடத்தில் இருக்கிறோம் என்பதை உணர்ந்து கொள்ளமுடியும். யார் தமது குறைபாடுகளைப் பற்றி எண்ணிப்பார்க்காமலிருக்கிறார்களோ அப்படிப் பட்டவர்கள் வாழ்க்கைப் பாதையில் வேகமாகச் செல்லமுடியாது. வாழக்கை ஒரு சருக்கு மரத்துக்கொப்பானது. அதில் ஏற ஏற, சருக்கிக் கொண்டேயிருக்கும். அப்படிப்பட்ட வாழ்க்கைப் பாதையில் செல்வோர் தமது குறைபாடுகளைத் தாமே உணர்ந்து கூடுமானவரையில் அவற்றை விலக்கிக் கொண்டே முன்னேற வேண்டும். குறைபாடுகள் நீங்க நீங்க வாழ்க்கைப் பாதையில் நேரும் சருக்கல்களும் குறையும். இந்த உண்மையை உணராமல் தேசிய முன்னேற்றம் பற்றி தொண்டை கிழிய பேசுவதும், எழுதுவதும் ஓட்டைக் குடத்தின் ஓட்டையை அடைக்காமல் அதனைத் தண்ணீரால் நிரப்ப முயலும் வீண் முயற்சிக்கே ஒப்பாகும். அது மட்டுமின்றி, நம்மை நாமே ஏமாற்றி கொள்வதுபோலவும் ஆகும். எனவேதான் நமது குறைபாடுகள் எவை என்பதைச் இக்கட்டுரை மூலம் சுட்டிக் காட்ட விழைகிறேன்.

நமது அன்ருட வாழ்க்கையில் அனேகக் குறைபாடுகள் உள்ளன. அவற்றை ஒருங்கே திரட்டிப்பார்த்தால் குறைபாடுகள் என்ற ஒரு குன்று நம் ஒவ்வொருவரின்முன் காட்சியளிக்கும். வாழ்க்கையில் பல துறைகள் இருக்கின்றன. அவற்றை ஒவ்வொன்ருக எடுத்துக்கொண்டு அலசிப்பார்த்தால் உண்மை விளங்கும். மற்றெல்லாத் துறைகளிலும் அறிவுத் துறைதான் தலையாயது. எனவே, அத்துறையில் நம்மிடம் காணப்படும் குறைபாடு என்ன, என்பதை முதலில் கவனிப்போம். மற்றெல்லாப் பிறவிகளையும் விட மனிதப்பிறவி உயர்ந்தப்பிறவி என்கிறோம். இது என்? மற்ற உயிர்களிடம் இல்லாத பகுத்தறிவும், அந்தப் பகுத்தறிவின் பலனான சிந்தனை சக்தியும் மனிதனிடம் அமைந்துள்ளதே இதற்குக் காரணம். ஆனால், நம்மில் நூற்றுக்கு தொண்ணூற்றென்பது பேர் இந்த அரிய சிந்தனை சக்தியை உபயோகப்படுத்துவதே கிடையாது. எதையும் கண்ட அளவிலும் கேட்ட அளவிலும் நம்பிவிடுகின்றனர். "இது என் அப்படி இருக்கவேண்டும்? இப்படியிருந்தால் என்ன? மற்றவர்கள் போன வழியே நாமும் போகவேண்டும் என்பது சரியான முடிவுதான? பழக்கம், வழக்கம், என்பதெல்லாம் எலலோருக்கும், எல்லாவிடத்திலும், எல்லா காலங்களிலும் கடைப்பிடிக்கக் கூடியதுதான? அப்படிக் கடைப்பிடிப்பதால் ஏற்படும் நன்மை தீமைகள் எவை? என்றெல்லாம் சிந்தித்துப் பார்ப்பதே கிடையாது. இது மனித வர்க்கம் உலகம்தோன்றிய நாள்முதல் செய்துவரும் பெருங்குற்றம். இந்தப் பெருங்குற்றத்தைப் பண்டிதர்முதற்கொண்டு பாமரர்வரை, அரசன்முதற்கொண்டு ஆண்டிவரை செய்து கொண்டுதான் வருகின்றனர். "நாம நமது சிந்தனைசக்தியைச் சரிவர உபயோகிப்பதில்லை" என்பதை, ஒவ்வொருவரும் மறந்துவிட்டு பிறரைக் கண்டு "உனக்கு புத்தியில்லையா" என்று கேட்பதைமாத்திரம் கைவிடுவதே கிடையாது. இது சர்வசாதாரணமாகக் காணப்படும் ஒரு பழக்கமாகி விட்டது.

இங்ஙனம் ஒவ்வொருவரும் தம்மிடம் இந்த குறைபாட்டை வைத்துக் கொண்டு, இத்தகைய குறைபாடுகளை யாராவது எடுத்துக் காட்டினல் அவர்கள்மீது சீறிவிழுகின்றனர். ஆத்திரம் கொள்ளுகின்றனர். அவர்களை துன்புறுத்துகின்றனர். சிலவேளைகளில் அவர்களைக் கொலை செய்யவும் சதி செய்கின்றனர். சிலரைக் கொன்றுமிருக்கின்றனர். இதற்குச் சரித்திரம் சான்று பகருகிறது. "எதையும் சிந்தித்துப் பார்" என்று சொன்னதற்காக அன்று கிரேக்க நாட்டறிஞரான சாக்கரடீஸ் விஷம் கொடுத்துக் கொல்லப்படவில்லையா? இப்படி "சிந்தித்துப் பார்" என்று சொன்னதற்காக சிந்தித்துப்பாராமல் சித்ரவதை செய்தகொடுமைகள்பல. இதனை என் எடுத்துக் காட்டுகிறேன் எனில், நமது குடும்ப விவகாரங்களிலும், நண்பர்களோடுபழகும் விஷயங்களிலும், உத்தியோகம் பார்க்குமிடங்களில் ஊழியர்களை எஜமானர்கள் நடத்தும்முறையிலும் சிந்தித்துப் பாராமையால் பல சீர்கேடுகள் வருகின்றன. சிந்தனை அற்றவிடத்தில் பிறரைப்பற்றி சரிவர நாம தெரிந்துகொள்ள முடிவதில்லை. சரிவர தெரிந்துகொள்ளாத காரணத்தால் சந்தேகம் சீக்கிரத்தில் குடிகொண்டுவிடுகிறது. சந்தேகம் குடிகொண்டுவிட்டால் எந்தப் பிரச்னை சிக்கலாகிவிடுவதும், பின்னர் அந்த சிக்கல் பல சிக்கல்களாகி தீர்க்கமுடியாததுமாகிவிடுகிறது. இதனல் குடும்பங்களில் கணவனுக்கும், மனைவிக்குமிடையிலும், உறவினர்களுக்கிடையிலும், நண்பர்கள் ஒருவருக்கொருவரிடையிலும் வீணன பகைமை வளருகிறது. இங்ஙனம சிந்தித்துப்பாராத காரணத்தால் குடும்பங்களிலும், உத்தியோகம் பார்க்குமிடங்களிலும் பல தீமைகள் விளைவதுபோலவே, பொதுவாழ்விலும் பலதீமைகளை உற்பத்தி செய்துவிடுகிறது. அரசியல் கட்சிகளிடையே ஏற்படும் வம்புகளுக்கும், கை கலப்பு, கல் வீச்சுபோன்ற கொடுமைகளுக்கும் காரணங்கள் சிந்தித்துப் பாராமையேயாகும்.

இம்மாதிரியாகப் பார்த்துக் கொண்டே போனல், சிந்தித்துப்பாராமல் செயலாற்றுவதால் நேரும் இன்னல்கள் சொல்லத்தரமல்ல. நாம் எந்த இடத்தில் சிந்தனைசக்தியைக் கைவிடுகிறோமோ அந்தவிடத்தில் எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அரிதாகி விடுகிறது. இங்ஙனம் மெய்ப்பொருளை உணராமல் மேல்பார்வையில் கண்ட பொருள்களையும்; கண்டமனிதரையும் சரியானபடி அளவிட்டுப் பார்ப்பதில்லை. சரியானபடி அளவிட்டுப் பாராத காரணத்தால் மதிப்பு தரவேண்டிய பொருள்களிடத்திலோ; மனிதரிடத்திலோ மதிப்புக் காட்டாமல் அலட்சியப்படுத்துகிறோம், அவமதிக்கிறோம். இதனல், நாம் சிலவேளைகளில் நல்ல அறிஞர் பலரின் உள்ளத்தைப் புண்படுத்துவதுமட்டுமின்றி, அவர்கள்மூலம் நாமடைய வேண்டிய பலன்களையும் இழந்தவர்களாகிறோம். உதாரணமாக இன்று பெரிய தேசியகவி என்று போற்றப்படும் பாரதியாரை அவருடைய வாழ்நாளில் அவமதித்தோம், அலட்சியப் படுத்தினேன், பட்டினி போட்டுக் கொன்றோம். இன்னும் மற்ற துறைகளை எடுத்துக் கொண்டாலும் இப்படியே. முதலாளிகள் தம் கீழ் வேலை செய்யும் தொழிலாளரின் உழைப்பின் உயர்வைப் பற்றி எண்ணிப் பாராமல் அவர்களை அலட்சியப் படுத்தி வருகின்றனர். இதனல் தொழிலாளரின் உள்ளம் புண் படுகிறது. தொழிலாளரின் உள்ளக் கொதிப்பு நாளடைவில் வளர்ந்து அதனல் பல குழப்பங்கள் ஏற்படுகின்றன. மேலும், சிந்திக்காத காரணத்தால் நாம் பொறுமையை இழந்து விட்டால் அதனல் விளையும் தீங்குகள் எவை என்பதை நான் சொல்லத் தேவையில்லை. எனவே, நம்மவரின் பலசீர்கேடுகளுக்குக் காரணம் எதையும் சிந்தித்துப் பாராததாகும் என்பது தெளிவாகும். நம்மிடம் இன்னும் எத்தனையோ குறைபாடுகள் உள்ளன. அவற்றை ஒவ்வொன்ருக எடுத்துக் காட்டவேண்டுமென்பது என் அவா. எல்லாக் குறைபாடுகளுக்கும் அடிப்படையான சிந்தியாமை பற்றி ஈண்டு சில எழுதினேன். இனி இதனைத் தொடர்ந்து மற்ற பல குறைபாடுகளைப் பற்றி பின்னர் எழுதுகிறேன்.

கடைசி பார்வை

(முன்பக்கத் தொடர்ச்சி)

வரை இன்ப உரையாடல்தான் எங்களிடையே கமழ்ந்தது. பஸ்விலேபார்வை ரயிலிலே சம்பாஷணையாக பரிமளித்தது. வண்டியும் திருச்சி ஜங்ஷனை அடைந்தது. சாமான்கள் பரப்புடன் தூக்கிவந்து பாலக்கரை வண்டியிலே வைத்து அவர்களையும் அமரும்படி செய்தேன். எனக்கு ஜங்ஷனிலே அலுவல் இருந்தமையால் அவர்களைத் தொடரமுடியவில்லை. பிரிவுத்தாபம் எங்களைப்பேசவிடாமல்தடுத்தது. வண்டியும் 'கூ' வென்று கூவி கிளம்பியது. சிறுவன் "போய்வருகிறேன்" என்று கையை அசைத்தான். மூத்தவளும் "போய் வருகிறோம்" என்று நனறி பிரதி பலிக்கக் கூறிவிடைகேட்டாள். ஆனல், என் உள்ளத்தைக்கவர்ந்த கட்டழகி பேசவில்லை. கண்ணீர் துளிக்கும் கண்களுடன் என்னை விழித்து குனிந்துக்கொண்டாள். அவளது அதாதளங்கள் நட நடத்தன. "மல்லிகா" என்றேன் அன்புபொங்க. உதடுகள் முணுமுணுக்க பரிதாபகரமாக என்னை எறிட்டுப்பார்த்தாள். அதற்குள் வண்டியும் நகர்ந்தது. பார்வை மறையும்வரை இருவரும் பார்த்து பரதவித்தோம். அவ்வளவுதான் எங்கள் சந்திப்பு. முற்றுப்புள்ளி பெற்றுவிட்டது. ஆனல் அவளுடைய கடைசிப் பார்வை என் வாழ்க்கையிலேயே ஓர் எரிச் சுழலைக் கிளப்பிவிட்டது. அடிக்கடி பழம் நினைவுக்கனலைக்கக்கி என் உள்ளத்தைச் சுட்டு எரிக்கிறது. ஆனல் அந்தப் பேதை புள்ளத்தில் எப்படியோ?

யுத்தகால விலையைவிட மிக மலிவான விலை:



ஸ்விஸர்லாந்தில செய்யப்பட்டவை. சரியான சமயம் காட்டக் கூடியது. ஒவ்வொன்றும் 3-வருட உத்தரவாதம. ஜூவல் அமைக்கப் பட்டவை. வட்டம், அல்லது சதுரம் குரோமியம் ரூ. 20. ஷை சிறந்தது ரூ. 24. தட்டை வடிவம் குரோமியம் கேஸ் ரூ. 30. ஷை சிறந்தது ரூ. 36. ரோல்டு கோல்டு (10 வருட உத்தரவாதம்) ரூ 55. நீண்ட சதுரம், அல்லது வளைவான வடிவம். பளப்பளப்பான குரோமியம் கேஸ் ரூ. 41. ரோல்டு கோல்டு (10 வருட உத்தரவாதம்) ரூ. 58. 15 ஜூவல் பதித்த ரோல்டு கோல்டு ரூ. 88. (தபால் செலவு இனம்) கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

PARAGON WATCH CO.,
Post Box. No. 11419, Calcutta (T.M)

வாலாட்டம் செல்லாது

கர்னடகத்தின் பேராசை

சோதனையா, காதலா?

எய்தவனிருக்க அம்பை நோவதேன்?

கொஞ்ச நாட்களாகத் தமிழ் நாட்டிற்குப் பெருத்தத் தலைவலி ஏற்பட்டிருக்கிறது. 'மதருஸ் மனதே' என்கிருன் ஆந்திரன். அவனோடு கூடிக் கொண்டு இங்குள்ள சில தெலுங்கு பேசும் தமிழர்கள் ஒத்துக்கு மத்தளம் அடிக்கின்றனர். தோழர் சுந்தர் ராவ் நாயுடுகோரு, தான் தமிழ் நாட்டில் தமிழரின் தயவால் நெடு நாட்களாக வாழ்ந்து வருகிறோம் என்பதையும் மறந்து விட்டு ஆந்திரருடைய கிளர்ச்சியில் தானும் ஒரு முக்கிய பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார். தோழர் சுந்தர் ராவ் நாயுடு யார், எப்படிப்பட்டவர் என்பது சென்னை வாசிகளுக்கு நன்றாகத் தெரிந்த விஷயம். இந்த மாகாணத்தில் ஜஸ்டிஸ்கட்சி என்ற ஓர் கட்சி தோன்றியிராவிட்டால் சுந்தரராவ் நாயுடுவின் பெயரே வெளியில் தெரிவதற்கு வழியில்லை. இடைக்காலத்தில் ஜஸ்டிஸ் கட்சி சர்க்கார் தாசர்களான சில சரிகைத் தலைப்பாய்களின் கட்சி என்று மாறிய போது இந்த சுந்தராவ் நாயுடு போன்றவர்கள் பிரிட்டிஷ் சர்க்காரைத் துதி பாடி சில பட்டம் பதவிகளைப் பற்றிக் கொண்டனர். அவ்வளவுதானே யொழிய வேறு எந்த விதத்திலும் இந்த அனுமதேயங்களுக்குச் சிறப்பில்லை. இந்த சுந்தரராவ் நாயுடு போன்ற ஒரு சில ஆந்திரர்களைத் தவிர ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் பலரும் தமிழர்களே. முப்பது வருஷங்களுக்கு முன் பிராமணீய ஆதிக்கம் தாங்க மாட்டாமல் தமிழர்கள் சிலர் கூடி ஏற்படுத்திய ஸ்தாபனம்தான் ஜஸ்டிஸ் கட்சி. அந்தக் கட்சியில் ஒண்டிப் பிழைக்க வந்த சில தெலுங்கர்களில் ஒருவரான சுந்தராவ் நாயுடு நன்றி கெட்டத்தனமாக, தமிழ் நாட்டின் தலை நகரான சென்னையை ஆந்திருடையது என்று துணிந்துகூற ஆரம்பித்திருக்கிறார்.

வாலாட்டம் செல்லாது

சென்ற வாரத்தில் சுந்தராவ் நாயுடுவும் மற்றும்பல ஆந்திரர்களும் கூடி ஒரு லாரியில் ஏறிக்கொண்டு "மதராஸ் மனதே" என்ற கோஷங் களிட்டுக் கொண்டு சென்னையின் வட பகுதியில் வட்ட மிட்டனராம். அப்படி வட்ட மிட்டுக்கொண்டு செம்பியத்துக்கருகில் வந்த போது இதைக் கண்டு ஆத்திரம் அடைந்த தமிழ் மக்கள் அவர்களைத் தாக்க முயன்றதாகவும், அதுகண்டு அவர்கள் ஓட்ட மெடுத்ததாகவும் சொல்லப் படுகிறது. இது சிரிப்புக் கிடமான ஒரு செய்தி. சென்னையில் ஆந்திரரின் வாலாட்டம் செல்லாது என்பது அவர்களுக்கே தெரியும். தெரிந்திருந்தும் இப்படிப் பட்டக் குறும்புத் தனங்களில் இறங்கியிருக்கிறார்கள். ஆனால் தமிழர் இதனை அலட்சியமாகக் கருதி விடக் கூடாது. ஆந்திரருக்கும், அரசாங்கத்துக்கும் இப்போதே ஒரு எச்சரிக்கை செய்ய வேண்டியது தமிழர் கடன். ஆந்திருக்குத்தான எச்சரிக்கை தர வேண்டுமே யன்றி, அரசாங்கத்துக்கு எதற்காக எச்சரிக்கை என்று சிலர் கேட்கலாம். சென்னையில் அமைதியை விரும்பினால், அரசாங்கம் ஆந்திரரின ஆர்ப்பாட்டத்தை அடக்கித்தான் தீர வேண்டும். ஏனெனில், ஆந்திருடைய கோரிக்கை நியாய மற்றது. தமிழரை வலுச் சண்டைக்கு இழுப்பது போன்ற செயல்; நீதியற்ற ஒரு கோரிக்கைக்காக ஆந்திரர் செய்யும ஆர்ப்பாட்டங்களைக் கண்டு தமிழர் வீறு கொண்டெழுந்தால் சென்னையும் பாஞ்சாலமாக மாறும். இப்படிப்பட்ட நிலை ஏற்படாதிருக்க வேண்டுமானல், சென்னை சர்க்கார் தான முன்னே எச்சரிக்கையுடன் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். சென்னை தமிழ் நாட்டின் தலை நகர். சென்னை மந்திரி சபையில் இருப்பவர்களும், சட்ட சபையில் இருப்பவர்களும் பெரும பாலோர் தமிழர்களே. அப்படியிருந்தும் இதுவரையில் ஆந்திரரின் அட்டகாசத்தை இந்த சர்க்கார் கண்டிக்காமலிருப்பது மிக, மிக வருந்தத் தக்கது. இதனல் இந்த மந்திரி சபையிடமே தமிழர்களுக்குச் சந்தேகம் ஏற்படுகிறது. இந்து—முஸ்லீம் பிணக்கு என்பது இம்மியளவும் இல்லாத இந்த மாகாணத்தில் வகுப்புப் பூசலை ஒழிக்கும் நடவடிக்கைகளைப் பிரதமாகச் செய்து காட்டுவதும், சோதனைகள் போடுவதுமாக இருக்கும் இந்த சர்க்கார், ஆந்திரர்களின் வீண் ஆர்ப்பாட்டங்களை மாத்திரம் இதுவரையில் கண்டிக்க முன் வராமலிருப்பது ஏன்? இந்து முஸ்லீம் பிரச்னையைவிட ஆந்திரர்—தமிழர் பிரச்னை இலேசான பிரச்னை என்பது சர்க்காருடைய எண்ணமா? உண்மையில் பார்க்கப் போனால் ஆந்திரர் செய்யும் ஆர்ப்பாட்டங்கள்தானே அதிகமாக இருக்கிறது. எனவே, இனி ஆந்திருடைய வீண் ஆர்ப்பாட்டங்களை அடக்க வேண்டிய பொறுப்பு சர்க்காருடையதேயாகும். இதே சமயத்தில் தமிழருக்கும் நாம் ஒன்று கூற விரும்புகிறோம். ஆந்திருடைய ஆர்ப்பாட்டங்களைக் கண்டு தமிழர் ஆத்திரப்பட்டு அவசரப்பட்டு பலாத்காரத்தில் இறங்கிவிடக் கூடாது. அவசரம் ஆபத்தானது. அது ஒரு சிக்கலைப் பல சிக்கல்களாக்கி விடும். ஆகவே, அரசாங்கத்திடம் முறையிடுவதே சரியான முறை. ஏனெனில், பதவியிலிருப்பவர்கள் தமிழர்களே. எனவே ஓமந்தூர் ரெட்டியார் அவர்களும் தமிழரே. தமிழ் நாட்டிலே பிறந்து தமிழ் நாட்டிலே வளர்ந்தவர். ரெட்டியார் தெலுங்கு பேசுவதால் ஆந்திரராக மாட்டார். இதுபோலவே சட்டசபை அங்கத்தினர் பலரும் தமிழர்களே. இவர்களையெல்லாம் பதவிக்குக் கொண்டு வர பகல் இரவாகப் பாடுபட்டவர்கள் தமிழர்கள். ஆகவே, சர்க்கார் இதில் தலையிடாவிட்டால் இந்த மந்திரிசபை நிலைக்காது என்பது நிச்சயம்.

பரிதாபப்படுகிறோம்

ஊருக்கிளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்பதுபோல சென்னை மாகாணத்தில் ஆந்திரர், கன்னடர்; கேரளர் ஆகியோருக்குத் தமிழ் நாடு இன்றயத்தினம் இளைத்த நாடாகக் காணப்படுகிறது. ஆந்திரர்களுடைய ஆசை சென்னை, செங்கல்பட்டு வட ஆற்காடு வரை மட்டுமின்றி திருச்சி வரையில் கூட செல்லுகிறது. இது பழைய சங்கதி. மற்றொரு புது சங்கதி என்ன என்று கேளுங்கள். சுண்டைக்காய் போன்ற கன்னடமும் தமிழ் நாட்டில் சில பகுதிகளைக் கேட்க ஆரம்பித்திருக்கிறது. சென்ற வாரத்தில் கர்னடக மாகாண காங்கிரஸ் கமிட்டியிலும், அரசியல் நிர்ணய சபையிலும், மாகாண சட்டசபையிலுமுள்ள சில கர்னடக அங்கத்தினர்கள் காங்கிரஸ் காரியக் கமிட்டியிடம் ஒரு மகஜரை சமர்ப்பித்தனர். அதில் கர்னடகத்தைத் தனி மாகாணமாகப் பிரிக்காவிட்டால் மத்திய சட்டசபையிலிருந்தும், மாகாண சட்டசபையிலிருந்தும் விலகிவிடப்போவதாகப் பூச்சாண்டி காட்டியிருக்கிறார்கள். அந்தப் பூச்சாண்டியைக் கண்டு காரியக் கமிட்டி பயப்படுகிறதா, இல்லையா என்பதுபற்றி நமக்குக் கவலை யில்லை. அது போலவே கர்னடக மாகாணம பிரிவதைப் பற்றியும் நமக்குக் கவலையில்லை. பிரிந்து போகிறவர்களெல்லாம் தாராளமாகப் போகட்டும். திராவிடர் கழகத்தாரைப் போல் அவர்களும் நம்மோடு கூடிக் குலவ வேண்டுமென்று நாம் கூறவில்லை. அதில் நமக்கு நம்பிக்கையுமில்லை. ஆனல், ஆந்திரர்களைப் போலவே கர்னடகர்களும் விஷமத்தனத்தில் இறங்கியிருப்பதைக் கண்டுதான் பரிதாபப் படுகிறோம். சர்க்கார் நடி சாக்கில் கோவை, சேலம் முதலிய பகுதிகளையும் அபகரித்துக் கொள்ளலாமென்று அவர்கள் திட்டமிடுகின்றனர். இது அந்த மகஜரில் காணப்படும் மற்றொரு முக்கியமான விஷயம்.

சோதனையா...? காதலா?

இப்படி ஆந்திராவும் கர்னடகமும் தங்கள் மனம் போனப்படி தமிழ் நாட்டின் பகுதிகள் சிலவற்றைப் பறிக்க திட்டமிடுவதையும், அதற்காக காரியக் கமிட்டியிடமும், வட நாட்டுத் தலைவர்களிடமும் காவடித்தூக்குவதையும் நினைக்கும்போது நமக்குச் சிரிப்புதான் வருகிறதே யன்றி, கோபம் வரவில்லை. என்ன காரணம் பற்றி இவர்களுக்கெல்லாம் தமிழ் நாட்டின் சில பகுதிகள்மேல் இத்தகைய திடீர் காதல் ஏற்பட்டது: உண்மையாகவே கேட்கிறார்களா? அல்லது தமிழரைச் சோதிக்கிறார்களா? அல்லது இதெல்லாம் ஒரு தனி கோஷ்டியின் சூழ்ச்சிகளில் இதுவும் ஒன்றாக இருக்குமா? என்ற சந்தேகங்கள் தோன்றி தமிழருடைய சிந்தனைக்குச் சரியான வேலை

(9-ம் பக்கம் பார்க்க)

ஜூவெல் பதித்த லீவர் கடியாரங்கள்

எல்லா வாச்சுகளும் சுவிட்ஜர்லாந்தில் செய்யப் பட்டவை; உறுதியானவை; உழைக்கக் கூடியவை; சரியான மணி காட்டுபவை; அழகான வேலைப்பாடுகளுடன் கூடியவை. ஒவ்வொன்றும் 7 வருஷ உத்தரவாத முள்ளவை. குரோமியம் கேஸ் ரூ 18-8-0 உயர்ந்த ரகம் ரூ20-8-0 தங்கமுலாமுடன் ரூ34-5 ஜுவலுடன் நீண்ட சதுரம். குரோமியம் கேஸ் ரூ 36-0-0 உயர்ந்தது ரூ 39-0-0 ரோல்டுகோல்டு 10வருஷ உத்தரவாதம் ரூ 48-0-0 உயர்ந்தது ரூ 52-0-0. 7 ஜுவல்ஸ் ரோல்டுகோல்டு ஸ்டீல் பேக் ரூ 56-0-0 லேடீஸ் சைஸ் ரூ 60-0-0 15 ஜுவல் குரோமியம் கேஸ் ரூ. 63-0-0 15 ஜுவல் ரோல்டு கோல்டு ரூ.80-0-0 தபாற்செலவு அணு 0-12-0 தனி. ஏககாலத்தில் இரண்டு கடியாரங்கள் வாங்குவோருக்கு தபாற் செலவு இனும். கேட்லாக் ஆகிவிட்டது.

THE MODERN WATCH CO. [T. M.]
P Box No. 12220. Calcutta. 5.

Truthful READY MADE CLOTHES

"டுருத்புல்"

ரெடிமேட் ஆடைகளுக்கு

- செங்கற்பட்டு
- கடப்பை
- நெல்லூர்
- சித்தூர்

ஜில்லாக்களில் பிரதான பட்டணங்களில் சப்-ஏஜென்டுகள் தேவை.

THE REX TRADING Co.
DIRECT IMPORTERS & INDENT AGENTS
20-7, GODOWN STREET, MADRAS, G.T.

COTTON REMNANTS

—ஜவுளி—

துண்டுகள்

மொத்தமாகவும் சில்லரையாகவும் விற்கப்படும்.

கூப்பன் கிடையாது

—விற்பனை ஸ்தலம்—

ரெக்ஸ் டிரேடிங் கம்பெனி

20/7, கிடங்கு தெரு

மதருஸ். ஜி. டி.

தமிழ் மணி

வாரப்பதிப்பு

சென்னை, சர்வஜித்து ஹு தை மீ 19உ (1-2-48)

மகாத்மாஜி மறைந்தார்!

அன்புக்கும் அஹிம்சைக்கும் அரும்பாடு பட்டுவந்த நமது மகாத்மா காந்தி அவர்களின் ஆன்மா வெள்ளிக் கிழமை மாலை 5 மணியுடன் அவரது உடலை விட்டுப் பிரிந்து விட்டது. பிரிந்துவிட்டது என்றால் இயற்கையாக தானே பிரிந்துவிடவில்லை. மூன்று துப்பாக்கி குண்டுகள் அவரது மார்பைத் துளைத்து அவரது ஆன்மாவை பலாத்காரமாகப் பிரித்துவிட்டது. தனது வாழ்நாள் முழுவதையும் அஹிம்சைக் காக அர்பணித்தவரும், உலகம் போற்றும் உத்தமருமான ஒருவருக்கு இத்தகைய கோரமான முடிவு நேரிட்டதென்றால், இதனை நினைக்கவும் நெஞ்சம் பதைக்கிறது. எழுத கைகூசுகிறது; "நமது மகாத்மாஜியா துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப் பட்டார்?" என்று எண்ணும்போது இந்த நிகழ்ச்சி உண்மைதானா? அல்லது, கனவா? என்ற ஐயப்பாடுகூட தோன்றித் தோன்றி மறைகிறது. இது நம்முடைய நிலை மட்டுமல்ல. இந்திய மக்கள் அனைவருடைய நிலையும் இது தான். ஏன், உலக மக்களின் நிலை என்று கூட சொல்லலாம். எங்கு பார்த்தாலும் ஏக்கமுற்ற மக்கள். என்செய்வோம் என்று கதறுகின்றனர் தலைவர்கள். இங்ஙனம் நம்மைத் துக்கக் கடலில் மூழ்கித் தத்தளிக்கச் செய்து விட்டு மறைந்து விட்டார் மகாத்மாஜி. ஆம்,-அவர் மகாத்மாதான்; அணுக்குண்டு காலத்தில் அஹிம்சையால் நாட்டை நல்வழிப் படுத்தியவர் அவரே. அவர் இன்றேல் அஹிம்சை இல்லை, அஹிம்சா தத்துவம் இல்லாதிருந்தால் இந்தியா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பிடியிலிருந்து இவ்வளவு சீக்கிரம் விடுபட்டிருக்க முடியாது. நம்முடைய நாளில் சுதந்திரத்தை நாம் அடைய முடியுமா என்றெண்ணி ஏங்கிக் கிடந்த மக்களுக்குச் சுதந்திரத்தின் சுவையை காட்டியவர் மகாத்மாதான்.

காந்திஜி இந்தியாவின் விடுதலைக்காகப் பட்ட பாடுகள் கொஞ்ச நஞ்சமல்ல. இந்தியாவின் சுதந்திரத்திரத்துக்காக மட்டுமல்ல, இந்தியர் எங்கு வாழ்ந்த போதிலும் அவர்களுடைய இன்னல்களை அகற்ற முற்பட்ட மூலப் புருஷர் அவரே. தென்னாப்பிரிக்காவில் இந்தியர் வெள்ளையரால் அவமதிக்கப்பட்டும், கொடுமை படுத்தப் பட்டும் வந்ததைக் கண்டு சகியாமல் இந்தியருக்காக வெள்ளையருடன் போராடி பலமுறை சிறைப் பட்டார். சிறையில் செருப்புத் தைக்கும் தொழிலையும் மேற் கொண்டார். வெள்ளை அதிகாரியால் பல்லுடைபட்டார். தன்னாட்டு மக்கள் மானத்துடன் வாழ வேண்டும் என்பதற்காக இத்தகைய தொல்லைகளை மேற்கொண்ட அவர், இன்று கொல்லப் பட்டாரென்றால் யார்தான் வருந்தாமலிருக்க முடியும்? மகாத்மாஜி ஒரு பாரிஸ்டர் என்ற முறையிலே உல்லாச வாழ்வு நடத்த விரும்பியிருப்பாரானால் அதனை தாராளமாக அனுபவித்திருக்கலாம். ஆனால், அவர் அதனை விரும்பவில்லை. பணி செய்து கிடப்பதே தன் கடன் என்று எண்ணினார். அப்படி எண்ணியதன் பலனாகப் பல முறை இதந் தரும் மனையை விட்டு இடர்மிகு சிறைபட்டார். இங்ஙனம் நாற்பதாண்டுகள் அவர் போராடியதன் பலனாகவே இன்று நாம் சுதந்திர மக்களாக வாழ முடிகிறது.

இந்தியா சுதந்தரமடைந்து ஆறு மாதங்களுக்குள்ளாக நமக்கு விடுதலையைத் தேடித் தந்த வீரர் அநியாயமாகச் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தியை நினைக்க, நினைக்க நெஞ்சம் துடிக்கிறது. ஐயோ! உலகுக்கே அன்பையும் அஹிம்சையையும் போதித்த அந்த உத்தமரின் உள்ளத்தைத் துளைத்துக்கொண்டு அந்தப் பாழும் துப்பாக்கிக்குண்டுகள் எப்படித்தான் பாய்ந்தனவோ! அந்த அன்பின் வடிவத்தை அழித்தொழிக்கத் துணிந்த அந்தத் துப்பாக்கிக் கள்வனின் நெஞ்சம் எவ்வளவு கொடிய இரும்பு நெஞ்சமோ தெரியவில்லையே! ஆம், இருக்கட்டும் எந்த நாட்டிலும் இத்தகைய கொடியவர்கள் இருந்துகொண்டு தானிருக்கின்றனர் அன்று ஏசுபிரான் சிலுவையில் அறையப்பட்டு சித்திரவதை செய்யப்படவில்லையா? கிரேக்க நாட்டுப்பேரறிஞர் விஷங் கொடுத்துக் கொல்லப்படவில்லையா? ஆனால், இத்தகையச் செய்திகளைச் சரித்திரங்களில் நாம் படித்திருக்கிறோமே யன்றி, நமது ஒப்பற்றத் தலைவர் மகாத்மாஜிக்கும் இத்தகைய கதி நேரிடும் என்று நாம் கனவிலும் கருதியதில்லை.

சரி, மகாத்மா நம்மை விட்டுப் பிரிந்து விட்டார். இனி நாம் அவரைக் காணப் போவதில்லை. ஆனால், அதோ அவர் நமக்குக் காட்டிச் சென்ற பாதை. அந்தப் பாதை வழியே சென்று அநீதியை அழித்து அமைதியை நிலை நாட்டுவோம். மகாத்மாஜி காண விரும்பியது அமைதி. அதற்கு அவர் அஹிம்சையைத் துணைத் தேடினார். அவருக்குக் கிடைத்தது கோர முடிவு பயங்கர முடிவு; எனவே, இனி கொடுமைகளை வேரறுப்பதே நமது கடமையாகக் கொள்ள வேண்டும். மகாத்மாஜி வெள்ளிக் கிழமை யன்று மாலை பிரார்த்தனைக் கூட்டத்திற்கு வந்து கொண்டிருந்தபோது சுட்டுக் கொல்லப் பட்டார். கொன்றவன் யார்? ஏன் கொன்றான்? என்பன போன்ற விஷயங்களை ஆராய இது நேரமல்ல. யார் வைத்த கொள்ளியாலோ வீடு வெந்து போயிற்று. இனி அதைப் பற்றிப் பேசிப் பயனென்ன? சென்ற சில நாட்களாகவே மகாத்மாஜியைக் கொல்ல சதி நடந்து வந்ததாக நினைக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில், பிரார்த்தனைக் கூட்டத்தில் குண்டு வீசப்பட்டு சில நாட்களேயாகின்றன. அதனைத் தொடர்ந்து இத்தகைய கொடுமை நடைபெற்றிருக்கிறது. இது மனித தன்மைக்கே புறம்பானது. எனவே இத்தகைய கொடிய தன்மையை இனி வளர விடக்கூடாது. இனி நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு மகாத்மாஜியின் உன்னத லட்சியங்களை ஈடேற்ற வேண்டும் அதுவே அவருக்கு நாம் செலுத்தும் நன்றியும், மரியாதையுமாகும். மகாத்மாஜியின் ஆன்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக.

காரியக் கமிட்டியின் கைவரிசை.

சமீபத்தில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி தொழிலாளர்களைப் பற்றி நிறைவேற்றியுள்ள தீர்மானம் மிக மிக வேடிக்கையானது. தொழிலாளர்கள் உற்பத்திக்கு இடையூறு செய்வது தேசத்திற்கே ஆபத்தென்றும், சமுதாயத்துக்கு சவால் விடுப்பது போலாகுமென்றும் அந்தத் தீர்மானம் கூறுகிறது இது நமக்குப் புதிய செய்தியல்ல; பட்டேல் போன்ற பிரபுக்கள் அடிக்கடி தொழிலாளர் மீது சாட்டி வரும் குற்றச் சாட்டுதான். ஆனால், இது காரியக் கமிட்டியின் தீர்மானம் என்ற உருவிலே வெளியிடப்பட்டிருக்கிறது' அவ்வளவு தான் வித்தியாசம். ஆனால், காரியக் கமிட்டியின் இத்தகைய தீர்மானத்தை நம்பி பொது மக்கள் தொழிலாளரைக் குறைகூறக் கூடாது. நாட்டு மக்களின் நல்வாழ்வில் அக்கரை கொண்டவர்கள் யாராவது இருக்கிறார்களென்றால் அது தொழிலாளர்களைத் தவிர வேறு யாருமல்ல. ஏனெனில் உழைப்பாளிகட்கே உலகம் தெரியும். உல்லாசப் புருஷர்களுக்குத் தெரியாது. அப்படியாயின் தொழிலாளர் வேலை நிறுத்தங்கள் செய்து உற்பத்திக்குப் பங்கம் விளைவிக்கின்றனரே என்று கேட்கலாம். ஆம்; முதலாளிகள் உழைப்புக் கேற்ற ஊதியத்தைக் கொடுக்காவிட்டால் தொழிலாளர் எத்தனை நாட்களுக்குத் தான் பொறுமையைப் பூஷணமாகக் கொள்வர்? அவர்களுடைய வாழ்க்கை சீர் குலையும்போது நாட்டைப் பற்றி எப்படி அவர்கள் கவலைப் படுவார்கள்? ஏன் கவலைப்பட வேண்டும் என்பதுதான் நமது கேள்வி? "தனியொருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்றார் பாரதியார். இதில் எவ்வளவு உண்மை அடங்கியிருக்கிறது என்பதை எண்ணிப் பாருங்கள் அன்பர்களே. அப்படியிருக்க லக்ஷக் கணக்கான தொழிலாளர் அரைப் பட்டினியுடன் வேலை செய்துக் கொண்டேயிருப்பர் என்று யார்தான் எதிர்பார்க்க முடியும்? காரியக் கமிட்டி இதனை உணராமல் தொழிலாளர் மீது வீண் பழி சுமத்தித் தனது கைவரிசையைக் காட்டுவது சரியல்ல, முறையல்ல, நீதியுமல்ல.

சந்தாதார்களுக்கு.

புதிய சந்தாதார்கள் மணியார்டர் அனுப்பும்பொழுது தங்களுடைய பெயரையும், விலாசங்களையும மணி யார்டர் கூப்பனில் தெளிவாக எழுதியனுப்பும்படியும் பழைய சந்தாதார்கள் கடிதம் எழுதும்போது தங்களுடைய சந்தா நம்பரையும் குறித்தனுப்பும்படியும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,
தமிழ் மணி

குளித்தலை டி. மு. கோர்ட்

O.S. 477/45

மகாமுனிமுத்ரியன் வகையரா } வாதிகள்

மருதமுத்து அம்பலகாரன் } 5-ம் பிரதிவாதி

தாவா சொத்தை பொருத்து வாதிகள் (Permanent injunction) அல்லது ஸ்வாதீனம் பிரதிய மத்யகால வரும்படிக்கு மாசூல் நஷ்டம் ரூ. 10க்கும் செய்து இருக்கும் தாவா 4-2-48ல் வாய்தா போடப்பட்டிருக்கிறது.

(ஒப்) எஸ். அண்ணாத்துரை அய்யங்கார்
வாதிகள் வக்கீல்

டம்-டம் குண்டு

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்து விட்டது. இவற்றுள் முதல் இரண்டு காரணங்களும் நமக்குத் தெரிந்த வரையில் அறிவுக்குப் பொருத்தமில்லாதவை. கடைசியாக உள்ள காரணந்தான் சரியான காரணமாக இருக்கலாம் என்பது நமது நம்பிக்கை. அதாவது ஒரு தனி கோஷ்டியின் சூழ்ச்சி. ஏன், எப்படி என்று கேட்கிறீர்களா? தமிழ் நாட்டில் நெடுநாட்களாக அந்த தனி கோஷ்டிக்கு எதிர்ப்பு இருந்து வருகிறது. அந்த எதிர்ப்பு நாளுக்கு நாள் வளர்ந்து வரும் சக்தியுடையது. எனவே, தமிழரின் இத்தகைய எதிர்ப்புச் சக்தியினின்று தம்மைக் காப்பாற்றிக் கொண்டு மேலும் தங்களுடைய ஆதிக்கத்தை நீடிக்கச்செய்ய வேண்டுமானால், இந்த எதிர்ப்புச் சக்தியை வேறு வழியில் திருப்பிவிட வேண்டும். அதற்கு ஏற்றவழி அடுத்த வீட்டுக் காரர்களான ஆந்திரர், கன்னடர், கேரளர் ஆகியோருடன் தமிழரை மோதிக் கொள்ளும்படி செய்ய வேண்டும். இதுதான் அந்த கோஷ்டியாரின் அருமையான சூழ்ச்சி! வாசகர்களுக்கு இது சற்று ஆச்சரியத்தைக் உண்டு பண்ணினாலும் பண்ணும். ஆனால், ஆழ்ந்து சிந்தித்து விட்டு, சுற்றுச் சார்புகளையும் கூர்ந்து கவனித்தால் சுலபத்தில் இந்த உண்மை விளங்கும். ஆகவே, தமிழர்கள் இத்தகைய சிக்கலான பிரச்னைகளை தீர்க்கும் விஷயத்தில் சற்று முன் ஜாக்கிரதையுடன் நடந்து கொள்ளவேண்டும், ஆச்சாரியார் கோஷ்டி என்ற ஒரு தனி கோஷ்டி இருந்துகொண்டு தமிழர் நலத்துக்கு எதிரான காரியங்களில் ஈடுபட்டு வருகிறது என்பதை என்றும் மறந்துவிடவேக் கூடாது. தமிழ் நாட்டின் எந்த மூலையையும் யாரும் பிட்டுக்கொண்டு போய்விட மாட்டார்கள். போகவும் முடியாது. அப்படியாராவது முயற்சி செய்வார்களானால் அதற்குப் பதில் நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை சர்க்காரிடமே விட்டுவிட வேண்டும். "எய்தவன் இருக்க அம்பை நோகலாகாது" என்ற பழமொழிக்கேற்ப தமிழர் தமக்கு நேரும் கஷ்ட நஷ்டங்களுக்குக் காரணம் யார்? அல்லது, எது? என்பதை ஆராய்ந்து பார்த்து அதனை ஒழிக்க வேண்டும். இதே சமயத்தில் சூழ்ச்சி செய்யும் கோஷ்டியினருக்கும் நாமொன்று கூறுகிறோம். ஒரு காலத்தில் ஒரு சிலரை ஏமாற்றலாம்; பல காலத்தில் பலரை ஏமாற்றலாம்: ஆனால் எல்லோரையும் எக்காலத்திலும் ஏமாற்ற முடியாது. தமிழர் இன்று விழித்துக் கொண்டனர். தம் நாடு, தம் இனம் என்ற பற்று கொண்டிருக்கின்றனர். அப்படிப் பட்டவர்களிடம் சூழ்ச்சிகள் செல்லாது என்பதைத் திட்டமாகத் தெரிவித்து விடுகிறோம்.

கீழ்க்கண்ட ஊர்களுக்கு ஏஜண்டுகள் தேவை

1. மானாமதுரை.
2. திருப்புவனம்.
3. அரகண்டநல்லூர்.
4. பல்லகனூத்து.
5. ஆண்டிப்பட்டி.
6. இளுடையூர்.
7. புத்தூர்.

விபரங்களுக்கு:—
மானேஜர்
தமிழ் மணி
சென்னை 1.



ஏன் இந்த கொசுக்கடியும் - - மூட்டைப்பூச்சிக் கடியும்?

பிரான்சுக்குப் புத்திவருமா?

மேற்கு ஐரோப்பாவும், கிழக்கு ஐரோப்பாவும்

கொசுக்கடியும், மூட்டைப்பூச்சிக் கடியும் பொல்லாதவை. இவை மனிதனுக்குத் தொந்தரவு கொடுத்துக்கொண்டேயிருக்கின்றன. தேள், பாம்பு போன்ற விஷ ஜந்துக்களைவிட, இந்த கொசு, மூட்டைப்பூச்சி முதலியன தரும் தொல்லை சகிக்க முடியாததாகும். தேளையும், பாம்பையும்கூட சுலபத்தில் ஒழித்துக்கட்டி விடலாம். ஆனால், இந்த சின்னஞ்சிறு சிறுசிகளின் அட்டகாசத்தை அடக்குவதுதான் சிரமம். அவைகளுடைய குறும்புத் தனம் அவ்வளவு மகத்தானது. இப்படிப்பட்ட தொல்லை இந்தச் ஜந்துக்களோடு மட்டும் நின்றுவிடவில்லை. அரசியல் உலகிலும் இப்படிப்பட்ட கொசு, மூட்டைப்பூச்சிகள் இருந்துகொண்டு தானிருக்கின்றன. வல்லரசுகள் என்று அழைக்கப்படும் அமெரிக்கா, பிரிட்டன், ரஷிய போன்ற நாடுகள் சண்டைக்காய் ராஜ்யமான ஜப்பானிடம் பட்ட பாடுகளே இதற்குப்போதிய சான்றாகும். ஆனால் கடைசியில் ஜப்பான் சரணாகதியடைய நேர்ந்தது என்பதை நாம் மறக்கவில்லை. அதுபோலவே, ஐரோப்பிய சிற்றரசுகளான பிரான்சு, ஹாலந்து போன்ற நாடுகள் ஆசியாவில் தமது காலை ஆட்டிக்கொண்டிருக்கின்றன. இந்தோசீனாவில் பிரஞ்சு சர்க்காரும், இந்தோனேஷியாவில் டச்சுசர்க்காரும் செய்துவரும் ஆர்ப்பாட்டங்களைப்பற்றி வாசகர்கள் அறிவர். ஆகவே, அதைப்பற்றிமீண்டும் சொல்லத்தேவையில்லை. இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்னையைப்பற்றி இப்போது கவனிப்போம். கடந்த ஆகஸ்ட 15ல் இந்தியா சுதந்திரம் அடைந்தது முதல் பாகிஸ்தானவாலாக்களால் தொல்லை, சுதேச மன்னர்களால் தொல்லை ஆகியதொல்லைகள் ஒன்றின்பின் ஒன்றாக தொடர்ந்துகொண்டேயிருக்கின்றன. இவற்றுள் பாகிஸ்தான் தொல்லை படைபலத்தைக்கொண்டு சமாளிக்க வேண்டியதாகும்; சுதேச மன்னர்களால் ஏற்படும்தொல்லை பேச்சு வார்த்தைகள் மூலமும், ஒப்பந்தங்கள் மூலமும் சமாளிக்கப்பட வேண்டியதாகும். ஆனால், இவை எல்லாவற்றையும்விட இப்பொழுது கவனிக்கப்பட வேண்டிய மற்றொருபிரச்னை பிரஞ்சிந்தியப் பிரச்னையேயாகும். சுதந்திர இந்தியா என்னும்பஞ்சணையில் வீற்றிருக்கும் மக்களில் சிலருக்கு பிரஞ்சு சர்க்காரின் ஆட்சிமூட்டைப்பூச்சி கடிக்கும், கொசுக்கடிக்கும்ஒப்பாக இருந்து வருகிறது.

பரிதாபம்!

இந்தியாவில் புதுச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனாம், சந்திர நாகூர் என்னுமிடங்கள் இன்னமும் பிரஞ்சு சர்க்கார் ஆட்சியின் கீழிருந்து வருகிறது. இந்தியா சுதந்திரமடைந்துவிட்டபிறகு இம்மாதிரி மூலைக்கு மூலை திருஷ்டிப்பரிகாரம்போல் ஒரு சண்டைக்காய் ராஜ்யத்தின் ஆட்சி நடைபெறுமானால், அதனை இந்தியா சகித்துக்கொண்டிருப்பது முடியாதகாரியமாகும். பிரான்சுக்கு நல்லபுத்தியிருந்தால் பிரிட்டிஷ்ஆட்சி இந்தியாவைவிட்டு வெளியேறப்போகிறது என்பதைத் தெரிந்துகொண்டவுடனேயே தான் முன்னதாக வெளியேறியிருக்க வேண்டும். அப்படிசெய்ய மனமில்லையானால், பிரிட்டிஷ் ஆட்சி வெளியேறிய பிறகாவது தானும் வெளியேறியிருக்கவேண்டும். ஆனால் பிரஞ்சு சர்க்காருக்கு இன்னமும் இத்தகைய நல்லபுத்தி தோன்றவேயில்லை. அதற்கு மாறாக பிரஞ்சிந்திய பகுதிகளைவிட்டு வெளியேறாமலிருக்க என்னென்ன சூழ்ச்சிகளெல்லாம் செய்யலாமோ அவற்றையெல்லாம் செய்துவருகின்றனர். பிரஞ்சிந்தியாவுக்கு ஏதோ புதிய சீர்திருத்தம் வழங்கப்போவதாக பறைசாற்றுகின்றனர். இது சுத்தப் பித்தலாட்டமேயன்றி வேறில்லை. சீர்திருத்தம் வழங்குவதன் மூலம் இன்னும் கொஞ்சகாலம் நமது ஆட்சியை நீடிக்கச் செய்யலாம் என்பது அவர்களுடைய எண்ணம். ஆனால், பிரஞ்சிந்திய மக்கள் பிரஞ்சு சர்க்காரின் எந்த சீர்திருத்தத்தையும் விரும்பவில்லை. பிரஞ்சு ஆட்சியிலிருந்து விடுபட்டு இந்திய யூனியனுடன் சேர்ந்து வாழவேண்டும் என்பதுதான் அவர்களுடைய கோரிக்கை. சமீபத்தில் புதுச்சேரியில் கூடிய அகில பிரஞ்சிந்திய மக்களின் மகாநாடு இதனை நன்கு எடுத்துக்காட்டிவிட்டது. ஆகவே, இப்படிப்பட்ட மக்களிடம் இனி பிரஞ்சு சர்க்காரின் ஜம்பம் சாயாது என்பது நிச்சயம். இனி அடக்குமுறை செல்லாது என்பதை உணர்ந்தபின் சீர்திருத்தம் வழங்கப்போவதாகச் சொல்லி தந்திரம்செய்ய ஆரம்பித்திருக்கின்றனர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் அன்று இதே வேலையைத்தான் மேற்கொண்டது. ஆனால், அதன் முடிவு என்னவாயிற்று என்பதைக் கண்ணாரக் கண்டிருந்தும் சூழ்ச்சி முறையைக் கையாளும் பிரஞ்சு சர்க்காரின் பேதமையை நினைத்துப் பரிதாபப் படுவதை தவிர வேறென்ன செய்வது?

பிரான்சுக்கு எச்சரிக்கை!

எனவே இனியும் தமது ஏகாதிபத்திய ஆசையை விடாப்பிடியாக பிடித்துக் கொண்டிராமல் ஆட்சியை 'இந்தியரிடம்' ஒப்படைத்துவிட்டு மரியாதையாக வெளியேறுவது நல்லது என்று பிரான்சுக்கு எச்சரிக்கை விடுகிறோம். பிரான்சுசர்க்கார் பிரதிநிதிகள் இந்திய யூனியன் பிரதமரைச் சந்தித்துப்பேசப் போவதாகச் சொல்லப்படுகிறது. அப்படி பேசும் போது வீணான பேச்சுக்கள் பேசாமல் "விட்டு விட்டு போகிறோமய்யா" என்ற ஒருவார்த்தையில் சுருக்கமாக சொல்லி விட்டு வெளியேற முயலுவதுதான நல்லது, என்று பிரான்சு சர்க்கார் பிரதிநிதிகளுக்கு அறிவுறுத்துகிறோம். இந்த அறவுரையை ஏற்று நடந்தால் பிரான்சு சர்க்காருக்கும் நல்லது; பிரஞ்சிந்திய மக்களுக்கும நல்லது இல்லையேல் பிரஞ்சிந்திய மக்கள் தமது உரிமையைப் பெற போராட வேண்டிய நிலைஏற்படும். அப்படிப்பட்டநிலை ஏற்பட்டால் சண்டைக்காய்ராஜ்யமான பிரான்ஸ் அதனை சமாளிக்கமுடியாது என்பது திண்ணம். ஏற்கனவே போர்ச்சுக்கலின் ஆதிக்கத்தினின்று விடுபட கோவா மக்கள் போராடிக்கொண்டிருக்கின்றனர். இச்சமயத்தில் பிரஞ்சிந்தியாவிலும் போராட்டம் ஆரம்பிக்கப்படுமானால் எந்த அன்னிய ஆட்சியும் தூள் தூளாக்கப்படும். இருநூறு ஆண்டுகளாக அடக்குமுறைகளை கையாண்டு அலுத்துப்போய், பிறகு சூழ்ச்சி முறைகளைக்கையாண்டு பார்த்து தோல்வியுற்று கடைசியாக மரியாதையாக வெளியேறியது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம். ஒருபெரிய ஏகாதிபத்தியத்திற்கே இத்தகைய 'கதி' ஏற்பட்டதென்றால் இந்த சண்டைக்காய் ராஜ்யத்தின் 'கதியை' பற்றி சொல்ல வேண்டியதே இல்லை. இத்தராஜ்யங்கள் ஆடிக்காற்றில் அகப்பட்ட இலவம்பஞ்சுகளாகும் என்று எச்சரிக்கிறோம்.

மேற்கும் கிழக்கும்

ஐரோப்பிய வல்லரசுகள் ரஷியாவுக்கு எதிராக சதி செய்துவருகின்றன. [illegible] ஐரோப்பிய நாடுகளைக்கொண்டே இந்த வல்லரசுகள் தமது ஆதிக்கத்தை ஐரோப்பா முழுவதும் பரப்ப முயலுகின்றன. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் யூனியனை அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகி விட்டன என்று பிரிட்டனின் வெளிநாட்டு மந்திரி தோழர். பெவின் விளக்கமாகக் கூறிவிட்டார். எனவே, மேற்கு ஐரோப்பிய நாடுகளில் யூனியன் அமையப் போவது நிச்சயமாகிவிட்டது. இந்த யூனியனில் தற்போது சம்பந்தப்படும் நிலைமையிலுள்ளவை பிரிட்டன், பிரான்ஸ் பெல்ஜியம், ஹாலந்து, லக்ஸம்பர்க் ஆகிய நாடுகளே என்பதையும் தோழர் பெவின் தெளிவாகக் கூறிவிட்டார். இப்படி யூனியனில் சேரும் நாடுகளுடன் அந்த நாடுகளின் காலனி நாடுகளும் சேருவது திண்ணம். இதனால் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் யூனியன் கூடியானவரையில் பலம் பொருந்தியதாகவேயிருக்கும், ரஷியாவின் முயற்சிக்குப் போட்டி முயற்சியைக் கண்டு சர்ச்சில்துரை பரவசமடைகிறார், செயற்கரிய இந்த காரியத்தை தொழிற்கட்சியார் மேற்கொண்டிருப்பதால் சர்க்காருக்குத் தனது கட்சி பூரண ஆதரவளிக்குமென்று கூறுகிறார் சர்ச்சில். அமெரிக்காவும் இந்த முயற்சியை முழுமனதோடு ஆதரிக்கும் என்பதில் ஐயமில்லை. சரி, எப்படியோ ரஷியாவுக்கு எதிராக ஒரு கூட்டு முன்னணி அமைக்கும் வேலை ஆரம்பமாகிவிட்டது. இப்படிப் பட்ட கூட்டுறவின் மூலம் மற்றொரு யுத்தம் நேரிடாதபடி தடுத்து விடலாம் என்பது பிரிட்டிஷ் பிரதமர் தோழர், அட்லியின் நம்பிக்கை. ஆனால், அட்லிதுரையின் இந்த நம்பிக்கை நிறைவேறுமா என்பதுதான் சந்தேகம். ஏனெனில், இந்த மேற்கு ஐரோப்பிய யூனியனைக் கண்டு ரஷியா பயந்து விடப் போவதில்லை. ரஷியா ஏற்கனவே கிழக்கு ஐரோப்பிய யூனியனை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. ஆகவே, இது கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதையாகவே முடியப் போகிறது.

நகைப் பெட்டிகள்
& அட்டை
பெட்டிகள்
தயாரிப்பவர்கள்
C. E. ராஜன்
& பிரதர்ஸ்
நெ. 84, எழுகிணறு தெரு, மின்ட்-
போஸ்ட் G. T. மதராஸ்.

உங்கள் பற்களைப் பாதுகாக்க வேண்டுமானால்

பெப்ஸோடென்ட் டூத் பேஸ்ட்டை

(**PEPSODENT**)

உபயோகியுங்கள்.

U. S. A. சிக்காக்கோவிலுள்ள லிவர் பிரதர்ஸ் கம்பெனியாரின் பெப்ஸோ டென்ட் டிவிஷனின் சிறந்த தயாரிப்பு!!

பெரிய அளவு டஜன் ஒன்றுக்கு ரூ. 12-8-0

நடுத்தர அளவு „ „ ரூ. 8-6-0

ஆர்டர்களுக்கு முன்பு 25 சத விகிதம் முன்பணம் அனுப்ப வேண்டும். குறைந்த அளவே கைவசம் உள்ளது.

அனுப்பும் செலவு தனி.

கிடைக்குமிடம்:—

Vee Vee & Company.

2/78 Broadway, Madras 1.

தமிழர்களுக்குச் சோதனை

சி உமைதாணு

இன்றைய ஆட்சிபீடத்தின் கைவரிசை, மக்கள் வாழ்வை சோதித்து வருகிறது. இந்தச் சிக்கலில் அதிகம பாதிக்கப்பட்டு வருவது, தமிழ்பெரும் மக்கள். காரணம் கேட்டால் பற்பலசொல்லி மேலும், மேலும் சிக்கல்களையே, ஏற்படுத்துகிறார்கள் அரசாங்கத்தார்கள். கூக்குரல்போட்டால், "சமூக அமைப்பால் ஏற்பட்ட கேடு" என்ற, ஓரே வேகாந்த தத்துவத்தால் ஒட்டையை அடைக்கின்றனர். தமிழர்கள் என்று குறிக்கும்போது, அதிகம் பாதிக்கப்பட்டிருப்பது திருவிதாங்கூர் தமிழர்கள் என்பதை தவறியும் மறந்துவிடாதீர்கள்.

மன்னர் ஆட்சியில் மங்கிக் கிடந்த திருவாங்கூரில் இனி மக்கள்ஆட்சி பொங்கிநிற்கப்போகிறது "அவன் வகுக்கும் அரசியல் எங்களுக்கு வேண்டாம். எங்களை நாங்களே ஆள, எங்கள் அரசியலை, நாங்களே நிர்ணயித்துக் கொள்வோம் என்ற, அடிப்படையில் பொறுப்பாட்சி கிடைத்துவிட்டது. அரசியல் நிர்ணயசபைக்கு ஆள் பொறுக்கவும் ஆரம்பித்துவிட்டார்கள். கதையை இனிமேல் கவனமாக கேளுங்கள்.

தேர்தல் முழக்கம் டம்மாரமிடத் தொடங்கிவிட்டது. அரசியல் கட்சிகள் தங்கள் அபேட்சகர்களை மக்கள் மத்தியில்கொண்டுவர ஆரம்பித்துவிட்டன. "அதைச் செய்வோம் இதைச் செய்வோம்" என்று கர்ஜிக்கத்தொடங்கிவிட்டனர் அபேட்சகர்கள். ஆட்டங்காணும் மக்கள் மனதை ஆட்டிப் பார்க்கும் சுயேட்சை கட்சியினரும் கச்சைகட்டிதான் பார்க்கின்றனர். இவ்வளவு திருக்கூத்துக்களும் திருவாங்கூரில் இன்று நடைபெற்று வருகிறது. "மழையில்லை! உணவில்லை! உடுக்க உடை இல்லை. குடிக்க கூழில்லை" என்ற ஏக்கத்தில் கொந்தளிக்கும் மக்கள் கூட்டம் ஒருபுறத்தில் வானத்தைப் பார்த்து நிற்கிறது. எல்லா கட்சிகளும் இந்தக் கூட்டத்தைக் குறித்து வாய்பேச்சு பேசுகிறதே ஒழிய, காரியத்தில் கவனம் செலுத்தப்படவில்லை.

திருவிதாங்கூரில்நடைபெறப்போகும் தேர்தலை,ஏதோ ஒரு பொறுப்பற்ற அரசியல்கூத்து என்று புறக்கணித்துவிடமுடியாது. "வாழவழி வகுக்கவேண்டிய கட்டம். அதற்கென அரசியல் முறுக்கேறிய கூட்டம்! அக்கூட்டம் தயாரிக்கும் திட்டம்!" இதுதான் வரப்போகும் தேர்தல்மூலம் நமக்குக் கிடைக்கும் அதிர்ஷ்டம், ஆகவே இந்தத் தேர்தலில் திருவிதாங்கூரிலுள்ள அறுபத்தைந்து லட்சமும் அறிந்து நடக்கவேண்டிய பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது.

திருவிதாங்கூரில் இரண்டு முக்கிய இனங்கள் இருக்கின்றன. ஒன்று மலையாள இனம். மற்றொன்று நமது தமிழர் இனம் அந்த இரு இனங்களும் ஒன்றோடொன்று மோதாமல், சுரண்டாமல், நசுக்காமல் சகோதர இனங்களாக வாழவேண்டும். மலையாள இனத்தைப் பிரதிநிதி வகிக்க மலையாள நாடு காங்கிரஸ் இருக்கவே இருக்கிறது. தமிழர்களுக்கு தங்களது த. நா. காங்கிரஸ் இருந்து வருகிறது. தேர்தலில் இரு கட்சிகளும் பிரதிநிதிகளை நிறுத்தி இருக்கின்றன. திருவிதாங்கூர் தமிழ்நாட்டில், எங்குபார்த்தாலும, 'தமிழ் மாகாணம்' 'தமிழரசு' என்ற கோஷம் ஓரேமுகமாக கூவப்பட்டு வருகிறது. இது மலையாளிகளுக்கு மனக்கசப்பை உண்டாக்குகிறது. தமிழர்களை எப்படியாவது சின்னபின்னப்படுத்தி, அவர்கள் மீது சவாரி செய்யவேண்டுமென தீர்மானித்துவிட்டார்கள். இதற்கு பக்கபலமாக ஒன்றிரண்டு, தமிழர் "சோவாரி"களை தங்கள் கைக்குள் ஆக்கி இருக்கின்றனர். கூலிக்கு மாரடிக்கும் தமிழர்கள் இனியும் இருக்கிறார்கள் என்பதை எழுதவே வெட்கமாகத்தான் இருக்கிறது. என்ன செய்வது?

பித்தலாட்டத்தை கேளுங்கள். திருவிதாங்கூர் தமிழ் பிரதேசத்தில் தி. த. நா. காங்கிரஸிற்கு எதிராக, ஸ்டேட் காங்கிரஸ்காரர்கள் சில 'குருட்டுக் குதிரை'களை நிறுத்திக் கூத்துப் பார்க்கிறார்கள். பொள்ளாச்சி சந்தைக்கு நான் ஒருசமயப் போக நேர்ந்தது. மாட்டுத்தாவணிக்குப் பெயர்போன நகரம். அங்கு தரகர்கள் என்ன செய்கிறார்கள்.தெரியுமா? நூறுரூபாய்பெறும் மாட்டை இருநூறுரூபாய் என்று கூறுவார்கள். என்னப்பா! இருநூறு ரூபாய் கூறுகிறாய். நூறு ரூபாய்கூட பெறாதே என்றால், பக்கத்தில் நிற்கும் தன் மகன் தலையில் கை வைத்து இது ஆணையாக "இருநூறு ரூபாய்தான்" என்று சத்தியம் செய்துவிடுவார்கள்; அந்தப பொல்லாத தரகர்கள். நாமும் நம்பி ரூபாயைக் கொடுத்துவிடுவோம. ஆனால், தரகன் யார்மீது ஆணை இட்டான்தெரியுமா? மகன் மீதல்ல! மகன் தலையில் ஒரு மசால் வடையை மறைத்து வைத்திருப்பான். அந்த மசால் வடையைத்தான், தன் ஆணைக்கு பலி இட்டிருப்பான். இதே கணக்கைத்தான் இன்று ஸ்டேட் காங்கிரஸ் திருவிதாங்கூர் தமிழ் பிரதேசத்தில் போட்டுவருகிறது. தரகர்கள் உபயோகித்துவரும் மசால் வடைக்கு பதிலாக, திருவிதாங்கூர் தமிழ்நாட்டில் ஸ்டேட் காங்கிரஸ் கட்சியினர், சில ஏமார்ந்த ஆத்மாக்களை, எலக்ஷெனில் நிறுத்தியிருக்கின்றனர். அபேட்சகர்களுக்குகிடைக்கும் தோல்வி, ஸ்டேட் காங்கிரஸின்தோல்வி அல்ல என்றும் பிரசாரம் ஆரம்பமாகி வருகிறது.

திருவிதாங்கூர் தமிழர்களுக்கு, வரப்போகும் தேர்தல், ஒருமுக்கியமான அத்தியாயமாகும். ஒவ்வொரு தமிழனும தனமானத்தை கண்ணென கருதவேண்டிய கட்டம் இதுதான் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் அபேட்சகர்களைத் தவிர, வேறுகட்சியினருக்கு ஓட்டுப்போடுவதும், கழுற்றில் கயற்றைக்கட்டி தற்கொலை பண்ணுவதும் ஒன்றுதான்.

தி. த. நா. காங்கிரஸிற்கு--ஓட்டுப்போட்டால்...?

தனித்தமிழ் மாகாணம் உடனேயே கிடைக்கும. மாகாணம் கிடைக்கவில்லையானல் உடனடி போராட்டம் ஆரம்பமாகும். பொன்னான புறநானூறும், அழகான அகநானூறும், திவ்வியமான திருக்குறளும காப்பாற்றப்படும். உழைபபவனுக்கு உணவு, உடை, வீடு, உண்டுகளிக்கும் குடைவண்டி, கூட்டத்துக்கு சாவுமணி அடிக்கப்படும். தமிழனுக்கு தனி அந்தஸ்து கொடுக்கப்படும். தமிழ் பிரதேசங்களில் தமிழ் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப் படுவார்கள். தமிழ் தாலுகாவிலுள்ள விளைபொருள்கள், அத் தாலுக்காக்களுக்கு போக உள்ள மீதியைத்தான, அடுத்த தாலுகாக்களுக்கு அனுப்பப்படும. தமிழ் இனத்தின உயிர்நாடி பலப்படுத்தப்படும்.

ஸ்டேட் காங்கிரஸிற்கு--ஓட்டுக் கொடுத்தால்...?

தமிழ்மாகாணம், மயானகாண்டமாகமாறும். மலையாள ஆதிக்கம் மறுகால் எடுக்கத்தொடங்கிவிடும். இரவுபகல் பாராமல் இடுப்பொடிய பாடுபடும் தமிழர் கூட்டத்தின் 'சக்தி' எத்திவாழும் கயவர் கூட்டத்திற்கு பயன்பட்டுவரும். தமிழ் பாழாகும், தமிழர் அலக்கழிந்து ஒழிவர். தமிழ்நாடு, செல்லரிக்கப்பட்டு, புல் பூண்டு வளர்வது கண்கூடாகும். நாஞ்சிநாடு நஞ்சினும் கொடியதாகிவிடும். தமிழ் கலை , பண்பாடு, நாகரீகம் யாவும் ஏலம் விடப்படும். தமிழர்களை நாக்கில் நரம்பில்லாது ,மடையர்கள்' என்று கூறியபட்டம் இடுவது சட்டமாகும். போடுவதுயாவும் தமிழர்களை நசுக்கும் திட்டமாக முடியும்.

ஆகவே தமிழர்களே !

இப்பொழுது தீர்ப்புக்கூறுங்கள். கல்குளம், விளவங்கோடு தாலுக்காவில் 'செருப்பில் விழுந்து [illegible]க்கும்' தமிழர்களை மனதில் நினைத்து நியாயம்கூறுங்கள். நமது ஓட்டு யாருக்கு? சந்தேகமில்லாமல் தமிழ்நாடு காங்கிரஸிற்கு தான் என்பதை எவராலும்.மறுக்க முடியுமா? ஸ்டேட் காங்கிரசுக்கு பக்கபலமாக அரசாங்க அதிகாரிகள் போதை மயக்கத்தில் ஏதாவது கூறினால் புத்தி தடுமாறிவிடவேண்டாம்.

நாராயணி அம்மையார் யார்,எப்படிப்பட்டவர் என்பதை நன்றாகத் தெரிந்திருந்தும் அந்த அம்மையாருக்கு ஓட்டளிக்கும் அளவுக்கு தமிழர்கள் மூளை பாழாகிவிடவில்லை. தியாகத்தில் பிறந்தோம் என்று திக்காரமாகப் பேசும் ஸ்டேட் காங்கிரஸ் திருக்கூட்டம் தங்கள் பிரதிநிதியாக நாராயணி அம்மையாரை நிறுத்தியிருப்பதற்காக அவர்களுக்குநாம் தீர்ப்பு கூறவேண்டாமா? வெட்கப்படுமளக்கு நாம் விஷபத்தை வெட்டவெளிச்சமாக்கவேண்டும்.

"எங்கள் ஓட்டுதமிழ்நாடு காங்கிரஸிற்கே" என்பதுதான் இன்று நமது அடிவயிற்றிலிருந்து கிளம்பவேண்டிய வெற்றி நாதமா இருக்கவேண்டும். எதுவந்தாலும் எங்கள் ஆணையை அசைக்க முடியாது குறளைதந்த வள்ளுவருக்குத் துரோகம செய்யமாடடோம். பாடிய வாய் தேனூறவைத்த பாரதியின் தீங்கனிப்பாடலை "பாட்டம்" கொடுக்க சம்மதியோம். நமது நரம்புக்கு முறுக்கேற்றி நாட்டுப்பற்றில்கிறுகிறுக்கவைத்த நாமக்கல்லாரை தந்துதவிய தமிழகத்தை சிதற விடமாட்டோம். அழகு தமிழில், ஆழ்ந்த கருத்துடன் அறைந்து அறைந்து, நீதிநெறிமுறையை; கூறிவரும் கவிமணி தேசிகவிநயகத்தின் கவிப்பெருமையை எண்ணி எண்ணி இறுமாந்திருக்கும் தமிழர்களுக்கு எந்தக்கட்சியாலும் உலைவைக்க முடியாது.புரட்சிக் கவி பாரதிதாசனின் கனல்கக்கும் போதத்தை மறக்கமுடியுமா?

நமது நாட்டை நாம் ஆள, நமது ஓட்டை நமது தி. த. ந. காங்கிரஸ் அபேட்சகர்களுக்குக் கொடுப்போமாக.

வாழ்க தமிழ்நாடு
வாழ்க தமிழர்
திருவிதாங்கூர் தமிழ் நாடு
காங்கிரஸுக்கு ஜே!

உண்மையான தேவ ஔஷதங்கள்

அனுபவமானவை! நம்பிக்கையானவை !!

பழனி சி. எம். சாமி. மருந்துகள்.

(அசல்) **தங்க பஸ்பம்** :—வாலிபருக்கு ஏற்றது ; வயோதிகருக்குத் தகுந்தது, நோயாளருக்கு உகந்தது. சகல வியாதிகளையும் நீக்கி வலிமையையும், இன்பத்தையும் ஊக்கத்தையும், வாலிபத்தன்மையும, ரத்தவிருத்தியையும் உண்டாக்கும்.

24-நாள் பஸ்பம் விலை ரூ. 20-0-0

குருபஸ்பம் (க்ஷயரோக நிவாரணி) இது ஓர் அற்புத சஞ்சீவி காசம, க்ஷயம, இளைப்பு, (தொய்வு) இருமல், தும்மல், கோழை, கபக்கட்டு, மார்ச்சளி, மூச்சடைப்பு, சுரம், ரத்தம் வருதல் இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் குணமடையும். இதற்கு சமமான மருந்து கிடையாது.

24-நாள் பஸ்பம் அனுபானத்துடன் ரூ. 20-0-0

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி S.I.

துணுக்குச் செய்திகள்

—*—

லண்டனில் தமிழ்ச்சங்கம்

[விக்டர் கார்டன்]

'தேமரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகைசெய்தல் வேண்டும்' என்ற உணர்ச்சிமேலீட்டால் லண்டனில் வசிக்கும் தமிழ் மாணவர்கள் ஒன்றுகூடி லண்டனில் ஒரு தமிழ்ச் சங்கமொன்றை நிறுவியுள்ளனர். இச் சங்கத்தில் லண்டனிலுள்ள சகல தமிழ் மாணவர்களும், இலங்கையிலிருந்து வந்துள்ள மாணவர்களும், தமிழ் மொழியில் ஆர்வம் கொண்டுள்ள இதரர்களும் அங்கத்தினராகச் சேர்ந்துள்ளனர். இச்சங்கம் கடந்த சில வாரங்களுக்கு முன்புதான் நிறுவப்பட்டதெனினும், இதன் அங்கத்தினர்களின் தொகை நூற்றைம்பதையும் தாண்டிவிட்டது.

லண்டனில் இதற்குமுன் ஒரு தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டதெனினும், இரண்டாம் உலக மகாயுத்தத்தின் காரணமாக அச்சங்கத்தின் அலுவல்கள் தடைப்பட்டன. அச்சங்கமே தற்போது புத்துயிர் பெற்றுள்ளது. லண்டனிலுள்ள தமிழ் மாணவர்களும் தமிழ் மொழியில் ஆர்வமுள்ளவர்களும் ஒன்றுகூடும் 'சந்திப்பு நிலைய'மாகவும் இத்தமிழ்ச் சங்கம் விளங்குகிறது.

லண்டனில் ஒரு தமிழ்ச் சங்கம் அவசியமென்பதை உணர்ந்து அதை நிறுவும் பணியிலும் பெரும்பங்கு ஏற்றுக்கொண்ட திரு. எஸ். செல்லசாமி இதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். "சிறந்த இலக்கியங்களைத் தன்னகத்தே அடக்கியுள்ளதும் மிகப் பழமையானதுமான தமிழ் மொழியின் மகத்துவத்தை பிரிட்டிஷ் மகாஜனங்களுக்கு எடுத்துரைக்கவும், தமிழ் மொழியில் அவர்களுக்கு ஆர்வத்தை உண்டாக்கவும் நாங்கள் விரும்புகிறோம்" என திரு. செல்லசாமி எனக்களித்த ஒரு பிரத்தியேக பேட்டியில் கூறினார். பொதுவாக சகல தமிழ்த் திருநாட்களும் இச்சங்கத்தாரால் கொண்டாடப்படுகின்றன.

மொழிபெயர்க்கும் பணி

'சென்றிடு வீரெட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்ற கவிக்கிணங்க பிரிட்டனிலுள்ள சகல வைத்திய சட்ட நூல்களையும் தமிழில் மொழிபெயர்க்கும் அரும்பெரும் பணியையும் லண்டன் தமிழ்ச் சங்கம் மேற்கொள்ளலாமென திரு. செல்லசாமி வெளியிட்டுள்ளார். அத்துடன் பிரிட்டிஷ் வானொலி நிலையம் (பி. பி. ஸி.) கீழ்த்திசை நாடுகளுக்கென ஒலிபரப்பும் தமிழ் நிகழ்ச்சிகளிலும் இச்சங்கத்தின் அங்கத்தினர்கள் பெருமபங்கு பற்றுவார்கள்.

தமிழ்ச் சங்கத்தின் மாதாந்திரக் கூட்டங்களில் உபந்நியாசங்கள் செய்வதற்காகப் பிரிட்டனிலுள்ள தமிழ்க் கலைஞர்களை அழைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பிஷப் ஒகியல் அவர்கள் தமிழ்ச் சங்கத்தின் முதலாவது மாதாந்திரக் கூட்டத்திற்குத் தலைமைவகித்து சொற்பொழிவாற்றுவார்.

திரு. ஏ. அளகப்பன் இச்சங்கத்தின் காரியதரிசியாவார். பிரிட்டனின் இதர பகுதிகளில் வசிக்கும் தமிழர்களுக்கென பிரிட்டனிலுள்ள இதர சகல நகரங்களிலும் விரைவில் இம்மாதிரித் தமிழ்ச் சங்கங்கள் நிறுவவும் லண்டன் சங்கம் ஆலோசித்து வருகிறது. லண்டன் தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சியில் ஆர்வம் கொண்டுள்ள இதரர்கள் இதை ஆவலுடன் வரவேற்பார்களென்பதில் ஐயமில்லை.

வளர்க தமிழ்ச் சங்கம்!

கைத்தொழிலுக்குதவும் தெருக்குப்பை

கழிவுப் பொருள்களை ஒன்று திரட்டுவதற்கான ஒரு தேசிய இயக்கம் பிரிட்டன் முழுவதும் ஆரம்பமாக விருக்கிறது. இவ்வியக்கத்தை வெற்றிகரமாக அமல் செய்ய வர்த்தக போர்டர் பல திட்டங்களைத் தயாரித்து வருகின்றனர்.

பிரதி வருடமும் பிரிட்டனில் சுமார் 200 000 டன் நிறையுள்ள காகிதம் கழிவு செய்யப்படுகிறது. இதை ஒன்று திரட்டி மறுபடியும் கூழம்பாக்கினால் காகிதப் பைகள், வீடுகளின் கூரைக்கும் சுவர்களுக்கும் உபயோகப்படுத்தப்படும் காகிதப் பலகைகள் முதலியன தயாரிப்பதற் கேற்ற மூலப் பொருளாகிவிடும். ஒரு டன் நிறையுள்ள காகிதத்திலிருந்து 12 இல்லங்களுக்குத் தேவையான காகிதப பலகைகளைத் தயாரிக்க முடியும்!

யுத்த காலத்தில் ஸ்தலஸ்தாபன அதிகாரிகள் பிரதி வருடமும் சுமார் 500 000 டன் நிறையுள்ள கழிவுப் பொருள்களைச் சேகரித்து வந்தனர். 1947 ௵ அக்டோபர் 30௳ முடிய சேகரிக்கப்பட்ட கழிவுப் பொருள்களின்நிறை 1 90 000 டன் இது 1944 ௵ த்தைவிட மிக அதிகமானது. கடந்த எட்டு வருடங்களில் (1939—47) மட்டும் பிரிட்டனில் சேகரிக்கப்பட்டகழிவுப் பொருள்களின் மொத்த நிறை 11,000,000 டன். இதன மதிப்பு 28,000.000 பவுன்.

இம்மொத்த நிறையில் காகிதத்தைத் தவிர எலும்புத் துண்டுகளும். சமயவறைகளில் வீணாகும் பொருள்களும் அடங்கும். எலும்புத்துண்டுகளிலிருந்து உரம், கோந்து, சோப்பு முதலியவைகள் தயாரிக்கப் பட்டன. சேதமான உலோகப் பாத்திரங்களும், ரப்பரும் கைத்தொழிலுக்குப் பயன்படும் மூலப் பொருளாகிவிட்டன. கந்தைத் துணிகளிலிருந்து ஆடைகள் தயாரிக்கப்பட்டன, ஆரஞ்சுப பழத் தோலிருந்து ஒரு வித எண்ணெய் தயாரிக்கப்பட்டது.

பிரிட்டனிலுள்ள ஒவ்வொரு இல்லத்திலிருந்தும் அதிகப்படியாக ஒரு ராத்தல் நிறையுள்ள (வீணாகும்) காகிதத்தைச் சேகரித்தால் அவைகளிலிருந்து 500 டன் நிறையுள்ள பசை தயாரிக்க முடியுமெனவும் இப் பசையிலிருந்து ஒரு மாதத்திற்குச் சர்க்கரை மடிப்பதற்கான பைகளும், 6,000,000 ஜதை பாதரட்சைகளுக்கான பெட்டிகளும், 88,000,000 சிகிரெட் பெட்டிகளும், தானியங்கள் சேகரித்து வைப்பதற்கான 9,000,000 கூடைகளும், 18,000,000 சோப்புக் கட்டிகளை மடிப்பதற்கான காகிதமும். 56,000,000 தீப்பெட்டிகளும் தயாரிக்க முடியுமெனவும் நிபுணர்கள் மதிப்பிடுகின்றனர்.

நாட்டின் நன்மையைக் கருதி தேச முழுவதும் ஆரம்பமாக விருக்கும் இத் திட்டத்தில் காகிதத்தைத் தவிர, கைத்தொழிலுக்குப் பெரிதும் பயன்படக் கூடியதும் சர்வசாதாரணமாக பிரிட்டனில் இல்லங்களில் சேதமாவதுமான 30 வித மூலப் பொருள்களையும் சேர்ப்பதென வர்த்தக போர்டு முடிவு செய்துள்ளது.

புற்றுநோயைக் குணப் படுத்தும் புது ஔஷதம்

அணுசக்தியிலிருந்த தயாரிக்கப்படும் ரசாயினப் பொருள்களைப்பற்றி லண்டனிலுள்ள ஹாம்ஸ்டெட் ரசாயன சாலையில் ஆராய்ச்சிகள் நடத்திவரும் விஞ்ஞானிகளும் வைத்திய நிபுணர்களும வியாதிகளைக் குணப்படுத்தும் பலவித புது ஔஷதங்களைக் கண்டு பிடித்துள்ளனர்.

இவைகளுள் மிக முக்கியமானது ரேடியோ-பாஸ்பரஸ் (*Radio-Pohsphorus*) என்பது. இதை ரேடியம (ஒரு கிராம் விலை 1300 பவுன்) எக்ஸ்ரே (*X-ray*) ஆகியவைகளுக்குப பர்த்தியாக உபயோகிக்கலாம். ஆகவே, இதுவரை வறுமையின் காரணமாக ரேடியத்தின் மூலம் வைத்திய உதவி பெறமுடியாமல் தவிக்கும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு குறைந்த செலவில் தயாரிக்கக்கூடிய ரேடியோ-பாஸ்பரஸ் புத்துயிர் அளிக்கும்;

இந்த ரசாயின சாலையில் வைத்திய நிபுணர்கள் தயாரித்துவரும சில இஞ்சக்ஷன் மருந்துகள் "டிரேசர் புல்லட்ஸ்," (*TraCor ollths*) அதாவது எதிரியை (வியாதியை) த் தொடர்ந்துசென்று அதன் உயிரை வாங்கும் துப்பாக்கி ரவைகள் என அழைக்கப்படுகின்றன. நோயாளியின் தேகத்தில் ஊசியின் மூலம் (*injection*) அனுப்பப்படும் இம்மருந்துகள் நோயுள்ள பாகத்தில் எவ்விதம வேலை செய்கிறதென்பதைச் சில உபகரணங்கள் மூலம் டாக்டர்கள் கவனிக்க முடியும.

ஹாம்ஸ்டெட் ரசாயின சாலையில் பௌதிக சாஸ்திர இலாகாவின் தலைவரும 45 வயதானவருமான டாக்டர் ஆர்தர் மெக்பர் லேன் என்பவரே இந்த ஆராய்ச்சிக் கோஷ்டியின் தலைவருமாவார். டாக்டர் மெக்பர் லேன் கோஷ்டியாரின் அறிய ஆராய்ச்சிகளின் பலனாக புதுவித ரசாயினப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவைகள் மூலம் சிலவகைப்பட்ட புற்றுநோய்கள் வெற்றிகரமாகவே குணப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ரசாயினப் பொருள்கள் தயாரிப்பதற்கான அணுசக்தி ஹார்வெல் என்ற இடத்திலுள்ள அணுசக்தி ஆராய்ச்சி நிலயத்திலிருந்து கிடைத்து வருகிறது.

"டெய்லி கிராபிக்"

நாடகங்களை ரசிக்கும் லண்டன் குழந்தைகள்

பள்ளிக்கூட நேரங்களில் லண்டன் மாணவ; மாணவிகள் நாடகங்களைப் பார்க்கவேண்டு மென்பதும் பாட திட்டத்தில் ஒரு அம்சமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. நாடகம், சங்கீதம் முதலியவைகளை ரசித்து அனுபவிக்கும் கலையில் செகண்டரி பள்ளிக் குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்கும் முயற்சியாக, லண்டன் கவுண்டி கவுன்ஸில் பல நாடகங்களைத்தயாரித்து நடத்திவருகின்றது. நாடகம் நடப்பதற்கு முன்னதாகவே அந்நாடகத்தின் கதையை மாணவ, மாணவிகள் வகுப்புகளில் படிக்கின்றனர். ஆகவே நாடகத்தைப் பார்க்கும்பொழுது நடிகர்களின் நடிப்பு சங்கீதம் முதலியவைகளை அவர்கள் ரசிக்கமுடிகிறது.

வாலிபர்களின் முன்னேற்றத்திற்கு 500,000 பவுன்

பிரிட்டனுக்குத் தென்னாப்பிரிக்கா வழங்கியுள்ள 10 லட்சம் பவுன் நன்கொடையில் பாதி வாலிபர்களின் முன்னேற்றத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணத்திலிருந்து வாலிபத் தலைவர்களைப் பழகுவதற்கான ஒரு தேசிய பயிற்சிஸ்தலமும், வாலிபர்களின் சமூக சேவைகளைப்பற்றிய ஆராய்ச்சிகள் நடத்துவதற்கான ஒரு ஸ்தாபனமும் நிறுவப்படும். இதைத் தவிர மாணவ, மாணவிகள் ஓய்வு நாட்களை உல்லாசமாகக் கழிப்பதற்கென பிரிட்டன் முழுவதும் 'விடுமுறை விடுதி'களை நிர்மாணிப்பதென்ற ஒரு திட்டத்தையும் சகலரும் வரவேற்கின்றனர். ஆகவே மாணவ, மாணவிகள் வருடமுழுவதும் தங்களுடைய விடுமுறை நாட்களை பணச்செலவின்றி சுகமாகக் கழிக்கமுடியும்.

நாளைய சுரங்கத் தொழிலாளர்கள்

'பிரிட்டனின் சுரங்கத் தொழிலாளர் கல்லூரி'யென அழைக்கப்படும் வேக்பீல்டுக்கருகிலுள்ள சுரங்கத்தில் பயிற்சி பெற்றுவரும் மாணவர்களில் 1000 பேர் அடுத்த ஆண்டு 'பட்டம்' பெற்ற சுரங்கத் தொழிலாளர்களாக வெளியேறுவார்களென பிரிட்டிஷ் நிலக்கரித் தொழில் இலாகா அறிவிக்கிறது. இச்சுரங்கத்தில் பயிற்சி பெறுபவர்கள் அனைவரும் 18 வயதிற்குட்பட்டவர்களே. பயிற்சி காலத்தில் மாணவர்களுக்குக் காலைநேரங்களில் உபந்யாசங்கள், சினிமா படங்கள் மூலம் சுரங்கத் தொழில் கற்பிக்கப்படுகின்றன. பிற்பகலில் மாணவர்கள் சுரங்கத்தில் வேலை செய்வதின்மூலம் அனுபவம் பெறுகின்றனர். இப்பயிற்சி வாரத்திற்கொருமுறை வீதம், ஆறு மாதங்களுக்கு நடைபெறுகிறது. ஊக்கத்துடன கற்றுக்கொள்ளும் இவ்வாலிப சுரங்கத் தொழிலாளர்கள் நாளை சுரங்க மானேஜர்களாகவும், நிர்வாக அதிகாரிகளாகவும் உத்தியோகம் வகிக்கலாம்.

18 வயதில் பத்திரிகை ஆசிரியர்

ஸஸக்ஸ் மாகாணத்திலுள்ள நியூமென் குடும்பத்தார் "செஸ்டநட் வீவ்ஸ்" என்ற வாரசஞ்சிகையொன்றை பிரசுரித்துவருகின்றனர். இச்சஞ்சிகையின் பிரதிகள் நியூமென் குடும்பதலைசேர்ந்தவர்களுக்கு மட்டுமே விநியோகிக்கப்படுகின்றன. 18 வயதான ஜெனிபர் என்பவரே இச் சஞ்சிகையின் ஆசிரியர். ஜெனிபரின் தங்கையும் 14 வயதுமான ஸாலி என்ற சிறுமி இச்சஞ்சிகைக் கான செய்திகள் சேகரிக்கும நிருபராவார். இவர்களுக்கு தகப்பனாரும் இச் சஞ்சிகையில் கட்டுரைகளும், பகுத்தறிவுப் போட்டிகளும் எழுதிவருகிறார். நீங்களும் நியூமென் குடும்பத்தாரின் வழியைப் பின பற்றுங்கள்!

அம்பாள் சுகந்த பாக்குத்தூள்
ஸ்ரீ அம்பாள் பாக்குத்தூள் தயாரிப்பவர்
கொத்தவால் சாவடி., மதராஸ்.1.

அங்கும் இங்கும்

காற்றுள்ள போதே - - தூற்றிக்கொள்ள வேண்டும்!

சூறாவளியில் சுதந்தரம் சிக்கினால்...?

இந்திய மக்களின் இணையற்ற கடமை

ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று ஆடுகிறோம்; பள்ளுபாடுகிறோம். ஆனால், சுதந்திரம் யாருக்குக் கிடைத்தது? தற்போது கிடைத்துள்ள சுதந்திரம், ஒரு சில பணமூட்டைகளுக்குத் தான் பயன் படுகிறது, என்பதை நாம்கண்டு வருகிறோம். ஆலையில் கஷ்டப்பட்டு, எலும்பு முறிய நாள் முழுவதும் உழைக்கும் ஏழைத் தொழிலாளிக்கோ, நிலத்தைத் திருத்தி, பயிரைவளர்த்தி, அதைக் கண்போல்காத்து நாட்டின் உணவு நிலைமையைச் சரிப்படுத்த முயலும் உழவனுக்கோ, கிடைத்திருக்கும் சுதந்திரத்தால் இதுவரையிலும் ஒரு பயனும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

ஓர் நாட்டின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பவர்கள், ஏன்? முதுகெலும்பாக இருப்பவர்கள் அந்நாட்டில் வாழும் உழைப்பாளிகளே யாவர். இந்த உழைப்பாளிகள் பொருளாதார நெருக்கடியில்லாமலும், மற்ற வாழ்க்கைக்கேற்ற வேறு நெருக்கடிகளில்லாமலும் வாழ்ந்தால்தான் அந்நாட்டின் நிலை உயரவழியுண்டு. இன்றேல் அந்நாடு சீர்குலைந்து, சின்னாபின்னப்பட்டு இருக்கு மிடந்தெரியாமல், அழிந்துபடுமென்பதே நம் துணிபு. ஆகவே, இந்தியா முன்னணிக்கு வரவேண்டுமென்றால், உழைப்பாளிகள் பொருளாதார நெருக்கடியில்லாமல் வாழவேண்டும். உழைப்பின் உயர்வை பிறவி முதலாளிகளும், பண மூட்டைகளும், பதவிப் பித்தர்களும் நன்கு உணர்ந்தால்தான் உழைப்பாளிகள் கடைத்தேற வழியுண்டு. அவர்கள் உணராமல், உழைப்பின் உயர்வை உதாசீனப்படுத்தி, மனம்போன போக்கில் உழைப்பாளிகளை நடத்துவார்களேயானால், அடுத்தபடி இந்நாட்டில் அவர்கள் எதிர்பார்க்க வேண்டியது பெரிய சூறாவளியேயாகும். அந்த சூறாவளிக்காற்று இந்நாட்டில் அடிக்க ஆரம்பித்துவிட்டால், அதைக்கண்டு பிறகு வருந்துவதில் பயனில்லை. "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்று சொல்லுவதுண்டு, அதைப்போலசமயம் வாய்க்கும்போதே உழைப்பாளிகளுக்குப் போதியஊதியமும், மற்றவசதிகளுமளித்து அவர்களையும் மனிதராக வாழச்செய்யவேண்டியது பிறவி முதலாளிகளின் முதற்கடமையாகும். கடமையை மறந்து அகப்பட்டவரையில் சுருட்டப்பா, ஆண்டியப்பா என்ற பாடத்தைப் படிக்க முயலுவார்களேயானால், இந்நாட்டில் முன்னர்குறிப்பிட்டபடி சூறாவளிக்காற்று கணடிப்பாக வீசும் எனபதை அவர்களுக்கு முன்கூட்டியே எச்சரிக்கின்றோம். கிடைக்காமல் கிடைத்த சுதந்திர நாட்டில் இச்சூறாவளி வீச ஆரம்பித்துவிட்டால் பிறர் இந்நாட்டைக் கண்டு எள்ளி நகையாடுவார்கள் என்பதை பொதுமக்களும், சிறப்பாக மிதலாளிகளும் நன்குணரக் கடமைபட்டிருக்கிறார்கள்.

பர்மா காட்டிய வழி!

சில வாரங்களுக்குமுன்பு பர்மா சர்க்கார் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக் கூடிய ஒரு முக்கியமான பிரச்னையைத் தீர்த்து வைத்தது. அந்த பிரச்னை தீர்க்க வேண்டியதொரு பிரச்னை என்பதிலும் சந்தேகமில்லை. அதைப் பின் பற்றித்தான்: இந்திய சர்க்காரும் நடக்கவேண்டும், என்று இந்தியத் தலைவர்கள் கருதுவதாகத் தெரிகிறது. ஆயிரக் கணக்கான எக்கர் நிலங்களை வைத்துக் கொண்டிருக்கும் பெரிய விவசாயிகள் அந்த நிலங்களை சரியாகப் பண்படுத்தாமலும், நாட்டின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யாமலும் உறங்கிக் கொண்டிருப்பது இயல்பு. காரணம், தனக்குத் தேவையான லாபம், அல்லது தானியம் சில நிலங்களிருந்தே அந்த விவசாயிக்குக் கிடைத்து விடுகிறது. ஆகவே மற்ற நிலங்கள் விளைகிறதா: என்பதைப் பற்றிய கவலை அவர்களுக்கில்லை. இதனால் நாட்டின் உற்பத்தி தடைபடுவது இயல்பேயல்லவா? இதனால்தான் பர்மா சர்க்கார் ஒரு சரியான திட்டத்தைத் தயாரித்திருக்கிறது. 50 ஏக்கருக்கு அதிகமாக எந்த விவசாயியும் நிலம் வைத்திருக்கக்கூடாது. அதற்கு மேற்பட்டு வைத்திருக்கும் நிலங்களை ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்பதே அந்தத் திட்டத்தின் சாராம்சம். இதனால் ஒரு சில பெரிய விவசாயிகள் மனம் வருந்தினாலும், பல ஆயிரக்கணக்கான ஏழை விவசாயிகள் நலன் பெறுகிறார்கள் என்பது சிந்திக்கப் படவேண்டிய விஷயமாகும். மேலும், நாட்டின் தானிய உற்பத்தியும் பெருகுவதற்குப் பெரும் பயனளிக்கிறது. இத்தகைய சீரிய திட்டத்தைத் தயாரித்த பர்மா சர்க்காரை நாம் மனமார வாழ்த்துகிறோம். இது போலத்தான் அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டியினரால் நியமிக்கப் பட்ட பொருளாதார வேலைத்திட்டக்கமிட்டியானது விவசாயிகள் சம்பந்தமான பிரச்னையைப் பற்றியும், கைத்தொழில்கள் தேசீய மயமாக்குவதைப் பற்றியும், முதலாளிகளின் லாபத்தில் தொழிலாளருக்கும் பங்கு உண்டு என்பதைப் பற்றியும் சிபார்சு செய்திருக்கிறது. இதைப்பற்றி அடுத்து நடைபெறும் அ. இ. கா. காரியக்கமிட்டிக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று தெரிகிறது. இந்த விவாதம் ஏழை விவசாயிகளின் கண்களைத் துடைக்கும்மளவுக்கு வெற்றி பெறவேண்டுமென்பதே நம் பேரவா.

விவசாய சம்பந்தமாக அ. இ. கா. கமிட்டியால் நியமிக்கப்பட்ட பொருளாதார வேலைத்திட்டக் கமிட்டி செய்திருக்கும் சிபார்சுகளைக் கீழே தருகிறோம.

ஒவ்வொரு மாகாணத்திலும் குறைந்தபக்ஷம் இவ்வளவு உணவு, பருத்தி, கட்டிட சாமான்கள் உற்பத்தி இருக்கவேண்டுமென்று நிர்ணயிப்பது. உழைப்பவனுக்கும், நிலத்தின் சொந்தக்காரனுக்கு மிடையேயுள்ள தகராறுகளை நீக்குவது. அடிப்படையான விவசாய உற்பத்திகளுக்கு லாபகரமான விலைகள். விவசாயத் தொழிலாலளருக்குக் கடன் நிவாரணம், நிர்ந்தா நில அபிவிருத்தி முதலியவற்றைப் பற்றிச் சிந்திப்பது. மேலும்; நிலம் பொதுவாக சாகுபடி செய்வோருக்குச் சொந்தமாக இருக்கச்செய்வது, குறிப்பிட்ட நிலத்திற்குமேல் யாருக்கும் சொந்தமாக இருக்கக் கூடாது என்று நில நிர்ணயம்செய்வது; அதிகப்படியாக வைத்திருக்கும் நிலங்களை கிராமக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் வசம் ஒப்பிவிப்பது.

நமது கடமை:

மேற்கண்ட பிரச்னைகள் சுமுகமாகத் தீர்க்கப்பட்டால்; ஏழைவிவசாயிகள் நல்வாழ்வு வாழமுடியும் என்பதே நம் துணிபு. பொருளாதாரத் திட்டக் கமிட்டி செய்திருக்கும் சிபார்சு திட்டங்களை காங்கிரஸ் 'காரியக்கமிட்டி அங்கீகரிக்க வேண்டுமென நாமும் விரும்புகிறோம். இந்த சிபார்சுகளை அந்த காங்கிரஸ் காரியக்கமிட்டி நிராகரிக்குமானால், காங்கிரஸ் என்பது பண மூட்டைகளின் ஸ்தாபனம் என்ற அவலச்சொல்லைத்தாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும் என்பதில் சந்தேகமில்லை. காந்தி, பட்டேல், நேரு, அஸாத், பிரசாத் முதலிய தலைவர்கள் சொல்வதுபோல, காங்கிரஸ் ஏழைகள் ஸ்தாபனம் என்பது உண்மையானால், மேற்கண்ட திட்டங்களைப் பரிபூரணமாக அங்கீகரிக்கக் கடமைபட்டுள்ளது என்றேவற்புறுத்துகிறோம். காங்கிரஸ் ஏழைகள் ஸ்தாபனம் என்பதை நிரூபிக்கவேண்டிய தருணமும் இதுதான். மக்கள் கருதுகிறபடி காங்கிரஸ் ஸ்தாபனம் டாட்டாக்களுக்கும், பிர்லாக்களுக்கும், பிறவி முதலாளிகளுக்கும் உரிய ஸ்தாபனமாக இருந்தால் அதைவிட்டு விலகி, ஏழை இந்தியரின் நல்வாழ்வை விழையும் புதியதோர் சமதர்ம சமுதாய சோஷியலிஸ்ட் ஸ்தாபனத்தை உடனடியாகத் துவக்கச் செய்யவேண்டியது நமது கடமையாகும்.

திருச்சியில் நெருக்கடி!

விவசாயிகள் சம்மந்தமாக திருச்சியில் ஒரு நெருக்கடி ஏற்பட்டிருப்பதை தினசரிப் பத்ரிகைளின் வாயிலாக, வாசகர்கள் அறிந்திருக்கலாம். அதனால் அறுவடைத்தொழில் நம் மாகாண சர்க்காரே மேற்கொண்டிருப்பதாகவும் தெரிகிறது. நிலத்தைத் திருத்திப் பண்படுத்திப் பயிரிடும் ஏழை உழைப்பாளி உழவனுக்கும், நிலச்சுவான் தாரர்களுக்குமே தகராறு ஏற்பட்டிருக்கிறது. உழைப்பவநக்கும், உண்டு கொழுத்துத் திரிபவருக்கும் வித்யாசமுண்டு. உற்பத்திக்கு உறுதுணையாக இருக்கும் உழைப்பாளிகளுக்கு அதிக சலுகை காட்டவேண்டியது நிலச்சுவான்தாரர்களின் கடமையாகும். ஆனால், உழைப்பாளிகளின் இரத்தத்தை உறுஞ்சிக் கொழுத்த, பிறவி நிலச்சுவான் தாரர்கள் அவர்களின் உழைப்புக்கேற்ற ஊதியம் கொடுக்க மனமில்லாமல் தவிக்கின்றனர். அரைப் பட்டினி, கால்பட்டினி, முழுப்பட்டினியும் கிடந்து, இரவு பகல் உறங்காமல் நிலம் திருத்திப்பயிர்செய்யும் உழைப்பாளிகளை ஏமாற்றிக்கொள்ளையடிக்க, அவர்கள் கருதுகிறார்கள். ஏமாற்றிக் கொள்ளையடிக்கும் காலம் மலையேறிவிட்டது என்பதை அவர்களுக்கு நினைவுறுத்துகிறோம். உழைப்பின் உயர்வை, உண்டுகொழுத்து மாட மாளிகைகளில் உல்லாசமாகத் திரியும் நிலச்சுவான் தாரர்கள் அறியாமலிருந்தாலும் ஏழை மக்கள் நன்குணர்வர்.

(அடுத்தப் பக்கம் பார்க்க)

சங்கொலி

[சுசீந்தை--வாசு]

—*—

1. செந்தமிழில் நூல்கள்பல ஆர்வமுடன் படிப்போம்
சேவிக்கினிய நல்லுரைகள் கேட்டுமனங் களிப்போம்
பழம்பிழிந்த சாறனைய நூல்கள்தமை எடுப்போம்
படியிலுள்ள அனைவருமே கொள்ளும்வகை கொடுப்போம்
முழங்குகடல் சூழுலகில் தமிழ்முழங்கச் செய்வோம்
முயன்றுகலைச் செல்வமெலாம் கொணர்ந்திங்கு சேர்ப்போம்
எழுந்தகுரல் பாரதியின் ஏற்றமிவை என்போம்
எங்கள்தமிழ்க் குடிக்கடுத்த இயல்பிதுகாண் சங்கே,

2. தமிழ்மொழிக்குத் தாழ்வுவரின் தரணியையு மழிப்போம்
தலைசிறந்த தமிழ்ப்பேண உயிரினையே தருவோம்
அமிழ்ததினு மமைவுடைய ஐந்துதமிழ்ச் சொல்லை
அந்நிய ரழித்திடவோ? அன்றுவருந் தொல்லை;
தமிழ்நாடு தமிழனுக்கே தாய்மொழியுந் தமிழே
தமிழ்மொழியில் பற்றுவைத்தல் தமிழன்தனிப் பண்பே
உறுதியுடன் எழுந்திடுவேன் றொலித்திடுவேண் சங்கே,
உணர்ச்சியது பொங்கியோங்க ஒலித்திடுவேண் சங்கே!

அங்கும் இங்கும் [முன்பக்கத் தொடர்ச்சி]

திருச்சியில் அறுவடை நெருக்கடி?
கோவையில் மீண்டும் வேலைநிறுத்தம்!
அமிர்த கௌரியின் அறிவுரைகள்

ஆகவே, அவர்களின் வாழ்க்கையை, நிலைதப்பிச்செல்லும் கப்பலைப்போல இனி நடத்திச்செல்ல அவர்கள் இசைய மாட்டார்கள். உழைப்புக்குத்தக்க ஊதியம் இல்லையென்றால் உணர்ச்சிப் பெருக்கால் அதற்குரிய வழியைக் காண அவர்கள் முற்படுகிறார்கள். இது இயற்கை. நடப்பது இருபதாவது நூற்றாண்டு. மக்கள் விழைவது உழைப்புக்குத் தக்க ஊதியம்; வாழ்க்கைச்செலவுகளுக்கேற்ற வருமானம். இதை அநியாயம் என்று எந்த பகுத்தறிவாளனோ அல்லது, நியாயபுத்தியுள்ள எவனோ குறைகூறமுடியாது. திருச்சி நிலச்சுவான்தாரர்கள் இதை நன்கு உணர வேண்டும். ஏன்? இந்தியாவெங்கும் உள்ள எல்லா நிலச்சுவான்தாரர்களும், தொழில் முதலாளிகளும் இதை சிந்தித்துணரக் கடமை பட்டிருக்கிறார்களென்றே எடுத்துக்கூற விரும்புகிறோம். மாகாண சர்க்கார் ஏழை மக்களின் நலனுக்குப்பெரிதும் உழைக்குமென்றே எதிர்பார்க்கிறோம்.

ஆலை வேலைநிறுத்தம்....?

தமிழ்நாட்டிலே கோவைதான் பஞ்சாலைகள் அதிகம் நிறைந்த இடம்; என்பது கண்கூடு. பொருளாதாரத்தில் வடநாட்டைவிட தென்னாடு தாழ்ந்திருக்கிறது என்பதையும் மக்கள் நன்கறிவார்கள். வடநாடு, தென்னாடு பொருளாதாரம் சரிசமத்துவமாக இருக்க வேண்டுமென்றால், தென்னாட்டில் பல புதிய தொழிற்சாலைகள் ஏற்படவேண்டுமென நாம் பலமுறை வற்புறுத்தி வந்திருக்கிறோம். ஆனால், இந்நாட்டில் தொழில் முதலாளிகள் தம் தொழில் ஸ்தாபனங்களை நடத்தும் லட்சியத்தையும், தொழிலாளர்களிடம் அவர்கள் காட்டும் பரோபகார லட்சணத்தையும் நாம் நன்கு சிந்தித்துப் பார்க்கும்போது நம் எண்ணம் ஈடேறும் என்ற நம்பிக்கை சிறிதும் உண்டாகவில்லை. நம் நாட்டில் அடிக்கடி ஆலை முதலாளிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் சச்சரவு ஏற்படுகின்றது. காரணம், அவர்களின் உழைப்புக்குத்தக்க ஊதியம் கிடைக்கப் பெறாமையே என்பது வெளிப்படை. இந்த முதலாளி, தொழிலாளர் தகராறுகளினால் சென்னையில் ஒரு மில்லையே மூடி பலவாண்டுகள் ஆகிவிட்டன. கடந்த ஆண்டுகூட பி. அண்ட் ஸி. மில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். இதேபோல மதுரையிலும், கோவையிலும் அடிக்கடி வேலைநிறுத்தங்கள் ஏற்பட்டுவருகின்றன. முதலாளிகளுக்கு கிடைக்கும் லாபத்தில் தொழிலாளருக்கும் பங்களித்து அவர்களுக்கு வேண்டிய வசதிகளளித்தால், வேலைநிறுத்தம் என்றபேச்சுக்கே இடமில்லை. ஆனால், முதலாளிகளிடம் இந்த காருண்ய மனப்பான்மை உண்டாவதுதான் கடினமாக இருக்கிறது.

தற்போது கோயமுத்தூரில் மில் தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்திருப்பதாகத் தெரிகிறது. ஊதியத்தை எதிர்நோக்கியோ, அல்லது தங்களின் சுய நலத்தைக் கருதியோ அவர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாகத்தெரியவில்லை. ஆள் நிர்ணய விஷயத்தில் மில் முதலாளிகள் சிலரை வேலையிலிருந்து நீக்கிவிட்டதாகவும், ஆகவே அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிகிறது. தம் தோழர்களின் நலம்கருதி தொழிலாளர் வேலைநிறுத்தத்திலீடுபட்டிருப்பது போற்றத்தக்க விஷயமேயாகும். திடீரென்று வேலையிலிருந்து சிலரை நீக்கி, அவர்களின் நல்வாழ்வில் மண் தூவ நினைப்பது மில் முதலாளிகளுக்குச் சிறிதும் அழகாகாது. இந்த வேலைநிறுத்தத்தில் சுமார் 40000 தொழிலாளர் ஈடுபட்டிருப்பதாகவும், மில் கதவுகள் யாவும் பூட்டப்பட்டிருப்பதாகவும் போலீஸ் பந்தோபஸ்து ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் தகவல் கிடைத்திருக்கிறது. மில் முதலாளிகள் இம்மாதிரி மில்களைமூடிவிடுவதினால், அவர்களது வருவாய்க்குத் தடங்கலேற்படுவதுடன் தொழிலாளரும் பாதிக்கப்பட்டு நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளாமல் பொதுமக்களும் பாதிக்கப்படுகிறார்கள் என்பது சிந்திக்கவேண்டிய விஷயமாகும். ஆகவே, வேலைநிறுத்தத்தைப்பற்றி கோவை மில் முதலாளிகள் உடனடியாக முடிவு காணவேண்டுமென்றே எச்சரிக்கின்றோம். ஓமந்தூரார் மந்திரிசபை இதில் தலையிடாது என்று தெரிய வருகிறது. பொதுமக்களையும், பல்லாயிரக்கணக்கான தொழிலாளரையும் பாதிக்கக்கூடிய ஒரு வேலைநிறுத்தத்திற்கு முடிவுகாண, ஓமந்தூரார் மந்திரிசபை முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை என்றால், இதற்குக் காரணம் என்ன? பணமூட்டைகளுக்குப் பக்கபலமாக இந்த சர்க்கார் இருந்துவருகிறது, என்று சொல்லுவது தவறா? கோவை வேலைநிறுத்தம் மில் முதலாளிகளின் மூளைக்கு வேலை கொடுக்கும் அளவுக்குப் போராட்டம் நிகழ்த்தினால் அதைப்பற்றி ஆச்சரியப்படவேண்டிய அவசியமில்லை என்றே கருதுகிறோம். மில் முதலாளிகளும், மந்திரிகளும் இத்தகைய ஒரு பெரிய போராட்டத்திற்குத் தொழிலாளரைத் தூண்டிவிடாமல் அவர்களது கோரிக்கையைப் பூர்த்தி செய்ய முன்வருவார்களாக.

பெண்கள் பின்பற்றட்டும்!

ஆஜ்மீரில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின்போது இந்தியசர்க்கார் சுகாதார மந்திரியான, ராஜகுமாரி அமிர்த கௌரி ஆற்றிய சொற்பொழிவு இந்தியமக்கள் யாவரும், சிறப்பாக இந்நாட்டு பெண்மணிகளனைவரும் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். நாகரீகத்திலும், மற்றும் பலதுறைகளிலும் முன்னணி நிற்கும் மேல்நாட்டுப் பெண்மணிகளுக்கும் நம் நாட்டுப் பெண்மணிகளுக்கும் இடையே மலைக்கும் மடுவுக்குமுள்ள வேறுபாடு இருந்து வருகிறது. மேலும் இந்நாட்டுப் பெண்மணிகள் ஆண்களின் அடிமைச் சின்னங்களாகவே இன்னும் கருதப்பட்டு வருகிறார்களென்பது வருந்தத்தக்க விஷயம். அதற்கேற்றாற்போல, ஆண்களோடு சரிநிகர் சமானமாக பெண்களும் வாழவேண்டுமென்ற உணர்ச்சியும், பெண்களுக்குரிய உரிமைகள் யாவும் பெற்றுவாழ வேண்டுமென்ற எண்ணமும் நம் நாட்டுப் பெண்மணிகளுக்குச் சிறிதும் இல்லை. ஆகவேதான் பெண்கள் இன்னும் பிற்போக்காக இருந்து வருகின்றனர். பெண்கள் சமூகசேவையில் ஈடுபடுவார்களானால், அப்பொழுதான் அவர்களுக்கு நல்லுணர்வு உண்டாகும். இதற்காகத்தான் அமிர்த கௌரியும் "பெண்கள் குடும்பவாழ்க்கையை ஏற்குமுன் சமூக சேவையில் ஈடுபடவேண்டும்" என்று ஆணித்தரமாகக் குறிப்பிட்டிருக்கிறார். சமூக சேவையில் பெண்கள் தீவிரமாக இறங்கி வேலைசெய்தாலொழிய, சமூகத்தின் பெயரால் நடக்கும், அட்டூழியங்களும், அடாச் செயல்களும், கொடுமைகளும் அவர்களுக்குப் புலப்படாது பெற்றோர்களும் தம் பெண்களைச் சமூக சேவைசெய்ய விட்டுவிடவேண்டும் என்று இச்சமயத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

"உண்மை இந்தியா ஒரு லட்சம் கிராமங்களில்தான் இருக்கிறது அவைகளில் தாண்டவமாடும் வறுமை, அறியாமை, பிணி முதலியவைகளை நீக்க நாம் மனப்பூர்வமாக சேவை செய்யவேண்டும். ஒவ்வொரு பிரஜையும், சுதந்திரத்தின் ஒளியை அனுபவிக்கவேண்டும். ஜாதி மத பேத உணர்ச்சிகள் ஒழியவேண்டும். சமூகசேவையில் குறைந்தபக்ஷம் மூன்றாண்டுகளாவது ஈடுபட்டிருந்தாலன்றி, படித்த பெண்கள் விவாகம் செய்துகொண்டு குடும்பவாழ்க்கையை ஏற்று நடத்தக்கூடாது."

என்று ராஜகுமாரி அமிர்தகௌரி குறிப்பிட்டிருக்கும் ஆணித்தரமான ஒவ்வொரு வாசகத்தையும் நம்நாட்டுப் பெண்களனைவரும் அறியவேண்டும். அதன்படி நடக்கத் தம்மைச் சரிப்படுத்திக்கொள்ளவேண்டும். பிற்போக்கடைந்திருக்கும் பெண்கள் சமூகம், முற்போக்கடையவேண்டுமென்றால், சகல உரிமைகளும் பெற்று ஆண்களோடு சரிநிகர் சமானமாக பெண்களும் வாழ வேண்டுமென்றால், அமிர்தகௌரியை நம் நாட்டுப் பெண்மணிகள் பின்பற்ற வேண்டுமென்று நாம் குறிப்பிட விரும்புகிறோம்.

!!! பட்டு & நூல் !!!
கைத்தறி ஜவுளிகள் கண்ட்ரோல் விலைக்கு கிடைக்குமிடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53, கிடங்கு தெரு, ஸி. டி. மதராஸ்.

யுத்தத்திற்கு முந்திய விலைகளில்
ஜ்வெல் பொருந்திய லீவர் வாட்சுகள். அதிநவீன டிசைன்கள், சொல்ப ஸ்டாக். ஒருவருக்கு இரண்டு கடிகாரங்களுக்குமேல் இல்லை, சரியான மணி. ஒவ்வொன்றும் 3௵ உத்தரவாதம்.

நெ. 154 பிரைட் க்ரோ. கேஸ் ரூ 45
உயர் ரகம் ரூ 48
ரோ. கோல்ட் 10௵ உத். ரூ 58
நெ. 151 பிரைட் க்ரோ. கேஸ் ரூ 42
ரோ. கோல்ட் 10௵ உத். ரூ 52
தபால் செலவு அணா 12. இரண்டிற்கு ஆர்டர் செய்தால் தபால் செலவு இனாம். கேட்லாக் கைவசமில்லை கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில்
Universal Watch Co.
POST BOX No. 11401 CALCUTTA. (T. M. M.)

இழந்த பலத்தைத் திருப்பக் கொடுக்கக் கூடியது.
பழனி ஆர். எம். கே தங்க மாத்திரை.
தாது புஷ்டிக்கு இதற்கு நிகரான மருந்து ஒன்றுமே இல்லை. தாதைக் கெட்டி படுத்தி, பலஹீனத்தைப்போக்கி, நரம்புகளுக்கு பலத்தைக் கொடுத்து, உங்கள் மனக்கவலையை நீக்கி, தம்பதிகளை மகிழ்விக்கச் செய்யும். லாகிரி சேராதது. இதைச் சகலரும் சாப்பிடலாம். விந்தில் கரு அமைக்கும் சக்தியுள்ளது.
50 நாள் தங்க மாத்திரை, சாலாமிசரி ஹல்வா 15—0—0
குறிப்பு:—இலங்கை, ப்ர்மா, மலாய் நாட்டினர் தபால் செலவு கூட்டி முன்பணம் அனுப்பினால் லைசன்ஸ்பெற்று பார்சல் அனுப்பிவைக்கிறோம்.
[தபால் செலவு தனி]
வைத்திய ஆசிரியர் ஆர். எம். கே. வேலுசாமி,
சித்த வைத்தியசாலை, பழனி. [ஸ்தாபகம் 1900]
C

கனகராணி

அல்லது

மாயவீரன்

பூ. ஆ.

மதுரம் மறைந்ததால் மனமுடைந்து போன பூபதி ஊண், உறக்கமின்றி படுக்கைக்குச் சென்றான். மனோ வேதனையால் நித்திரையின்றி படுக்கையில் புரண்டுகொண்டிருந்தான். நெடுநேரமாகிவிட்டது. திடீரென்று அவனுக்கு ஒரு யோசனை தட்டியது. எழுந்தான்; நேரடியாக அரண்மனை நந்தவனத்தைநோக்கி, நடந்தான். உள்ளே சென்று அங்குள்ள செடிகளுக்கிடையே மறைந்தான். அதே நேரத்தில் மற்றொரு உருவம், வசந்தமண்டபத்திலிருந்து பாழடைந்த பழைய மண்டபத்தைநோக்கிச் சென்றது பூபதி அதைப் பின்பற்றிச்சென்றான். பழைய மண்டபத்துக்குள் சென்ற அந்த மாய உருவம் திடீரென்று மறைந்தது. அது எங்கே, எப்படிச் சென்றது என்பதைப் பூபதியால் அறிந்துகொள்ள முடியவில்லை. அதிக இருளாக இருந்ததால் பூபதி திண்டாடினான்; வேறுவழியின்றி மெதுவாக வெளியில்வந்தான். அவன் காலில் ஒரு சிறு பந்துபோன்ற மூட்டை தட்டுப்பட்டது. அதை எடுத்துக்கொண்டு அரண்மனைக்குச் சென்றான். பிரித்துப்பார்த்தான். உள்ளே ஒரு சிறு ஓலைச்சுருள் இருந்தது. அதைக் கூர்மையாக ஒருமுறைக்குப் பன்முறை படித்துப்பார்த்தான். அதை யார் எழுதியது என்பதை அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. மீண்டும் மதுரத்தைத் தேடவேண்டாமென்றும், அவள் போய்ச் சேரவேண்டிய இடம் போய்ச் சேர்ந்துவிட்டதாகவும் சுருக்கமாக அதில் எழுதப்பட்டிருந்தது. பூபதி முகம் சட்டென மாறியது. அவன் உள்ளத்தில் எழுந்த சோகத்துக்கு அளவேயில்லை. ஆயிரம் கேள்விகள் அவன் மனதில் எழுந்தன. அவன் மூளை தீப்பற்றி எரிவது போலிருந்தது. திக்பிரமை கொண்டவன்போல் அவன் வீட்டிற்கு நடந்துசென்றான். மீண்டும் மதுரத்தைச் சந்திப்போம்; கண்குளிரக் காண்போம் என்ற அவன் மனக்கோட்டை இடிந்து, தகர்ந்து பாழாய்ப்போயிற்று! அதேபோல் மதுரத்தை இழந்த மதுரை அரண்மனையும் பொலிவற்றுப் போயிற்று.

இந்தச் சமயத்தில் தெற்கேசென்ற கற்பூரனுக்கு மதுரம் மறைந்ததைப் பற்றி ஒன்றுமே தெரியாது. அவன் நேரடியாக மதுரை இளவரசன் குலசேகர பாண்டியனைத் தேடிச்சென்றான். அவனைக்கண்டு மதுரை சம்பந்தமாகப் பேசிக்கொண்டிருந்தான். சோழ நாட்டினர் செய்துவந்த சதிகளையும், சூழ்ச்சிகளையும் எடுத்துக்கூறி, சோழ ஒற்றர்களைக் கூண்டோடு சிறைக்குள் தள்ளிய சம்பவங்களையும் ஆதியோடந்தமாக எடுத்துச் சொன்னான். கடைசியாக உத்தமி குணசீலிக்கும், அவள் குழந்தை குலதீபனுக்கும் நேர்ந்த சதியைப்பற்றிக் குறிப்பிட்டான். இதைக் கேட்டதும இளவரசனுக்கு வந்த ஆத்திரமும், ஆக்ரோஷமும் இவ்வளவு அவ்வளவுவல்ல. சோழ நாட்டின்மீது ஏன் படையெடுத்துச்செல்லக்கூடாது என்று கேட்டான். கற்பூரன் அவனுக்குப் பாண்டிய நாட்டின் நிலைமையைப்பற்றிப் பொறுமையுடன் எடுத்துச்சொன்னான். சோழ நாட்டினர், சேர நாட்டுடன் விவாகத்தின்மூலம் ஒரு புது உறவை ஏற்படுத்த முயற்சிப்பதால், அந்த உறவைத் தடுக்கவேண்டுமென்று கற்பூரன் சொன்னான். அதற்கு வழி என்னவென்று இளவரசன் கேட்டான். சேர மன்னர் குமாரி கன்னியை இளவரசர் மணந்துகொள்ள ஒப்புக்கொண்டால், எல்லாம் சுமுகமாகத் தீர்ந்துவிடும் என்று கற்பூரன் சொன்னான். இதைக்கேட்டதும், அங்குமிங்கும் உலாவிக்கொண்டிருந்த இளவரசன் குலசேகரன் சட்டென நின்றான். கற்பூரனை ஏற இறங்கப் பார்த்தான். அவன் முகத்தில் திடீரென்று ஒரு மாறுதல் ஏற்பட்டது! அதே சமயத்தில் அங்கு திடீரென்று யாரோ உள்ளே நுழைந்தான்! அவனைக் கண்டதும், கற்பூரன் திடுக்கிட்டு எழுந்தான்!

இளவரசன் குலசேகர பாண்டியனும், கற்பூரனும் வந்தவனைக் கூர்ந்து கவனித்தனர். கற்பூரன் ஓடோடியும் சென்று அவனை வரவேற்றான்.

“பூபாலா...நீயா?...நீ என்ன அவசரமாக இங்கு வந்தாய்?...மதுரையில் என்ன நடந்தது?...” என்று அவசரமாகக் கேட்டான்.

பூபாலன் அவன் கொண்டுவந்திருந்த ஓலையைக் கற்பூரனிடம் கொடுத்துவிட்டு, அருகில் நின்ற இளவரசனைக்கண்டு, தலைவணங்கி மரியாதை செய்தான்; பூபாலனை இளவரசனுக்கு நன்றாகத்தெரியும்; அவனைக் கண்டதும், புன்சிரிப்புடன் இளவரசன் அவனை நெருங்கினான்.

பூபாலா...சுகந்தானா?....மதுரையில் எல்லோரும் சுகமே இருக்கிறார்களா?..

ஆம் இளவரசே........எல்லோரும் சுகமே இருக்கிறார்கள்...

நீ இங்கு வருவது மன்னர் மகாராணிக்குத் தெரியுமா?...

இல்லை......இளவரசே. உம்...ம்... நான் திடீரென்று ஒரு அவசர காரியமாகப் புறப்பட்டு வந்தேன்; பூபதி அனுப்பிவைத்தார்...நான் இங்கு வந்தது யாருக்கும் தெரியாது...

“அவசர காரியமா?......அப்படி அவசரம் என்ன வந்தது?” என்று இளவரசன் சற்று வாடிய முகத்துடன் கேட்டான். இதற்குள் ஓலையை வாசித்துமுடித்த கற்பூரனே இளவரசனுக்குப் பதில் சொன்னான்.

மதுரம் என்ற ஒரு பெண் அரண்மனையிலிருந்தாள்...அவளை உங்களுக்குத்தெரியாது...அவள் திடீரென்று அரண்மனையிலிருந்து போய்விட்டாள்!...

மதுரமா?....இருக்கட்டும்......அவள் யார்?...அரண்மனையில் என்ன செய்தாள்?...அவள் அரண்மனையிலிருந்து திடீரென்று போனது அவ்வளவு பெரிய முக்கிய வேலையா?...

“நான் விவரமாக அப்புறம் சொல்லுகிறேன்.” என்றுகற்பூரன் இளவரசனுக்குப் பதில் சொல்லிவிட்டுப பூபாலன் பக்கம் திரும்பினான்.

பூபாலா...இது எப்பொழுது நடந்தது?...மதுரம் அரண்மனையிலிருந்து எப்பொழுது மறைந்தாள்?...

நீங்கள் புறப்பட்டபின் நாலைந்து தினங்கள் கழித்து...

அவளைத் தேடினீர்களா?......பூபதி எப்படி இருக்கிறான்?...

மதுரத்தைத் தேடாத இடம் கிடையாது...நாங்கள் எல்லோரும் தீவிரமாக வேலை செய்தோம்...எல்லோரும் ஏமாந்தோம்......பூபதி மனமுடைந்து போனார்...அவரே என்னை உங்களிடம் அனுப்பிவைத்தார்...... அரண்மனையே துக்கித்துக் காணப்படுகிறது...

ஆமாம்......மதுரம் அத்தகைய பெண்...பாதகமில்லை...நீ நல்ல ஓய்வு எடுத்துக்கொண்டு மதுரைக்குத் திரும்பிச்செல்......பூபதியைக் கவலைப்பட வேண்டாமென்று சொல்......மதுரம் எப்படியும் திரும்பிவருவாள்...அதுவும் சீக்கிரத்தில் என்று, நான் சொன்னதாகச் சொல்...கவலையின்றி மதுரைக் காரியங்களைக் கவனித்துக்கொள்ளுங்கள்......பயப்படவேண்டிய அவசியம் ஒன்றுமில்லை...பூபாலா நீ போகலாம். எப்பொழுது புறப்படப்போகிறாய்?...

நீங்கள் எப்பொழுது உத்தரவு கொடுக்கின்றீர்களோ.... அப்பொழுது புறப்பட நான் தயார்...

“உன் வசதியைக் கவனித்துக் கொள்...புறப்படுவதற்குமுன் என்னை வந்து கண்டுகொள்...நான் ஒரு லிகிதம் கொடுக்கிறேன்...அதைப் பூபதியிடம் கொண்டுபோய்க் கொடு...ஒருவேளை மன்னருக்கும் ஒரு லிகிதம் இளவரசர் கொடுக்கலாம்” என்று சொல்லி, இளவரசன் குலசேகர பாண்டியனை ஏறெடுத்துப் பார்த்தான். பூபாலனுக்கு விடை கொடுத்தனுப்பினான். பூபாலன் அங்கிருந்து போனதும், இளவரசன் ஒரு ஆசனத்தில் அமர்ந்தான். அருகில் கற்பூரனும் உட்கார்ந்தான்.

கற்பூரா?...இந்த மதுரம் யார்?... இந்த பெண்ணிடம் உங்களுக்கு ஏன் இவ்வளவு அக்கறை?...

மதுரம் ஒரு அபூர்வப்பெண்!...முதலில் என் தங்கையென்று ஆரம்பிக்கிறேன்...

என்ன!...உன் தங்கையா?...அது எப்படி?...உனக்கு யாரும்...

மெய்தான்...மதுரத்தை என் தங்கையாகவே பாவிக்கிறேன்...அதற்குக்காரணம் என்னால் சொல்லமுடியாது...எனக்குத் தெரியாது.... ஆனால்...ஒரு தங்கையிடமுள்ள அன்பு அவளிடம் எனக்கு இருக்கிறது...அவளும் என்னை ஒரு சகோதரனாகவே ஏற்றுக்கொண்டிருக்கிறாள்...

அப்படியா?...உம்....அப்புறம்...மதுரம்...அழகிலும், படிப்பிலும், சாதுர்யத்திலும், வீரத்திலும் எந்தப் பாண்டிய நாட்டுப் பெண்ணுக்கும் இளைத்தவளல்ல......வில் எந்தினால், ஒரு கைதேர்ந்த ஆடவனும் அவளை எதிர்த்து நிற்கமுடியாது. வாள்போர், குதிரையேற்றம் எல்லாவற்றிலும் கைதேர்ந்தவள்...பரம சாது....காண்போர் உள்ளத்தை அப்படியே கொள்ளை கொண்டுவிடுவாள்......சதா புன்சிரிப்பு....குறும்புப் பார்வையும்... குறும்புப் பேச்சும்...அவள் அழகில் பூபதி சிக்கினான்...

அப்படியா?......பூபதிக்கு என்ன வந்தது?...புஷ்பவதி இதற்குச் சம்மதித்தாளா?...

புஷ்பவதியும்......மதுரமும் இணையற்ற தோழிகள்......அழகில் புஷ்பவதிக்கு எந்த வகையிலும் இளைத்தவளல்ல...பூபதி மதுரத்தைக் காதலிக்கிறான்...இருவரும் ஒருவர்மீது ஒருவர் அளவற்ற அன்புகொண்டிருக்கிறார்கள்...அவர்கள் காதல் மாசற்றது...

அப்படியா?...கற்பூரா...இந்த மதுரம் யார்?...அவளைப்பற்றிப் பிரமாதமாகப் பேசுகிறாயே?...

அவள் யாரோ யாருக்கும் தெரியாது...பெற்றோர், உற்றார் யாரென்று தெரியாது...அவள் ஒரு அனாதைப் பெண்...ஒரு கிழவி...அவளை அரண்மனையில் கொண்டுவந்து பணிப்பெண்ணாகச் சேர்த்தாள்...அந்தக் கிழவி... மதுரத்துக்குப் பாட்டியென்று சொல்லிக்கொள்ளுகிறாள்......ஆனால், மதுரமோ சாதாரணப் பெண்ணல்ல...ஒரு ராஜகுலப்பெண்......அதில் எனக்குத் துளியும் சந்தேகமில்லை......அவளை ஏதோ ஒரு மர்மம் சூழ்ந்திருக்கிறது... அதைத் தெளிவுபடுத்த நான் கங்கணம் கட்டியிருக்கிறேன்...

கற்பூரா...,ஆச்சரியந்தான்!....இது ஒரு அற்புதமான கதைபோலல்லவா இருக்கிறது?......இருக்கட்டும் இந்த மதுரம் ஏன் திடீரென்று மறைந்தாள்?...

அதிருக்கட்டும்; இந்த மதுரம் சோழ ஒற்றர்களை எதிர்த்து முதலில் புஷ்பவதியின் உயிரைப் பாதுகாத்தாள்... அப்புறம்...பூபதி; என் உயிரையும்கூட பன்முறை பாதுகாத்த உத்தமி!... மாறுவேஷத்திலும்....சாதுர்யத்திலும், வீரத்திலும அவளுக்கு இணையாக யாரையும் சொல்லமுடியாது... ரொம்ப அடக்கமான பெண்...கடைசியில் சோழ ஒற்றர்கள் எல்லோரையும் கூண்டோடு சிறையில்தள்ள இந்த மதுரந்தான் எனக்கு விசேஷ உதவியாக இருந்தாள்...அவளுடைய திறமையால்தான் நான் சோழ ஒற்றர்களையும்...அவர்கள் தலைவனையும் அவ்வளவு சுலபத்தில் வளைத்துக் கொள்ள என் தங்கை மதுரந்தான் திட்டம்போட்டுச் சாமர்த்தியமாக வேலைசெய்தாள்...

கற்பூரா...இத்தகைய ஒரு அபூர்வமான பெண்மணியை இழந்தது நம் துர்ப்பாக்கியமே!...

ஆம்...பெரிய துர்ப்பாக்கியம்...மதுரம் பிரிந்தது என்மனதை வாட்டுகிறது......முக்கியமான இந்தவேலை

(அடுத்த பக்கம் பார்க்க)

கனகராணி

அல்லது

மாய வீரன்

[முன் பக்கத் தொடர்ச்சி]

இல்லையேல் நான் உடனே மதுரத்தைத்தேடிப் புறப்பட்டிருப்பேன்... அவளைச் சூழ்ந்துள்ள அந்த மர்மந்தான் அவளை நமமைவிட்டுப் பிரித்துவிட்டது... அடிக்கடி அதை நினைத்து வருந்துவாள்.... அந்த உண்மையைக் கண்டுபிடிக்கும் பொறுப்பை நானே ஏற்றுக்கொண்டேன்...... நான் இங்கு வந்துவிட்டதால்... அவள் புறப்பட்டுப் போய்விட்டாள்...... அவள் பிறப்பைப் பற்றிய உண்மையைக் கண்டுபிடிக்காமல் அவள் மீண்டும் மதுரை அரண்மனைக்குத் திரும்பமாட்டாள். அவ்வளவுக்கு வைரம்பாய்ந்த மன உறுதியுடையவள்

கற்பூரா... இத்தகைய ஒரு பெண்ணைக்காண நான் கொடுத்துவைக்கவில்லை...

பாதகமில்லை... அவள் சீக்கிரத்தில் அரண்மனைக்கு வருவாள்...... அவள் பூபதியிடம் கொண்டிருக்கும் அன்பு சாதாரணமானதல்ல..... என்னையும் அவள் தேடிவந்தே தீருவாள்... அவ்வளவுக்கு அவள் என்னை ஒரு அண்ணனாகப் பாவிக்கிறாள்...

ரொம்ப நல்லது... மதுரம் மீண்டும் வரவேண்டும்...... அத்தகைய வீரப் பெண்மணிகளே இன்று பாண்டிய நாட்டிற்கு ரொம்பத் தேவையிருக்கிறது... பூபதியும்... தங்கை புஷ்பவதியும் ரொம்ப மனமுடைந்து போயிருப்பார்கள்... அவசியமானால் கற்பூரா... நீ புறப்பட்டுப்போனால் என்ன?... மதுரத்துக்கு ஏதேனும் ஆபத்து...

மதுரத்துக்கு ஆபத்தா?.... அவள் எல்லா ஆபத்துக்களையும் சமாளிக்க வல்ல தீரமுடையவள்!...... அதைப் பற்றிக் கவலையேவேண்டாம்...... இப்பொழுது நாம் மேற்கொண்டிருக்கும் வேலை ரொம்ப முக்கியமானதல்லவா?... இதை முடித்துக்கொண்டு தான் நான் மதுரை திரும்புவேன்... அதில் சந்தேகமே வேண்டாம்...

கடைசியில் என் தலையில் பாரத்தைப் போட்டுவிட்டாய்... கற்பூரா... சரி... உன் யோசனையை ஏற்றுக் கொள்ளுகிறேன்... ஆனால்... சேர மன்னரையோ... அல்லது.... அவர் குமாரியையோ நான் கண்டதில்லையே... எப்படி என்னைச் சம்மதிக்கும்படி சொல்லுகிறாய்?...

அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்.... உங்களைக்கண்டு பேசிவிட்டு நானே சேரநாட்டிற்குப் போகிறேன்..

உடனே போகிறாயா?..... அவ்வளவு அவசரம் என்ன வந்தது?...

இல்லை... சில தினங்கள் கழித்தே போவேன்... இதற்குள் நீங்கள் மன்னருக்கும்... மகாராணிக்கும் உங்கள் கைப்பட ஒரு லிகிதம் எழுதிவையுங்கள்... அதைப் பூபாலன் வழியாக மதுரைக்கு அனுப்பி வைக்கலாம்... உங்கள் லிகிதத்தைக் கண்டால் மன்னருக்கும்... மகாராணிக்கும் ரொம்ப திருப்தியாக இருக்கும்...... நான் சொன்னயோசனையை நீங்கள் ஏற்றுக்கொண்டதாக குறிப்பிட்டாலும் போதும்...

“ அப்படியே செய்கிறேன். நீயும்... அப்பாவுக்கும், அம்மாவுக்கும் விவரமாக எழுதிக்கொள்.. பூபதிக்கும்.. புஷ்பவதிக்கும் ஒன்று எழுது... அவர்களிடம் நான் சுகம் விசாரித்ததாகவும்... மதுரத்தைப் பற்றிக் கவலைப் படவேண்டா மென்று நான் சொன்னதாகவும்எழுதிக்கொள்” என்று சொல்லிவிட்டு இளவரசன் குலசேகரன் உள்ளே சென்றான். கற்பூரன் உடனே பூபதிக்கும், மன்னருக்கும் விவரமான ஒருலிகிதம் எழுதலானான். எழுதிமுடித்ததும் இளவரசனைக் கண்டு, அவன் எழுதிய லிகிதத்தையும் எடுத்துக்கொண்டு போய் முத்திரையிட்டுப் பூபாலனைக் கண்டான்... அவனிடம் விவரமாக எல்லா விஷயங்களையும் சொல்லி மறுநாளே அவனை மதுரைக்குப் புறப்பட்டு போகும்படி உத்தரவு போட்டான். அப்படியே பூபாலனும் புறப்பட்டுப் போனான்.

கற்பூரன் காயலிலே சில தினங்கள் இருந்தான்... அடிக்கடி இளவரசனையும்; ராணுவத் தளபதியையும் கண்டு பேசினான். பாண்டிய நாட்டின் எதிர்காலத் திட்டத்தைப் பற்றியே அடிக்கடி ஆலோசித்தான்..... அவனுடைய திட்டத்தை இளவரசனும்; இதர அதிகாரிகளும் மனமுவந்து ஏற்றுக்கொண்டனர். கற்பூரனின் சீர்திருத்தத் திட்டங்களையும், ராணுவ, அரசியல் தந்திரங்களையும் பாராட்டினர். இத்தகைய வீர இளஞ்சிங்கங்கள் பாண்டிய நாட்டில் இருக்கிற வரையில், பாண்டிய நாட்டிற்கு ஒரு குறையும் வராது எனத் திருப்தியடைந்தனர். மதுரை மன்னருக்கு அதிகாரிகள் அனுப்பிய ரகசிய லிகிதங்களிலும் கற்பூரன் திறமையையும், யோசனைகளையும் பெரிதும் பாராட்டி எழுதினர். கற்பூரன் பாண்டிய நாட்டின் மக்களின் அன்பையும், நன்மதிப்பையுமட்டுமின்றி, உயர்தர அதிகாரிகளின் நன்மதிப்பையும் பெற்றான். இளவரசன் கற்பூரனிடம் அளவற்ற அன்பு கொண்டிருந்தான். அவர்களுடைய பால்ய அன்பு வர வர அதிகரித்ததே யொழியக் குறையவில்லை... கற்பூரன் எப்பொழும் காரியத்தில் கணணாய் இருப்பவன். எடுத்த காரியத்தைச் சாதிக்காமல் விடமாட்டான். ஆகவே, சேரநாட்டிற்குப் புறப்படத் தயாரானான். இளவரசனிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டான்.

கற்பூரா சுகமே போய்வா... உனக்குத் துணைக்கு யாரை அழைத்துக் கொண்டு போகிறாய்?...

எனக்குத்துணையா?... எதற்காக... நீங்களே என் அருகில் இருக்கும் போது... எனக்குத் துணைவேறு வேணுமா?...

உனக்கு எப்பொழுதும் இந்த சுபாவந்தான்... இருக்கட்டும்கற்பூரா... அண்ணுவுக்குப் பெண் பார்க்கத்தம்பி போகிறான... ரொம்ப சந்தோஷம்!.... ஆனால் எனக்கு என்று விவாகமோ அன்றே உனக்கும்...

அதெல்லாம் அப்புறம் யோசித்துக் கொள்ளலாம்...

யோசிப்பது என்ன? அப்பாவுக்கும்... என் தங்கை புஷ்பவதிக்கும் அப்படியே எழுதி விட்டேன்...

“ அப்படியா?... சரி விடைகொடுங்கள்... எவ்வளவு சீக்கிரம்முடியுமோ... அவ்வளவு சீக்கிரத்தில் திரும்பி வருவேன்... எனக்காக நீங்கள் கவலைப்பட்டுக்கொண்டிருக்கவேண்டாம்,, என்று சொல்லிவிட்டுக் கற்பூரன் புறப்பட்டான். நேரடியாக கன்னியாகுமரிக்கே சென்றான். அங்குதான் சேரமன்னரும் அவர் குடும்பத்தினரும் அடிக்கடி சென்று தங்குவது. இந்தியாவின் தென்கோடியிலுள்ள குமரிநகர் இயற்கை அழகு வாய்ந்தது. சூரியன் உதயமும், அது அஸ்தமிப்பதும் என்றும் கண்கொள்ளாக்காட்சி. சமுத்திரக் கரையோரமுள்ள அந்த நகரம் சகல வளமும் பெற்றது. வியாபாரத்திற்கும் பேர்போனது. காயலும்; குமரியுந்தான் பாண்டிய மன்னர் காலத்தில் பேர்பெற்ற துறைமுக நகரங்கள். சேர மன்னரின் கோட்டைகொத்தளங்கள் அங்குகாணுண்டு. அழகிய பெரிய கோயில்களும் உண்டு. அதில் குமரி அம்மன் கோவில் பிரசித்திபெற்றது அதுஒரு பெரிய புண்ணியஸ்தலம். பல ஊர்களிலிருந்து, தினந்தோறும் ஏராளமான மக்கள் சமுத்திரஸ்நானாடி, குமரியம்மனைத் தெரிசனம் செய்வதுண்டு. அரசரும், அரசகுடும்பத்தினரும் அந்தக் கோவிலுக்கு அடிக்கடி வருவதுண்டு அம்மனிடம் அவர்களுக்கு அவ்வளவு பக்தி. அந்த அம்மனே அவர்களுக்கு குலதெய்வம். அந்த குலதெய்வததின் நாமத்தையே சேரமன்னர் அவருடைய ஒரே பெண்ணுக்குச்சூட்டி, அவளை அருமை, பெருமையாக உயிருக்குயிராக வளர்த்துவந்தார். குமரியின் தாய் இளம்வயதிலேயே இறந்துபோனாள். அவளிடம் சேரமன்னா கொண்டிருந்த அன்பு அபாரமானது. ஆகவே, அவர் மறுமணம் செய்துகொள்ளாமல், ஒரே பெண்ணாகிய குமரியை அன்பாக வளர்த்துவந்தார். குமரியின்மீது அவர் கொண்டிருந்த அன்பு அளவற்றது. அந்த அன்பால் அவர் இதர துயரங்களையெல்லாம் மறந்தார். இளவரசி குமரியும், தந்தையிடம் அளவற்ற அன்புகொண்டிருந்தாள். வயது ஆக, ஆக இளவரசி குமரியின் அழகும், அறிவும் ஒப்புயர்வற்று விளங்கியது. அவள் அழகைக் கண்டு வியப்படையதாவர்கள் கிடையாது. அழகுக்கு ஏற்ற அருமையான குணம்.... இளவரசியென்ற பெருமை கிடையாது. எல்லோரிடமும் அன்பாகப் பழகுவாள். ஏழைகளிடம் இரக்கம் காட்டுவாள். ஏழைகளைத் தேடி உதவுவாள். அவள் அருங்குணங்களைக் கண்டு சேரதேச மக்கள் குமரியை ஒரு தெய்வமாகக் கொண்டாடினர். அரசியலிலும், இளவரசி பங்கெடுத்துக்கொண்டாள். அவள் தந்தைக்கு அடிக்கடி ஆலோசனை கூறுவாள். ஆகவே, மந்திரிகளும், சேனாதிபதிகளும், இளவரசியின் ஆலோசனையைக் கேட்பதுண்டு. மன்னர் இல்லாத காலங்களில் இளவரசியே அரசாங்கக் காரியங்களைக் கவனித்து வந்தாளென்றால், அவள் சாதுர்யத்தையும்' அறிவையும், என்னென்று சொல்லுவது. தெய்வத்தினிடம் பக்திகொண்டவள்.

இளவரசி குமாரிக்கு சுமார் 17 வயதிருக்கும். அழகே உருவெடுத்தவள். தங்கத்தை உருக்கிவிட்டு வார்த்ததுபோல் இருப்பாள். சிவந்த வாயும், கருணை பொங்கும் கண்களும், பார்ப்போரை அப்படியே பரவசப்படுத்திவிடும். இனிய, அன்புததும்பும் குரல்; அழகுக்கேற்ற வீரமும்; உறுதியும் வாய்ந்தவள் சேர தேசததின சக்தி, பெண்தெய்வம் இளவரசி குமாரி என்று சுருங்கச் சொல்லிவிடலாம். இந்தக் குமரியையே, பாண்டிய நாட்டின் இளவரசன் குலசேகரனுக்கு மணமுடித்து வைக்க கற்பூரன விரும்பினான். அதே நோக்கத்துடன்தான் அவன் கன்னியாகுமரிக்குப் புறப்பட்டுச் சென்றான். அவன் பாணடிய நாட்டின் ஒற்றர்படைத் தலைவனென்று காட்டிக்கொள்ளவில்லை. ஒரு நாடோடிபோல் வேஷம் போட்டுக்கொண்டு குமரி வந்துசேர்ந்தான். ஒற்றர் வேலைகளில் கைதேர்ந்த கற்பூரன் அங்காங்கு உளவு அறிந்து கொண்டே வந்தான். அவன் பாட்டியிடம் ஏற்கெனவே, சேர தேசத்தைப் பற்றி சில உளவுகள் அறிந்திருந்தால் அந்த இடங்களுக்குச் சென்று, குறிப்பிட்ட ஆட்களிடம உறவு வைத்துக் கொண்டான். சேரமன்னரை நேரில் காண்பதற்குமுன் இளவரசி குமாரியைக் காண அவன் மனம் துடித்தது. அவளைப்பற்றிப் பிரமாதமாக கேள்விப்பட்டிருந்தான். ஆனால, இளவரசியை எவ்வாறு சந்திப்பது? எங்கே காண்பது? இதற்காக இரவு பகலாக யோசனை போட்டுக்கொண்டிருந்தான். அவனுக்குச் சரியான சந்தர்ப்பம் கிடைக்கும்வரையில் காத்திருந்தான்.

ஒரு நாள் சேரதேச இளவரசி குமாரி, குமரியம்மன் தெரிசனத்துக்காகப் புறப்பட்டாள். இளவரசி அங்கு போவது எப்பொழுதும் ரகசியமாகவே இருக்கும். குறிப்பிட்ட இரண்டொரு சேடிகளைத் தவிர, இளவரசி வேறு யாரையும் அழைத்துக்கொண்டு போவதில்லை. ஆடம்பரத்தையும் அவள் விரும்புவதில்லை. இளவரசிக்கு அந்தரங்கத் தோழி ஒருவள். அவள் பெயர் ராஜம்மாள். அவளை ராஜம் என்றே இளவரசி அழைப்பது வழக்கம். ராஜம் என்ற பெண் சேரதேச ராணுவத் தளபதியின் மகள். அழகிலும்; குணத்திலும், வீரத்திலும், இளவரசிக்கி ஒத்திருப்பாள். மற்றவள் ராணி; இவளிடமும் இளவரசிக்கு அத்யந்த அன்புண்டு அழகிலும்; அறிவிலும், குணத்திலும், மற்றவர்களுடன் போட்டி போடக்கூடியவள். இவள் சேரதேச முதன் மந்திரியின் மகள். இளவரசியுடன் இவர்கள் தங்கி இருந்தார்கள். இவர்கள் எல்லோரையும் சேர மன்னன், அவர் குழந்தைகளைப் போலவே அன்பாகப் பாராட்டி வந்தார். இந்த மூவரும் இணைபிரியாத தோழிகளாக இருந்தனர். இளவரசி எங்கு சென்றாலும், இவர்களுடனே செல்லுவார்கள். ஆகவே, இந்த இரு தோழிகளுடன், இளவரசி குமாரி, குமரியம்மன் கோவிலுக்குப் புறப்பட்டுச் சென்றாள். அம்மனைப் பூபணிந்து, மாலைசூட்டிய பின், அம்மன் முன் நின்று மௌனமாகப் பிரார்த்தித்தாள். அவளையும் அறியாமலே, ஆனந்தக் கண்ணீர் வடித்தாள், அவள் ஆனந்தத்துக்கும், கண்ணீருக்கும் காரணம் என்னவென்பதை அவளாலும் அறிந்து கொள்ள முடியவில்லை. சிறிது நேரம் மௌனமாக நின்றாள். கையால் கண்ணீரைத் துடைத்துவிட்டு, அம்மனை ஏறெடுத்துப் பார்த்தாள். என்றுமில்லாத, ஒரு பொலிவை அம்மன் முகத்தில் கண்டாள்; ஆனந்தித்தாள், இதற்கு ஏதேனும் காரணமிருக்கக் கூடுமென்று எண்ணினாள். சேரதேசத்தின் நல்ல எதிர்காலத்தின் அறிகுறியாக இது இருக்கலாமென்று எண்ணினாள். மீண்டும் அம்மனைப் பணிந்தாள். அக்களிப்புடன் அங்கிருந்து புறப்படத்திரும்பினாள். இளவரசிக்குச் சற்றுத்தூரத்தில், ஒரு தூணுக்கருகில், அழகான வாலிபன் ஒருவன அம்மனைப் பக்தியுடன் பார்ததுப் பிரார்த்தித்துக் கொண்டிருப்பதைக் கண்டு பிரமித்து நின்றாள்! அவன் அழகும், ஒய்யாரத் தோற்றமும், கம்பீரப் பார்வையும் குமரியின் மனதை அப்படியே கொள்ளை கொண்டுவிட்டன! இளவரசி அவனையே உற்று நோக்கினாள். அவள் உள்ளம் துடித்தது, கால்கள் தள்ளாடின. ஒருவாறு சமாளித்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டாள். கோவிலுக்கு வெளியில் சென்றதும், மீண்டும், அந்த இளைஞனைக் காணத் திரும்பிப்பார்த்தாள் அதற்குள் அந்த இளைஞன் எப்படியோ அங்கிருந்து மாயமாக மறைந்து விட்டான்!

(தொடரும்)

Edited, Printed and Published by, P. ALBIN FERNANDO at the "TAMIL MANI" Press, 21, Sembudoss St, G. T. Madras